# ஹிந்துமத வினா விடை

OFFICE OF THE SPECIAL OFFICER FOR ARCHAEOLOGY
29 OCT 1966

TNSDA
00268

ஸ்ரீ P. S. ஸுப்ரமண்ய சாஸ்திரிகள்

உ

# ஹிந்துமத வினு விடை

ஸ்ரீ P. S. ஸுப்ரமண்ய சாஸ்திரிகள் M. A., PH. D.,
அவர்களால் எழுதப்பட்டு

ஸ்ரீ அமரபாரதி பரீக்ஷாஸமிதியாரால்

ஸ்ரீ காஞ்சி காமகோடிபீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திரஸரஸ்வதி ஸ்வாமிகள்
அவர்களின் பீடாரோஹண பொன்விழா வைபவத்தை
முன்னிட்டு வெளியிடப்பட்டது.

OFFICE OF THE SPECIAL OFFICER FOR ...
268
29 OCT 1966

திருச்சிறுப்பள்ளி யுனைடெட் பிரிண்டர்ஸ் லிமிடெட்,
திருச்சிராப்பள்ளி-2

1957

॥ श्रीः ॥

॥ श्रीचन्द्रमौळीश्वर ॥

स्वस्ति श्रीमदखिलभूमण्डलालङ्कारत्रयस्त्रिंशत्कोटिदेवतासेवित - श्री-कामाक्षीदेवीसनाथ - श्रीमदेकाम्रनाथ - श्रीमहादेवीसनाथ - श्रीहस्तिगिरिनाथ-साक्षात्कारपरमाधिष्ठानसत्यव्रतनामाङ्कितकाञ्चीदिव्यक्षेत्रे शारदामठसुस्थिता-नाम्, अतुलितसुधारसमाधुर्यकमलासनकामिनीधम्मिल्लसम्फुल्लमल्लिकामालिका-निष्यन्दमकरन्दझरीसौवस्तिकवाङ्निगुम्भविजृम्भणानन्दतुन्दिलितमनीषिमण्डलानाम्, अनवरताद्वैतविद्याविनोदरसिकानां, निरन्तरालङ्कृतीकृतशान्ति-दान्तिभूम्नां, सकलभुवनचक्रप्रतिष्ठापकश्रीचक्रप्रतिष्ठाविख्यातयशोऽलंकृतानां, निखिलपाषण्डषण्डकण्टकोद्घाटनेन विशदीकृतवेदवेदान्तमार्गषण्मतप्रतिष्ठापका-चार्याणां, श्रीमत्परमहंसपरिव्राजकाचार्यवर्य - श्रीजगद्गुरु - श्रीमच्छङ्कर-भगवत्पादाचार्याणाम्, अधिष्ठाने सिंहासनाभिषिक्त - श्रीमन्महादेवेन्द्र-सरस्वतीसंयमीन्द्राणाम् अन्तेवासिवर्य - **श्रीमच्चन्द्रशेखरेन्द्रसरस्वती-श्रीपादैः** श्रीवाणीत्रिवेणीप्रयागविरुदाङ्कितेन पिन्नङ्गुडिग्रामाभिजनेन सुब्रह्मण्य-शास्त्रिणा ग्रथितं हिन्दुमतप्रश्नोत्तराख्यं निबन्धमधिकृत्य क्रियते नारायण-स्मृतिः ॥

अस्मिंश्च निबन्धे वेदविभागः तदनुसारेण धर्मसूत्रगृह्यसूत्रविभागः वेदाङ्गस्वरूपं च सम्यङ् निरूप्यते । वर्णाश्रमविभागः तमनुसृत्य सामान्य-धर्माः विशेषधर्माश्च विविच्यन्ते । तत्र द्राविडदेशीयप्राचीनाभिज्ञप्रबन्ध-संवादोऽपि प्रदर्शितः । अयं निबन्धः धर्मतत्त्वविविदिषूणामनुतिष्ठासताञ्चो-पकाराय भवति । अस्य ग्रन्थस्य प्रचारे भगवतश्चन्द्रमौळीश्वरस्य निरर्गळः अनुग्रहः प्रसरतादित्याशास्महे ॥

विजययात्रास्थानम्
चेन्नसमुद्रम्
दुर्मुखफाल्गुनशुक्लनवमी

**नारायणस्मृतिः ।**

# முகவுரை


ஸ்ரீகாஞ்சீகாமகோடிபீடத்தை ஐம்பது ஆண்டுகளாக அலங்கரித்துவரும் ஸ்ரீஜகத்குரு ஆசார்யாள் அவர்களின் ஆக்ஞைப்படி பொன்விழாவின் அறிகுறியாக இச்சிறுநூல் இயற்றப்பட்டது. இவ்வாறு ஆக்ஞை செய்ததற்கு அவர்கள்பால் எனது அனந்தகோடிப்ரணாமங்கள். திருச்சிராப்பள்ளி அமரபாரதி நிர்வாக கமிட்டியார் மகிழ்ச்சியுடன் இதனைப் பதிப்பித்தனர். இந்நூலுள் உள்ள குற்றங்குறைகளை அறிவிப்போர்க்கு என் அன்பார்ந்த வந்தனம்.

*திருச்சிராப்பள்ளி*
*15—5—57*

(பின்னங்குடி) **ஸுப்ரமண்ய சாஸ்திரி**



ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு
ஸ்ரீ சந்திரசேகரேந்திரஸரஸ்வதி ஸ்வாமிகள்



பிரதம சிஷ்யர்
ஸ்ரீ ஜயேந்திரஸரஸ்வதி ஸ்வாமிகள்

# ஹிந்துமத - வினா - விடை

## அத்தியாயம்—1

### வேதங்களும் அவற்றின் பிரிவுகளும்

1. ஹிந்துமதம் என்பது யாது?

வேதங்களிற் கூறப்பட்ட கொள்கைகளைக் கொண்டது ஹிந்துமதம் ஆகும்.

2. அவ்வாறாயின் ஹிந்துமதம் என்ற சொல் பொருந்துமா?

ஏன்? பொருந்தாதா?

3. ஹிந்துமதம் என்பது ஹிந்துக்கள் (இந்தியாவிலுள்ள மக்கள்) கைக்கொண்ட மதம் என்றல்லவோ பொருள் படும்.

4. அப்பொருள்பட்டால் வருங் குற்றம் யாது?

புத்தமதம், ஜைனமதம் போன்ற மதங்களும் அச் சொல்லாற் கொள்ளப்படுமே. அவை வேதங்களைப் பிரமாணம் ஆகக் கொள்ளவில்லையே. அன்றியும் இந் தியாவிற்கு வெளியில் உள்ள நாட்டார் யாரேனும் அக் கொள்கைகளைக்கொள்ளின் அவருடைய மதம் ஹிந்து மதம் ஆகாதே.

ஆம். நீர் கூறுவது உண்மையே. அச்சொல் நேரி தன்று. வைதிகமதம் என்றே சொல்வது தான் பொருந் தும். ஆயினும் வழக்கில் ஹிந்துமதம் என்ற சொல்லே வைதிகமதம் என்பதைக் குறிக்க வந்துவிட்டது. அத னையே நாமும் ஆள்வோம்.

5. மதம் என்ற சொற்குப் பொருள் யாது?

கொள்கை என்பது பொருள்.

6. வைதிகமதம் என்ற தொகைச்சொற்குப் பொருள் யாது?

வேதங்களிற் கூறப்பட்ட கொள்கைகள்.

7. வேதம் என்றால் என்ன?

ருஷிகள் தமது ஞானக்கண்ணால் கண்ட சொல்லுருவம் என்பதை வேதம் என்பர்.

8. ருஷி என்பதற்குப் பொருள் யாது?

ஞானக்கண்ணால் காணும் ஆற்றல் வாய்ந்தவர் ருஷி எனப்படுவர். அச்சொல் காண்டல் என்ற பொருள் கொண்ட த்ருச்[1] என்ற தாதுவிலிருந்து வந்தது என்பர். அக்காரணம் பற்றியே ருஷி: பச்யகோ பவதி[2] என்ற வழக்கும் பிறந்தது.

9. அவர்கள் அவ்வாறு காண்பதற்கு ஆற்றல் கொடுத்தவர் யார்?

கடவுளே.

10. வேதங்கள் எத்தனை வகைப்படும்?

நான்கு வகைப்படும்.

11. அவை யாவை?

ருக்வேதம், யஜுர்வேதம், ஸாமவேதம், அதர்வ வேதம் என்பன.

12. ருக்வேதம் என்ற பெயர் வந்ததற்குக் காரணம் என்ன?

அவ்வேதத்தின் ஸம்ஹிதாபாகம் பெரும்பாலும் ருக் ரூபமாய் அமைந்துள்ளது.

13. ருக் என்றால் என்ன?

ருக் என்பது வைதிகச்செய்யுள் ஆகும்.

14. செய்யுள் என்று கூறினால் போதாதா? வைதிகச் செய்யுள் என ஏன் கூறவேண்டும்?

பிற்காலத்தில் இயற்றப்பட்ட வடமொழி நூல்களில் உள்ள செய்யுளைப் பத்யம் என்பர். வேதங்களில் உள்ள செய்யுளை ருக் என்பர். அக்காரணம்பற்றியே அவ்வாறு கூறவேண்டியதாயிற்று.

15. ஸம்ஹிதை என்பது எதனைக் குறிக்கும்?

தொகுக்கப்பட்ட மந்திரங்களின் தொகுதியைக் குறிக்கும்.

1. दृश् (ऋषिर्दर्शनात्) 2. ऋषिः पश्यको भवति

16. விளக்கமாய்க் கூற விரும்புகிறேன்.

ஒவ்வொரு வேதத்திலும் பல மந்திரங்கள் இருக்கின்றன. அவை பல ருஷிகளாற் காணப்பட்டு அவரவருடைய வமிசத்தில் வழங்கப்பட்டன. பின்னர் அவை தொகுக்கப்பட்டன. அத்தொகுக்கப்பட்ட மந்திரங்கள் ஸம்ஹிதை எனப்படும்.

17. மந்திரம் என்பது யாது?

அதன் இலக்கணம் தெளிவாய்க் கூறுதல் இயலாது. யாகங்களிற் பங்கெடுத்துக்கொள்ளும் ருத்விக்குகளிடமிருந்தே இது மந்திரம் இது மந்திரமன்று என அறிதல் வேண்டும் என்பர் பெரியோர். ஆயினும் பெரும்பாலும் மந்திரம் என்பது தேவதைகளைக் கூப்பிடவும், அவரைத் துதிக்கவும், அவரை வேண்டிக்கொள்ளவும் பயன்படும்.

18. தேவதைகள் யார்?

தேவலோகத்தில் வசிப்பவர் தேவதைகள் எனச் சிலர் கருதுவர். அது தவறாகும். சில தேவதைகள் ஸுவர்லோகத்திலும், சிலர் புவர்லோகத்திலும் சிலர் பூலோகத்திலும் சிலர் மூவுலகங்களிலும் வசிப்பர் என நிருக்தம் முதலிய நூல்கள் கூறும்.

19. அவ்வாறாயின் அவர்கள் யார்?

மக்களின் நல்வாழ்வைக் குறித்து அவர்கட்கு வேண்டியவற்றை அளிப்பவர் என்னலாம்.

20. அவர்கள் சிலரைக் கூறி அவர் மக்கட்கு எவ்வாறு பயன்படுகின்றனர் எனக் கூறுமின்.

சிறப்பாக அக்னி, வாயு, இந்திரன், வருணன் முதலியோரைக் கூறலாம். அவருள் அக்னி, மக்கட்குச் செல்வத்தையும், புஷ்டியையும், கீர்த்தியையும், நற்புதல்வரையும் கொடுக்கின்றார் என வேதம் கூறும்.

21. எங்கு அவ்வாறு கூறப்பட்டது?

ருக்வேதம் முதல் ஸூக்தத்தில்.

22. ஸூக்தம் என்றால் என்ன?

பல ருக்குக்களின் தொகுதியை ஸூக்தம் என்பர்.

23. அக்னி மக்கட்கு எவ்வாறு செல்வத்தைத் தருகின்றார்?

நிலத்தில் விளையும் தான்யங்களே செல்வத்திற்குக் காரணம் ஆகும். வெப்பம் இல்லையேல், நிலம் நன்கு விளையாது.

24. புஷ்டிக்கு அக்னி எவ்வாறு காரணம் ஆகும்?

மக்கள் உண்ணும் உணவு ஜீரணமானால் தான் உடலுக்குப் புஷ்டி வரும். வயிற்றுத்தீ மந்தித்தால் உணவு ஜீர்ணமாகாது.

25. நற்புதல்வர் பிறத்தற்கு அக்னி எவ்வாறு காரணம் ஆகும்?

தகப்பன் உடலிற் புஷ்டி இருந்தால் தான் நன்மக்கள் பிறத்தல் கூடும்.

26. கீர்த்திக்கு அக்னி எவ்வாறு காரணம் ஆகும்?

ஒருவற்குச் செல்வம், புஷ்டி, நன்மக்கள் இவரால் தான் கீர்த்தி உண்டாகும். அவற்றிற்குக் காரணமான அக்னி கீர்த்திக்குங் காரணம் ஆகும்.

27. அக்னிதேவதை எவ்வுலகில் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது?

பூலோகத்தில் தான். ஆயினும் புவர்லோகத்தில் மின்னலாய்த் தோன்றுவதும், ஸுவர்லோகத்தில் ஸூர்யனாய்த் தோன்றுவதும் அக்னியே ஆகும். அக்காரணம் பற்றி அக்கினி மூவுலகத்திலும் காணப்படும் தேவதை என்று கூறுவதும் உண்டு.

28. அக்னி, மின்னல் இவை யெல்லாம் உயிரற்றன வல்லவா?

அவற்றின் அபிமானிதேவதை உயிருள்ளதே.

29. புவர்லோகத்தில் உள்ள தேவதைகளுட் சிலரைக் கூறுமின்.

வாயு, இந்திரன்.

30. வாயுவால் யாது பயன்?

வாயுவின்றேல் மக்கள் உயிரோடு இருத்தல் முடியாது.

31. இந்திரனால் மக்கட்கு என்ன பிரயோஜனம்?

இந்திரனால் தான் மழை பெய்கின்றது.

32. ஸுவர்லோகத்து தேவதைகள் யார்?

அவர் பலர் ஆவர். அவருள் வருணன் முதலியோர் சிறந்தவர்.

33. வருணன் யார் ?

நீர்க்கு அபிமானி தேவதை வருணன் எனப் பிற்காலத்து நூல் கூறும். ருக்வேதத்தில் வருணனுக்குப் பல்வகை ஆற்றல்கள் கூறப்பட்டுள்ளன. அவரது ஆணைப்படியே சூரியன் தன் வழியிற் சென்று பிரகாசிப்பான் ; சந்திரனும் நக்ஷத்திரங்களும் இரவிற் பிரகாசிக்கும். நதிகள் ஒரே வகையாக ஓடும். பறவைகள், கப்பல்கள் இவற்றின் கதியை அவரே அறிவர். பிறர் செய்த செயலையும் செய்யப்போகுஞ் செயலையும் அவர் அறிவர். பூமியையும் ஸுவர்லோகத்தையும் இடம் பிறழாதபடி அவரே செய்தனர். யாகம் செய்வோனாலும் அவன் முன்னோராலும் செய்யப்பட்ட பாவத்தை அவர் நீக்குவர். அறியாது பாவஞ் செய்தேன் எனக் கூறுவோரை அவர் மன்னிப்பர். நீர்க்கு அரசனும் அவரே.

34. தேவதைகட்கும் மக்கட்கும் தொடர்பு எவ்வாறு ?

மக்கள் யாகம் முதலியவற்றைச் செய்து தேவதைகட்கு ஹவிஸ்ரூபமான உணவை அளிக்கவேண்டும். அவர் மக்கட்கு வேண்டியவற்றைச் செய்வர்.

35. இவ்வாறு அவர்களின் தொடர்பு என்பது எதனால் அறியப்படும் ?

அக்னியே ! நீ யாகம் செய்பவனுக்குச் செய்யும் நன்மையெல்லாம் உனக்கே என ருக்வேதம் முதல் ஸூக்தம் கூறுகின்றது. தேவதைகளும் மனிதர்களும் ஒருவர்க்கொருவர் உதவுகின்றனர் எனப் பகவத்கீதை கூறுகின்றது [1].

36. இன்னும் வேறு தேவதைகள் உண்டோ ?

உண்டு. ருத்திரன்கூட ருக்வேதத்தில் ஒரு தேவதையாகவே வருணிக்கப்படுகின்றனர். அவர் சிறந்த வைத்தியர் என்றும், அவருடைய குளிர்ந்த கையால் தொட்டாலே நோய் தீரும் என்றும், ஜ்வரத்தையும் கிருமிகளால் உண்டாகும் வியாதிகளையும் பகைவர்களையும் பாவங்களையும் போக்க அவர்க்கு ஆற்றல் உண்டு என்றும், நோய் வாராமல் அவர் தடுப்பர் என்றும் அங்கு வருணிக்கப்பட்டிருக்கின்றது.

1. देवान्भावयतानेन ते देवा भावयन्तु वः ।
परस्परं भावयन्तः श्रेयः परमवाप्स्यथ ॥
इष्टान् भोगान् हि वो देवा दास्यन्ते यज्ञभाविताः ।
तैर्दत्तानप्रदायैभ्यो यो भुङ्क्ते स्तेन एव सः ॥ (3, 11-12.)

37. அதனால்தான் ஜ்வரம் முதலியவற்றால் பீடிக்கப்பட்ட போது பெரியோர் ருத்ரஜபம் செய்விக்கின்றனரோ ?

ஆம். ருத்ரஜபத்தை நம்பிக்கையுடன் ஒவ்வொரு நாளும் அதற்குத் தக்க நியமத்துடன் செய்தால், ஜ்வரம் முதலியன வாரா என்பது திண்ணம், வந்தாலும் விரைவில் தீரும்.

38. புண், முட்டுநெகிழ்தல், எலும்புமுறிகை இவற்றை நீக்க யாரை உபாஸிக்கவேண்டும் ?

அச்வின்தேவதைகளை உபாஸிக்கவேண்டும்.

39. அச்வினிதேவதைகள் என்றல்லவோ உலகில் வழக்கு இருக்கிறது !

அது தவறு. அச்வினீ என்பவள் அவர்க்கு மனைவி என ருக்வேதம் கூறும்.

40. அவர்கள் எத்தனைபேர் ?

அவர்கள் இரட்டையர்.

41. சிறந்த தேவதைகளுள் வேறு எவரேனும் உண்டோ ?

உண்டு. ஸோமன் என்ற தேவதை. அத்தேவதையைக் குறித்தே ஸோமயாகம், அதனால் இந்திரனுக்கு வலிமை ஏற்படும். ஸவிதா முதலியோரும் உளர்.

42. ருக்வேதம் என்ற பெயர் வந்ததற்குக் காரணம் யாது என்ற வினவிலிருந்து இவ்வளவுதூரம் வினாக்களும் விடைகளும் பிறந்தன. யஜுர்வேதம் என்ற பெயர் வந்ததற்குக் காரணம் யாது ?

அவ்வேதத்தின் ஸம்ஹிதை பெரும்பாலும் யஜுஸ்ஸால் ஆக்கப்பட்டது.

43. யஜுஸ் என்றால் என்ன ?

வசனநடையிலுள்ள வேதத்தொடர்.

44. யஜுர்வேதம் சிறப்பாய் இரண்டு வகைப்படுமோ ?

ஆம். கிருஷ்ணயஜுர்வேதம், சுக்லயஜுர்வேதம் என இருவகைப்படும்.

45. கிருஷ்ணயஜுர்வேதம் என்பது யாது ?

கிருஷ்ணயஜுர்வேதஸம்ஹிதையில் மந்திரங்களும் பிராம்மணங்களும் கலந்துள்ளன.

46. பிராம்மணம் என்பது யாது?

மந்திரங்களின் பொருள்களையும், அவற்றை வழங்க வேண்டிய ரீதியையும், அவற்றை வழங்குதலால் உண்டாகும் பயனையும், அவற்றைத் தவறாக வழங்கினால் உண்டாகும் கெடுதியையும் இவைபோன்றவற்றையும் விளக்கமாகக் கூறுவது பிராம்மணம் ஆகும்.

47. மந்திரங்களைத் தவறிக் கூறின் தீங்கு நிகழும் என்றீரே. அதனைப்பற்றி விளக்கமாய்க் கூறுமின்.

மந்திரங்களைத் தவறாய் ஒலித்தல் பல்வகைப்படும் :— ஸ்வரத்தில் தவறு நிகழலாம்; எழுத்துக்கள் மாறுபடலாம்; அப்பொழுது அச்சொற்கள் எப்பொருளைக் குறிக்கவேண்டுமோ அதனைக் குறிக்கா. அதனால் தீங்கு நேரிடும்.

48. உதாரணங்கூறி விளக்குமின்.

வேதங்களிலே கூறப்பட்ட உதாரணங்களைக் கூறுகின்றேன். ஸ்வரதோஷத்தால் வந்த தீங்கைக் காட்டும் இதிஹாஸம் :—த்வஷ்டா என்பவர் இந்திரனைக் கொல்ல ஒரு மகன் பிறக்கவேண்டும் என்று ஒரு யாகம் செய்தனர். ப்ரதானஹோமம் செய்யும்போது இந்த்ரசத்ருர் வர்த்தஸ்வ என்றனர். இந்த்ரசத்ரு : என்ற பதத்தில் ரு என்பதை உயர்த்தியும் இ, ர, ச இவற்றைத் தாழ்த்தியும் ஒலித்தால், அதற்கு இந்திரனைக் கொல்லுபவன் என்ற பொருள் தோன்றும். இ என்பதனையே உயர்த்திப் பின்வருவனவற்றை அதற்குத் தக்கவாறே ஒலித்தால், அதற்கு இந்திரன் யாரைக் கொல்வானோ அவன் எனப் பொருள் தோன்றும். த்வஷ்டா அவசரத்தில் பிற்கூறப்பட்ட முறையில் ஒலித்தனர். அவருக்கு இந்திரனாற் கொல்லப்படும் மகன் பிறந்தான். அவ்வாறு யாகம் செய்தது த்வஷ்டா எனத் தைத்திரியஸம்ஹிதையில் உள்ளது. அவர் பெயர் விருத்ரன் என வேறு சாகைகளில் உள்ளது எனச் சிலர் கூறுவர்.

49. இவ்வாறு எங்குக் கூறப்பட்டுள்ளது?

பாணினிய சிக்ஷையில்

> மந்த்ரோ ஹீந : ஸ்வரதோ வர்ணதோ வா
> மித்யாப்ர யுக்தோ ந தமர்த்தம் ஆஹ,
> ஸ வாக்வஜ்ரோ யஜமாநம் ஹிநஸ்தி
> யதேந்த்ர சத்ரு : ஸ்வரதோ பராதாத்.[1]

1. मन्त्रो हीनः स्वरतो वर्णतो वा मिथ्याप्रयुक्तो न तमर्थमाह ।
स वाग्वज्रो यजमानं हिनस्ति यथेन्द्रशत्रुः स्वरतोऽपराधात् ॥

என உள்ளது. மந்த்ரோ ஹீந: என்பதை மாற்றி துஷ்ட: சப்த: எனப் பதஞ்சலி பகவான் மஹாபாஷ்யத்திற் கூறியுள்ளார்.

50. மந்திரங்களை நமக்காகப் பிறர் தவறாக ஒலித்தாலும் அதனால் உண்டாகும் பயன் நமக்குத் தானோ?

அதற்கு என்ன ஐயம்? நமக்குத்தான். அதனை அறியாது மக்கள் இருக்கின்றனர். மந்திரங்களைத் தவறி ஒலித்தால், அதனால் உண்டாகும் தீங்கு புரோஹிதரர் முதலியோர்க்கு என எண்ணுகின்றனர். அது தவறாகும்.

51. எழுத்தை மாற்றி ஒலித்தற்கு ஓர் உதாரணங்கூறுமின்.

தேஅஸுரா: ஹேலயோ ஹேலய இதி குர்வந்த: பராபபூவு:[1]

என மஹாபாஷ்யகாரர் உதாரணங் கூறுகின்றனர். யாகத்தில் ஹேஅரய: எனக் கூறவேண்டியிருக்க ர என்ற எழுத்திற்குப் பிரதியாக ல என்ற எழுத்தை ஒலித்தும், அகரத்தை ஒலிக்காமலும் இருந்தனர். அதனால் தீங்கு வந்தது.

52. சுக்லயஜுர்வேதம் என்பது யாது?

சுக்லயஜுர்வேதஸம்ஹிதையில் மந்த்ரங்களே உள்ளன. பிராம்மணங்களின் கலப்பே இல்லை.

53. ஸாமவேதம் என்ற பெயர் வந்ததற்குக் காரணம் யாது?

ஸாம என்ற சொற்குக் கீதி[2] (பாட்டு) என்பது பொருள். எவ்வேதத்தின் ஸம்ஹிதையில் மந்திரங்கள் பெரும்பாலும் ஸாமக்களாகவே இருக்கின்றனவோ அதற்கு ஸாமவேதம் எனப் பெயர்.

54. ருக் கானம் பண்ணப்பட்டிருக்கின்றதா, யஜுஸ் கானம் பண்ணப்பட்டிருக்கின்றதா?

ருக்குக்கள் தான் கானம் பண்ணப்பட்டிருக்கின்றன.

55. அவ்வாறாயின் ஸாமாக்களுக்கு அடிப்படையான ருக்குக்களையும் அவர் அத்யயனஞ்செய்தல் அவசியம் எனத் தோன்றுகின்றது.

ஆம். அவற்றை அத்யயனம் செய்தல் அவசியந்தான்.

1. तेऽसुरा हेलयो हेलयो इति कुर्वन्तः पराबभूवुः
2. गीतिषु सामाख्या

56. அதர்வவேதம் என்ற பெயர்க்குக் காரணம் யாது?

அதர்வா முதலிய ருஷிகளாற் காணப்பட்டமையான், அதற்கு அப்பெயர் வந்தது. இப்பெயர் முண்டகோப நிஷத், மஹாபாரதம் முதலியவற்றிற் காணப்படுகின்றது. அதர்வாங்கிரஸ: என்ற பெயர் ஆச்வலாயன கிருஹ்ய ஸூத்ரத்திலும், அதர்வணவேதம் எனச் சாந்தோக்யோபநிஷத்திலும், ப்ருகுவிஸ்தர;, ப்ருக்வங்கிரஸ: என்ற பெயர்கள் ருக்வேதஸம்ஹிதை, அதர்வ வேதஸம்ஹிதை இவற்றிலும் காணப்படுகின்றன.

57. அன்பரீர்! இங்கு ஓர் ஐயம்.

அஃது யாது?

58. வேதங்கள் நான்கு வகைப்படும் என நீங்கள் கூறினீர். த்ரயீ என்ற வழக்கு இருக்கின்றதே. அஃது எவ்வாறு பொருந்தும்?

59. இவ்வினா சிறந்ததுதான். த்ரயீ என்பது மூன்று வேதங்களைத் தான் குறிக்கும். அது ருக்வேதம், யஜுர்வேதம், ஸாமவேதம் இம்மூன்றனையுமே குறித்தது என்பது ஐதரேய-பிராம்மணத்தால் அறியப்படுகின்றது.

60. அங்கு யாது உணர்த்தப்பட்டது? விளக்கமாய்க் கூறுமின்.

மூன்று வேதங்கள் பிறந்தன. ருக்வேதம் அக்னியிடமிருந்தும், யஜுர்வேதம் வாயுவிடமிருந்தும், ஸாமவேதம் ஆதித்யரிடமிருந்தும் உண்டாயின. ருக்வேதத்தைக் கொண்டு ஹோதாவும், யஜுர்வேதத்தைக் கொண்டு அத்வர்யுவும், ஸாமவேதத்தைக் கொண்டு உத்காதாவும், மூன்று வேதங்களைக் கொண்டு பிரும்மாவும் அவரவர் செயல்களை யாகங்களிற் செய்தனர். த்ரயீ என்ற சொல்லும் அங்குள்ளது.[1]

61. ஹோதா என்பவர் யார்?

யாகங்களில் தேவதைகளைக் குறித்து மந்திரங்களைக் கூறுபவர்.

62. அத்வர்யு என்பவர் யார்?

யாகங்களில் அக்னிகளை வளர்த்தும், ஹவிஸ்ஸுக்களைத் தயாரித்தும், அவற்றை அக்னியில் ஹோமஞ் செய்தும், மற்றுமுள்ள கார்யங்களையுஞ் செய்பவர்.

1. 5, 31, 33.

63. உத்காதா என்பவர் யார்?

தேவதைகட்கு ஸ்தோத்ரமாயுள்ள ஸாமாக்களைக் கானம் செய்பவர்.

64. பிரும்மா என்பவர் யார்?

முன் கூறப்பட்ட மூவரும் அவரவரது கடமைகளை நன்றாய்ச் செய்கின்றனரா எனக் கவனிப்பவர்.

65. அவ்வாறாயின் வேதங்கள் நான்கு என எவ்வாறு கூறலாம்?

மக்கள் தங்களுடைய கர்மாக்களை இரண்டு வகைப்பட்ட அக்னிகளிற் செய்தனர். அரணியைக் கடைந்து எடுக்கப்பட்ட அக்னியிலேயே யாகங்களைச் செய்தனர். அந்த அக்னிக்கு ச்ரௌதாக்னி எனப் பெயர். மனைவியைக் கலியாணம் செய்துகொள்ளும்போது ஒருவிதமான அக்னியைச் சம்பாதிக்கின்றனர். அந்த அக்னிக்கு க்ருஹ்யாக்னி எனப் பெயர். அதனில் தங்கட்குப் பிறக்கும் மக்களைக் குறித்து கர்ப்பாதானம், ஜாதகர்ம, நாமகரணம், அன்னப்ராசனம், சௌளம், உபநயனம் என்ற கர்மாக்களையும், தாங்கள் செய்யவேண்டிய ச்ராத்தம் முதலிய கர்மாக்களையும், தாங்கள் இறந்தபின்னர் தங்கள் சரீரத்தை தஹனஞ் செய்யும் கர்மாவையும் செய்கின்றனர். யாகங்களில் ருக்வேதம், யஜுர்வேதம், ஸாமவேதம் இம்மூன்று வேதங்களே வழங்கப்பட்டமையான் த்ரயீ என்ற வழக்கு வந்திருக்கலாம். க்ருஹ்யாக்னியில் செய்யவேண்டியவற்றை அதர்வவேதத்திற் கூறப்பட்டமையான், அதனை முற்காலத்தில் வேதமாகக் கூறப்படவில்லைபோலும். யாகங்களைக் குற்றமறச் செய்விக்கும் பொறுப்பு பிரும்மாவினிடம் இருத்தலின் யாகங்களை வெளியிலிருந்து பிறர் கெடுக்காதவாறு செய்தலும், யாகத்தில் யாருக்கேனும் நோய் வரின் அவற்றைப் போக்குதலும், பிரும்மாவின் பொறுப்பாகும். அவற்றைக் கவனிக்க அவர்க்கு அதர்வ மந்திரங்களின் அறிவு அவசியம். நான்கு வேதங்களையும் செவ்வனே அறிதல் பலர்க்கு இயலாமையானும், ருக்வேதம், யஜுர்வேதம், ஸாமவேதம் அவ்வவற்றில் தனிப்புலமை வாய்ந்தவராக ஹோதா, அத்வர்யு, உத்காதா இவர் இருந்திருத்தலானும், பிரும்மாவிற்கு அதர்வவேதத்தில் தனிப்புலமையே அவசியம் ஆயிற்று. வேதங்களைக் கணக்கிடும்போது அவற்றை நான்காகவே கணக்கிட்டிருக்கலாம்.

66. நீங்கள் கூறியவற்றிலிருந்து ரிருஹ்யாக்னியிற் செய்ய வேண்டிய கர்மாக்களுக்கு அதர்வவேதம் பிரமாணம் எனத் தோன்றுகின்றது.

ஆம், அவ்வாறுதான் எனக்குந் தோன்றுகின்றது.

67. அதர்வவேதத்திற் கூறப்பட்டனவற்றைச் சுருக்கமாய் விளக்குமின்.

உடல்வலிமை, நீண்டஆயுள், தக்க ஐச்வர்யம், ரோக மின்மை, பிறர் தமக்குத் தீமை செய்யாதிருத்தல், நாட்டின் அமைதி, நாட்டைப் பகைவர் அரிக்காதிருத் தல், கணவனும் மனைவியும் மனமொத்திருந்து குடும் பத்தை நன்கு நடத்துதல், ஜாதகர்ம, உபநயனம், ஈமச் சடங்கு முதலியவற்றை நடத்தல் இவற்றிற்கு வேண் டிய மந்திரங்களையே சிறப்பாக அவ்வேதம் கொண்டது. இறக்கச் செய்யும் அபிசாரத்தையும், அபிசாரத்தால் எழுப்பப்பட்ட பிசாசமாகிய கிருத்யாவைப்பற்றியும் 30 ஸூக்தம் கூறும்.

68. அதர்வவேதத்தில் எவ்வளவு ஸூக்தங்கள் உள ?

சுமார் 730 ஸூக்தங்கள் உள.

69. அவை ருக்ரூபமாய் உள்ளனவா, அல்லது யஜுஸ் ரூபமாய் உள்ளனவா ?

பெரும்பாலும் ருக்ரூபமாகவே உள்ளன. சிறுபான்மை யஜுஸ்ஸாகவும் உள்ளன.

70. வேதங்களில் ஸம்ஹிதாபாகத்தைத் தவிர்த்து வேறு பாகம் உளதோ ?

உண்டு.

71. அதற்குப் பெயர் யாது ?

பிராம்மணம்.

72. அவ்வாறு கொள்ளுதற்குப் பிரமாணம் யாது ?

மந்த்ரப்ப்ராம்மணயோர் வேதநாமதேயம்[1] என்ற ஜைமினி மஹர்ஷியின் வாக்குதான்.

73. பிராம்மணங்களெல்லாம் ருக், யஜுஸ், ஸாம இவ் வடிவங்களாய் உள்ளனவா ?

1. இது கோபதப்பிராம்மணத்தால் (1, 2, 24) விளங்கும்.

1. मन्त्रब्राह्मणयोर्वेदनामधेयम्

இல்லை. பெரும்பாலும் எல்லா வேதங்களின் பிராம்மணபாகங்கள் வசனநடையில்தான் உள்ளன.

74. அவை எவற்றைக் கூறுகின்றன?

ஸம்ஹிதையிலுள்ள மந்திரங்களின் பொருள் முதலியவற்றைக் கூறுவதோடு, கர்மாக்களை விதிக்கும் விதிகளையுங் கொண்டன.

75. அவ்வளவுதானா?

ஒவ்வொரு பிராம்மணத்திலும் இறுதி பாகம் கடவுளின் ஸ்வரூபத்தையும், அவரை அடையும் ஸாதனத்தையும், மோக்ஷத்தின் ஸ்வரூபத்தையும் அவற்றிற்கு இயைபுபட்டனவற்றைப் பற்றியும் கூறும். அதனால் அதற்கு உபநிஷத் என்ற தனிப்பெயரும் உண்டு.

76. எல்லா உபநிஷத்துக்களும் பிராம்மணங்கள்தானே?

ஆம். ஆனால் ஒன்றுமாத்திரம் மந்த்ரோபநிஷத்து ஆகும்.

77. அஃது யாது?

ஈசாவாஸ்யோபநிஷத்து.

78. அஃது எந்த ஸம்ஹிதையின் இறுதிபாகம்?

சுக்ல யஜுர்வேத ஸம்ஹிதையின் இறுதிபாகம்.

79. ஈசாவாஸ்யம் என்ற பெயர் வந்ததற்குக் காரணம் யாது?

ஈசா, வாஸ்யம் என்ற சொற்கள் அதன் தொடக்கத்தில் இருக்கின்றன. அக்காரணம்பற்றி அதனை ஈசாவாஸ்யம் என்பர்.

80. அவ்வாறு பெயர் வைப்பது உண்டா?

வைத்திருக்கின்றனரே.

81. அவ்வாறு வேறு எங்கேனும் காணப்படுகின்றதா?

ஆத்தி சூடி யமர்ந்த தேவனை
ஏத்தி யேத்தித் தொழுவோம் யாமே

என்ற செய்யுளின் முதலிரண்டு சொற்களே அந்நூலிற்குப் பெயர் ஆயிற்று.

கொன்றை வேய்ந்த செல்வன் அடியிணை
என்றும் ஏத்தித் தொழுவோம் நாமே.

என்ற செய்யுளின் முதலிரண்டு சொற்களிலிருந்து கொன்றைவேய்ந்தன் என்ற பெயர் அந்நூலிற்கு வந்தது.

82. ஆக வேதம் என்பது மந்திரம் பிராம்மணம் என இரு பிரிவுகளைக் கொண்டது என்றும், பிராம்மணத்தின் இறுதிபாகம் உபநிஷத்து என்றும் கூறினீர். வேதங்களின் பயன் யாது?

வேதங்களிற் கூறப்பட்டனவற்றை மக்கள் செய்தால் நன்கு வாழலாம்.

83. அவை யாவை?

அவற்றைக் கூறுவதற்குமுன்னர் சிலவற்றைக் கூற வேண்டும்.

84 அவை யாவை?

மக்கட்டொகுதியின் பிரிவும் மக்களின் வேறுபட்ட நிலையும்.

## அத்தியாயம்—2

### வருணப்பிரிவும், ஆச்ரமப்பிரிவும்

85. மக்கட்டொகுதியின் பிரிவு என்றால் என்ன?

இவ்வுலகத்திலுள்ள மக்களை நான்கு வகையாக வேதம் பிரித்திருக்கின்றது.

86. அவை யாவை?

மக்கள், பிராம்மணன், க்ஷத்திரியன், வைச்யன், சூத்திரன் என நால்வகைப்பட்டனர்.

87. இஃது வேதத்துள் எங்கு கூறப்பட்டது?

புருஷஸூக்தத்திற் கூறப்பட்டது[1].

88. புருஷஸூக்தம் எங்கு இருக்கின்றது?

ருக்வேதஸம்ஹிதையில் பத்தாவது மண்டலத்தில் உள்ளது. யஜுர்வேதத்திலும் உளது.

1. இப்பாகுபாட்டையே "அந்தணர், அரசர், வணிகர், வேளாளர்" எனத் தமிழ்த்தொன்னூலாகிய தொல்காப்பியம் கூறும். நான்காவது வர்ணத்தை குறிக்கும் "விருஷல" என்ற சொல்லே வேளாளன் என்ற உருவத்தை அடைந்திருக்கலாம் என்பர்.

89. அங்கு எவ்வாறு கூறப்பட்டுளது?

கடவுட்குப் பிராம்மணன் முகம் ஆயினன்; ராஜன்யன் (க்ஷத்திரியன்) இருகைகளும் ஆயினன்; வைச்யன் இரு தொடைகளும் ஆயினன்; சூத்திரன் இருதிருவடிகளி லிருந்தும் பிறந்தான் என.

90. ஒரே வகையாகக் கூறப்படவில்லையே!

ஆம்.

91. அப்போது அத்தொடர்களுக்குப் பொருள் எவ்வாறு கொள்ளப்படவேண்டும்?

சூத்திரன் இருதிருவடிகளிலிருந்து பிறந்தான் எனச் சொல்வகையால் இருப்பினும், சூத்திரன் அவரது இரு திருவடிகளும் ஆயினன் என்றே அதற்குப் பொருள் கொள்ளவேண்டும்.

92. அவ்வாறு பொருள்கொள்ளுதற்குப் பிரமாணம் யாது?

இறுதியில் ஒரு தொடர்க்குப் பொருள் விளங்காவிட்டால், அவ்விஷயத்தைப்பற்றிக் கூறும் தொடக்கத்தில் எவ்வாறு கூறப்பட்டது என்பதைக் கவனித்து அதற்குத் தக்கவாறு ஐயத்தைப் போக்கிக்கொள்ளவேண்டும்.

93. இந்த நியாயத்திற்குப் பெயர் யாது?

உபக்ரம—உபஸம்ஹார—நியாயம் எனப் பெயர்.

94. இந்த நியாயம் எங்கு விரிவாய் உணர்த்தப்பட்டது?

பூர்வமீமாம்ஸை என்ற சாஸ்திரத்தில்.

95. பூர்வமீமாம்ஸை என்பது எதைப்பற்றியது?

வேதங்களின் பூர்வபாகத்திலுள்ளனவற்றைப் பற்றி விசாரிக்கும் சாஸ்திரம் பூர்வமீமாம்ஸை.

96. வேதங்களின் பூர்வபாகம் எது?

உபநிஷத்துக்களைத் தவிர உள்ள பாகம் பூர்வபாகம்.

97. அதற்கு வேறு பெயரும் உண்டோ?

உண்டு. கர்மகாண்டம் எனவும் அதனைக் கூறுவர்.

98. ஏன் அப்பெயர் அதற்கு வந்தது?

கர்மாக்களைப்பற்றி அப்பாகம் கூறுதலால்.

99. அவ்வாறே உபநிஷத்தை உத்தரகாண்டம் எனக் கூறுவது உண்டோ?

உண்டு.

100. • இங்குக் கூறப்பட்ட கர்மகாண்டத்திற்கும் உபநிஷத் என்ற ஞானகாண்டத்திற்கும் இயைபு உண்டா?

உண்டு. கர்மகாண்டத்தில் விதிக்கப்பட்ட யாகங்களை அவ்வப்பயனை மாத்திரம் கருதின், அவையே கிட்டும். அவற்றைக் கருதாது பற்றற்று உபநிஷத்திற் கூறப்படும் பரமாத்மாவிற்கு அர்ப்பணமாகவே அவ்வேள்விகளை இயற்றின், கடவுள் அந்தந்த தேவதையின் வாயிலாக நமது பாவத்தைப் போக்கிச் சித்தசுத்தியை அருளுவர்.

101. இஃது எங்குக் கூறப்பட்டுளது?

பிருஹதாரண்யகம்[1] முதலிய உபநிஷத்துக்களிலும், பகவத்கீதையிலும்[2] கூறப்பட்டுளது.

102. ஆங்குள்ள வாக்கியங்களைப்பற்றி விசாரம் செய்யப்பட்டதோ?

ஆம் செய்யப்பட்டது. அந்த சாஸ்திரத்திற்கு உத்தர மீமாம்ஸை என்றும் வேதாந்த சாஸ்திரம் என்றும் பெயர்கள் வழங்குகின்றன.

103. பிராம்மணரைக் கடவுளின் முகம் என்றும் ராஜன்யரை இருகைகள் என்றும் வைச்யரை இருதொடைகள் என்றும் சூத்திரரை இருகால்கள் என்றுங் கூறுதற்குக் காரணம் யாது?

காரணம் வேதங்களிற் கூறப்பட்டதாகத் தெரியவில்லை. இருப்பினும் அவரவர்க்கு விதிக்கப்பட்ட தொழில்களால், அவர் அவ்வாறு கூறப்பட்டனர் எனக் கூறல் தகும்.

104. விளக்கமாய்க் கூறுமின்.

பிராம்மணர்க்கு வாக்கின் வலிமை அவச்யம். வாக்கால் தான் வேதம் முதலிய நூல்களை அத்யயனம் செய்ய வேண்டும். வாக்கால்தான் பிறர்க்கு அத்யாபனம் செய்யவேண்டும். வாக்கால்தான் யாகங்கட்கு உரிய மந்திரங்களை நன்கு சொல்லக்கூடும். ஆகலின் கடவுட்கு அவர் முகம் எனப்பட்டனர் எனக் கூறல் தகும். க்ஷத்திரியர் நாட்டைக் காக்கவேண்டுமாகையால் புஜபலம் அவர்க்கு இன்றியமையாதது. ஆகலின் அவர் கடவுட்கு இருகைகளும் ஆவர். நாட்டின் வருமானங்களைக் கவனிக்கும் பொறுப்பு வைசியரிடமாகலின்,

1. 6, 4, 22. 2. 4, 11, 5, 10 & 7, 21.

அவர் கடவுட்குத் தொடை எனக் கூறப்பட்டனர். பணிவிடைகளையும் உழவினையுஞ் செய்யக் காலிற்குப் பலம் வேண்டுதலின், சூத்திரர் கடவுட்குக் கால் எனப் பட்டனர்.

105. இவர்களுள் யார் மேம்பட்டவர், யார் கீழ்ப்பட்டவர்?

மக்களின் உறுப்புக்களுள் எது மேம்பட்டது, எது கீழ்ப்பட்டது?

106. அதனதன் வேலையைச் செய்யும்போது அது அது உயர்ந்ததுதான்.

அவ்வாறே மக்களுள்ளும்.

107. ஆகலின் அவர்களுக்குள் மேம்பாடு, கீழ்ப்பாடு என்பது இல்லையா?

அவர்களுள் பிராம்மணன் பிறரைக்காட்டிலும் நான் சிறந்தவன் என நினைப்பின், பிராம்மண்யம் அப்போதே அவனுக்குக் குன்றிவிடும் எனத் தர்மசாஸ்திரங்களிற் கூறப்பட்டது. ஆகலின் அவரவரது கடமையை அவ ரவர் செலுத்தும்போது அவரவரே சிறந்தவர் என்பது தான் வைதிகக்கொள்கை.

108. சூத்திரரை இருகால்கள் என வேதம் கூறினமையின், அவர் கீழ்ப்பட்டனர் ஆகாரா?

உறுப்புக்களில் கால்களைக் கீழ்ப்பட்டன எனக் கூற முடியுமா? அன்றியும் ஒருவர் சூத்திரராகப் பிறக்கக் கடவுளுடைய விருப்பமே சிறந்த காரணம் என்ற கொள்கை இருப்பின் சூத்திரரைக் கீழ்ப்பட்டவராக நினைக்கலாம். அவரவர் செய்த கர்மாவிற்கும் அவரவர் கொண்ட குணத்திற்குந் தக்கவாறு அவரவர்களைக் கடவுள் படைக்கிறார். ஆகலின் முற்பிறப்பில் அவரவர் செய்த கர்மாவிற்கும் அவரவர் குணத்திற்கும் தக்க வாறு இப்பிறப்பில் அவர் பிராம்மணனாகவும் க்ஷத்திரிய னாகவும் வைச்யனாகவும் சூத்திரனாகவும் பிறக்கிறான்.

109. இவ்வாறு எங்குக் கூறப்பட்டது?

ஒரு ஜீவன் இப்பூதவுடலைவிட்டு நீங்கும்போது அவ னுடைய வித்யை, கர்ம, பூர்வப்ரக்ஞை இவை அவன் பின் செல்கின்றன என்ற பிருஹதாரண்யகோபநிஷத் தில் (6, 4, 3) உள்ள தொடர் இதனைக் குறிக்கும்.[1] பகவத்கீதையில் கண்ணன் குணம் கர்மா இவற்றிற்குத்

1. चातुर्वर्ण्यं मया सृष्टं गुणकर्मविभागशः। (4, 13)

தக்கவாறு, தானே நான்கு வருணத்தாரையும் படைக்கிறதாக வெளிப்படையாகக் கூறுகின்றனர்.

110. ஆகலின் அவரவரது பிறப்பிற்கு அவரவரேதான் காரணம் ஆகுமோ ?

அதற்கு என்ன ஐயம் ?

111. அவ்வாறுயின் ஒவ்வொருவர் செய்யும் செயலிற்கு அவர் தலைவிதியே காரணம் என்கிறீர்களே, அது பொருந்துமா ?

இது ஒரு சிறந்த வினு. இதற்கு விடை தெளிவாக நமது நூல்களில் இருப்பினும், மக்கள் அதை நன்கு அறியவில்லை. ஒவ்வொருவர் செய்யும் செயலிற்கு அவரவர் தலைவிதியே காரணம் ஆயின், தர்மத்தைச் செய் என்ற விதி எற்றுக்கு ?

112. அவ்விதி எங்கு உள்ளது ?

தைத்திரியோபநிஷத்தில் உள்ளது.

113. அதனுற் பெறப்பட்டது யாது ?

நாம் செய்யும் செயலிற்கு நாம் முற்பிறப்பில் செய்த கர்மாக்கள் மாத்திரம் காரணம் ஆகாது என்பதே.

114. அஃது எப்படி ?

இதனைப் பர்த்ருஹரி இயற்றிய நீதிசதகத்திலிருந்து விளக்குகிறேன். கவனமாய்க் கேளும் :—

ஓரிடத்து, ஒரு பெட்டியில் ஒரு பாம்பு உணவின்றி மெலிந்து சுருண்டு கிடக்க, இரவில் ஓர் எலி பெட்டியைத் துளையிட்டு உள்ளே செல்ல, அதனை உடனே பிடித்துத் தின்று பாம்பு அத்துளைவழியே வெளிவந்ததைக் காட்டி, நல்வினைப்பயனை நுகரவேண்டின் அதனை நுகர்ந்தே தீரவேண்டும் எனக் கூறி, ஒருவனும் தீங்கு நிகழும்போது மனந் தளராமல் இருக்கவேண்டும் என்கிறார்[1]. அதன் பின்னர், கடும் வெயிலில் வழுக்கைத்தலையுடைய ஒரு வழிப்போக்கன் வெயில் தாங்காது ஒரு பனைமரத்தடிக்கு ஓட, அங்கே ஒரு பனம்பழம் அவன் தலையில் விழ, அவன் இறந்தான் என்பதைக் காட்டித்

1. भग्नाशस्य करण्डपिण्डिततनोर्म्लानेन्द्रियस्य क्षुधा
कृत्वाखुर्विवरं स्वयं निपतितो नक्तं मुखे भोगिनः ।
तृप्तस्तत्पिशितेन सत्वरमसौ तेनैव यातः पथा
स्वस्थास्तिष्ठत दैवमेव हि परं वृद्धौ क्षये कारणम् ॥

தீவினைப் பயனை நுகரவேண்டுமாயின் அதனை நுகர்ந்தே தீரவேண்டும் என்றனர் [1].

மற்றோரிடத்தில் முயற்சியுடைய புருஷசிங்கத்தை ஐச்வரியம் தானே அடையும் எனவும், தலைவிதி தலைவிதி எனக் கையாலாகாத கபோதிகளே கூறுவர் எனவும், அக்காரணம் பற்றியே ஒவ்வொருவரும் தலைவிதிக்கு அஞ்சாது முயலவேண்டும் என்றும் அம் முயற்சி அப்போது விரும்பியவற்றை அளிக்காதிருப்பினும் குற்றமில்லை என்றுங் கூறுகின்றனர் [2].

இவற்றையும், தர்மத்தைச் செய் [3] என்ற உபநிஷத்து வாக்யத்தையும், ஞானத்தீ எல்லா கர்மங்களும் தத்தம் பயனைத் தாராமலிருக்குமாறு கொளுத்திவிடும் என்ற பகவத்கீதை வாக்கியத்தையும் [4] உற்று நோக்கி ஆராய்ந்து பார்த்தால், நால்வகை புருஷார்த்தங்களுள் அர்த்தம், காமம் இவ்விரண்டற்கும் முன்னர்ச் செய்யப்பட்ட வினைகள் காரணம் ஆகும் என்பதும் தர்மம் மோக்ஷம் இவ்விரண்டற்கும் தம் தம் முயற்சியே காரணம் ஆகும் என்பதும் நன்கு விளங்கும். இவ்வாறு கொள்ளின் தற்போது நல்வினையைச் செய்கின்ற சிலர் துன்பத்தை நுகரின், அதற்குக் காரணம் அவர் முற்பிறப்புக்களிற் செய்த தீவினை என்பது தெற்றென விளங்கும்.

115. இதனைக்கொண்டுதான் திருக்குறளாசிரியர் ஊழைப் பற்றி ஓர் அதிகாரத்திலும், ஆள்வினையுடைமையைப் பற்றி மற்றோர் அதிகாரத்திலும் உணர்த்தினரோ?

ஆம்.

அவர் கூறிய

> தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்
> மெய்வருத்தக் கூலி தரும்

1. खर्वाटो दिवसेश्वरस्य किरणैः सन्तापिते मस्तके
   गच्छन्देशमनातपं द्रुतगतिस्तालस्य मूलं गतः ।
   तत्राप्यस्य महाफलेन पतता भग्नं सशब्दं शिरः
   प्रायो गच्छति यत्र दैवहतकः तत्रैव यान्त्यापदः ॥
2. उद्योगिनं पुरुषसिंहमुपैति लक्ष्मीः
   दैवं हि दैवमिति कापुरुषा वदन्ति ।
   दैवं निहत्य कुरु पौरुषमात्मशक्त्या
   यत्ने कृते यदि न सिध्यति कोऽत्र दोषः ॥
3. (तै. उ.)
4. ज्ञानाग्निस्सर्वकर्माणि भस्मसात्कुरुतेऽर्जुन ।

என்பது எப்பொழுதும் மனத்தில் வைத்துக்கொள்ளத் தக்கது. ஆகலின் நான்கு வருணத்திலும் கடவுள் பிறப்பித்ததற்கு அவரவர் வினைகளே காரணம் ஆகும் என்பது பெறப்பட்டது. கல்வி, நாட்டமைதி, செல்வம், உழவர் இவை ஒவ்வொரு நாட்டின் நன்மைக்கும் வேண்டும். இவை தொன்றுதொட்டு மரபின் வழி வந்துகொண்டிருந்தால்தான் இந்நான்கு தொழில்களிலும் நுட்பமான பயிற்சி உண்டாகும். ஒருவர்க்கொருவர் போட்டி, கலகம் முதலியன இல்லாதிருக்கும். இங்ஙனம் இல்லாவிடின் லோகயாத்திரை சீரான முறையில் நடவாது. ஆதலால் கடவுள் சிறப்பாக மக்களை நான்கு வகையாகப் பிரித்திருத்தல் கூடும்.[1]

116. வருணங்கள் நான்காயின் அவர்களின் கடமையும் நான்கு வகைப்படுமன்றோ ?

ஆம். அதற்கு என்ன ஐயம்? அது மாத்திரம் இல்லையே. ஓர் ஆணோ பெண்ணோ பிறந்ததிலிருந்து இறக்கும் வரை ஒரே விதமாக இருக்கவில்லையே. இளமைப் பருவத்தில் உள்ள கொள்கைகள் யௌவனத்தில் இல்லையே. யௌவனத்தில் உள்ளது உடல் தளர்ச்சி அடையத் தொடங்கும்போது இல்லையே. அப்போது உள்ளது இறுதிக்காலத்தில் இல்லையே.

117. அதனால்தான் மனிதனின் நிலையை நால்வகையாகப் பிரித்தனரோ ?

ஆம்.

118. நிலை என்பதற்கு வடமொழிச்சொல் யாது ?

ஆச்ரமம் என்பது.

119. அப்போது ஒவ்வோர் ஆச்ரமத்திலும் செய்யவேண்டிய கடமைகள் வெவ்வேறுகுமோ ?

வெவ்வேறுதான் ஆகும்.

120. ஆச்ரமங்களின் பெயர்கள் யாவை ?

பிரும்மசர்யம், கார்ஹஸ்த்யம், வானப்பிரஸ்தம், ஸந்நியாஸம் என்பன.

---

1. स्वधर्मे निधनं श्रेयः परधर्मो भयावहः । (4, 35)
स्वे स्वे कर्मण्यभिरतः संसिद्धिं लभते नरः । (18, 45)

# அத்தியாயம்—3

## மக்களின் தன்மை

121. மக்கள் நான்கு வர்ணமாகப் பிரிக்கப்பட்டனர் என்றும் ஒவ்வொரு வர்ணத்திற்கும் பல ஆச்ரமங்கள் உள என வுங் கூறினீரே, மக்கள் என்பது யாரைக் குறிக்கும்?

இவ்வாராய்ச்சி தோன்றுவதற்குக் காரணம் என்ன?

122. மக்கள் பிறக்கின்றனர் இறக்கின்றனர் என்கின்றனர். முற்பிறப்புக்களில் செய்த வினைப்பயனை இப்போது நுகர்கின்றனர் என்கின்றனர். இறந்தார்க்கு முற் பிறப்பு மறுபிறப்பு உண்டா? இவையெல்லாம் நோக்குமிடத்து எனக்கு ஒன்றுந் தெளிவாய்த் தோன்ற வில்லை. அக்காரணம்பற்றித்தான் இவ்வினா எழுந்தது.

உண்மைதான். மக்கள் என்பது யார் என்பதை ஒவ் வொருவருந் தெளிவாய் அறிதல் வேண்டும். கூறுகின் றேன் கேண்மின்:—மக்கள் என்ற சொல் மனிதருள் ஆண் பெண் இருவரையுங் குறிக்கும். மனிதர் என்பவர் யார்? உமக்கு எதிரில் நான் இருக்கின்றேன். என்னை முற்றிலும் நீர் பார்ப்பதாக எண்ணுகிறீர். ஆனால் உண்மையில் என்னை நீர் முற்றிலும் பார்க்கவில்லை நீர் எதனைப் பார்க்கிறீரோ அது சில ஆண்டுகட்கு முன்னர் உண்டாயிற்று; பின்னர் வளர்ந்தது; பின்னர் தளர்ச்சி யுற ஆரம்பித்தது; சிறிது காலத்திற்குப் பின்பு அஃது அழிந்துபோகும். அஃது ஒன்றே மனிதனை இருப்பின், இப்பொழுது அதற்கு எதிரில் நீர் விருப்பத்துடன் இருக்குமாறு, அது அழிந்தபொழுதும் இருக்கவேண்டும். உலகில் அவ்வாறு இல்லை. ஆதலின் அதனை மாத்திரம் மனிதன் எனக் கூறுதல் இயலாது. அதனையே ஸ்தூல சரீரம் அல்லது பூதவுடல் என்பர். அதற்குத்தான், உண்டாதல் இருத்தல் வளர்தல் முற்றுதல் தளர்ச்சியுறு தல் அழிகை என்ற ஷட்பாவவிகாரங்கள்[1] உள.

நான் உம்மைப் பார்க்கின்றேன். எதனால் பார்க்கின் றேன்? பார்க்கக்கூடிய சக்தி வாய்ந்த கண்களாற் பார்க்கின்றேன். அக்கண்களை நீர் பார்க்கின்றீரா? இல்லை. அவ்வாறே வாசனையை நுகரும் எனது மூக்கை யும், ருசியை அறியும் நாக்கையும், சப்தத்தைக் கேட்கும் காதினையும், பூசும் சந்தனம் ஜில்லென இருக்கின்றது என அறியும் த்வக்கையும் நீர் பார்க்கவில்லை. இவ் வைந்தினையும் ஞானேந்திரியம் என்று கூறுவர். நடக்

1. षड् भावविकाराः — जायते, अस्ति, वर्धते, परिणमते, अपक्षीयते, नश्यति

கும் காலேயும், எடுக்குங் கையையும், பேசும் வாயினே யும், மூத்திரம் மலம் இவற்றைக் கழிப்பனவற்றையும் கர்மேந்திரியம் என்பர். நேற்றுச் செய்ததை இன்று நினேக்கிறேம். அவ்வாறு நினேப்பதற்குக் கருவியாய் இருப்பதை மனம் என்பர். இதனே மனம், புத்தி, அஹங்காரம், சித்தம் எனப் பிரிப்பதும் உண்டு. ஒருவன் அயர்ந்து தூங்கும்போது மூச்சு மேலுங் கீழும் போவதைப் பார்க்கின்றீர். அதனேப் பிராணன் என்பர். அப்பிராணனேப் பிராணன், அபானன், வியானன், உதானன், ஸமானன் என ஐந்து வகையாக அதன் செயலேக்கொண்டு பிரித்திருக்கின்றனர். இவற்றையெல்லாஞ் சேர்த்து ஸூக்ஷ்ம சரீரம் என்பர். இதனே நீர் பார்க்கவில்லே. இவ்விரண்டையுந் தவிர்த்து ஜீவன் என்பது ஒன்று இருக்கிறது. அதனேயும் நீர் பார்க்கவில்லே. ஆக ஸ்தூலசரீரம் ஸூக்ஷ்மசரீரம் இவ்விரண்டனேடு கூடிய ஜீவனே மனிதன் எனக் கூறுகின்றேம்.

123. ஜீவனின் ஸ்வபாவத்தை விளக்குமின்.

ஜீவனுக்கு ஒருபோதும் அழிவில்லே. பிறப்பும் இல்லே, இறப்பும் இல்லே.

124. அஃது எவ்வாறு தோன்றுகிறது?

இருவர் சண்டையிட்டு ஒருவர் மற்றொருவரைக் கொன்றதாகவும் மற்றொருவர் தான் கொல்லப்பட்டதாகவும் நினேக்கின்றனர். இவர் அவரைக் கொல்லவும் இல்லே, அவர் இவராற் கொல்லப்படவும் இல்லே. இருவரும் ஜீவனின் தன்மையை அறியாதவர் எனக் கடோபநிஷத்து கூறுகின்றது.[1] ஜீவன் இறக்கவில்லே எனச் சாந்தோக்கியோபநிஷத்து கூறும்.[2] இதனேயே கண்ணன் பகவத்கீதையிற் பின்வருமாறு கூறுகின்றனர் :—

ஜீவன் ஒருபோதும் பிறக்கவுமில்லே, இறக்கவுமில்லே. ஒரு காலத்தில் இருந்து, பின்னர் அழிந்து, வருங்காலத்தில் பிறப்பான் என்பதும் இல்லே. ஜீவன் அஜன், நித்தியன், சாச்வதமாய் எப்போதும் உள்ளவன்.[3] கடோபநிஷத்திற் கூறப்பட்டதைச் சிறிது மாற்றி இங்குக் கண்ணனுங் கூறுகின்றனர்.[4]

1. (2, 19) 2. (6, 11)

3. न जायते म्रियते वा कदाचित् नायं भूत्वा भविता न भूयः ।
अजो नित्यः शाश्वतोऽयं पुराणो न हन्यते हन्यमाने शरीरे ॥ (2, 20)

4. य एनं वेत्ति हन्तारं यश्चैनं मन्यते हतम् ।
उभौ तौ न विजानीतो नायं हन्ति न हन्यते ॥ (2, 19)

125. ஜீவனை நாம் பார்க்க முடியுமா ?

முடியாது எனக் கேனோபநிஷத்தும், முண்டகோப நிஷத்தும் கூறுகின்றன.[1]

126. மனத்தால் நினைக்க முடியுமா? வாக்கால் வர்ணிக்க முடியுமா ?

முடியாது எனக் கேனோபநிஷத்தும் கடோபநிஷத்துங் கூறுகின்றன.

127. கேனோபநிஷத்து எனப் பெயர் வந்ததற்குக் காரணம் யாது ?

கேந என்ற சொல்லால் அவ்வுபநிஷத்து தொடங்குகின்றமையான் அதற்கு அப்பெயர் வந்தது.

128. கண் காது முதலியவற்றிற்குப் பார்த்தல் கேட்டல் முதலிய ஆற்றல்களைக் கொடுப்பது யாது ?

ஜீவன் தான் அவற்றைக் கொடுக்கிறுர்.

129. அதற்குச் சான்று யாது ?

ஜீவன், காதிற்குக் காதாயும் மனத்திற்கு மனமாயும் வாக்கிற்கு வாக்காயும் பிராணனுக்குப் பிராணனுயும் கண்ணிற்குக் கண்ணுயும் இருக்கின்ருர் என அந்த கேனோபநிஷத்தே கூறுகின்றது.

130. இந்த ஜீவன் சரீரங்களோடு இருக்கின்ருன் என்பதற்குச் சான்று யாது ?

அழியுஞ் சரீரங்களைத் தனக்கு இருப்பிடமாகக்கொண்டிருக்கின்ருன் எனச் சாந்தோக்யோபநிஷத்து கூறும்.

131. இன்பதுன்பங்கள் எப்போது நுகரப்படும் ?

ஜீவன் இரண்டு சரீரங்களுடனும் இயைபுபட்டிருக்கும் போதுதான் இன்பதுன்பங்கள் நுகரப்படும்.

132. அதற்குச் சான்று யாது ?

நாம் அயர்ந்து தூங்கும்பொழுது ஜீவன் இருசரீரங்களோடு இயைபுபட்டும் இயைபுபடாமலு மிருக்க நாம் இன்பதுன்பங்களை அறியவில்லை என்பது எல்லோர்க்கும் அனுபவத்தில் உள்ளதே. அன்றியும் சரீரங்களோடு கூடியிருக்கும் வரை இன்பதுன்பங்கள் ஜீவனை விடா எனச் சாந்தோக்யம் கூறும்.

1. (3, 8)

133. சரீரங்கள் அழியும் என்பதற்குச் சான்று யாது?

ஸ்தூலசரீரம் அழிவதை நேரில் நாம் பார்க்கின்றோம். ஸூக்ஷ்மசரீரம் அழிவது "ஜீவனைத் தவிர்த்து ஏனைய வெல்லாம் அழியும்" என்ற பிருஹதாரண்யகத் தொடரால் விளங்கும்.

134. அன்பரீர்! சாந்தோக்யோபநிஷத்து, பிருஹதாரண்யகோபநிஷத்து, கடோபநிஷத்து இப்பெயர்கட்குக் காரணம் யாது?

சந்தோகர் அல்லது ஸாமவேதிகள் அத்யயனஞ் செய்யும் உபநிஷத்துச் சாந்தோக்யோபநிஷத்து ஆகும். உபநிஷத்திற்குள் மிகப் பெரிது என்ற காரணம் பற்றிப் பிருஹதாரண்யகோபநிஷத்து என்ற பெயர் வந்தது. கடர் என்ற மஹர்ஷி தனது சிஷ்யர்களுக்கு அத்யாபனஞ் செய்தமையின் கடோபநிஷத்து என்ற பெயர் வழங்கப்பட்டது.

135. ஸ்தூலசரீரம் எவ்வாறு அழிகின்றதோ அவ்வாறே ஸூக்ஷ்மசரீரம் அழிகின்றதா?

இல்லை.

136. அதற்குச் சான்று யாது?

இப்பூதவுடலைவிட்டு ஜீவன் செல்லும்போது ப்ராணன் இந்திரியங்கள், வித்யை, கர்மா இவையெல்லாம் அவனோடு செல்லுகின்றன எனப் பிருஹாதாரண்யகமும், அக்கருத்தையே பகவத்கீதையும்[1] கூறுகின்றன.

137. எப்பொழுதுதான் ஸூக்ஷ்மசரீரம் அழியும்?

எப்பொழுது ஜீவாத்மா பரமாத்மாவோடு ஒன்றுபடுகின்றானோ, அப்போதுதான் ஸூக்ஷ்மசரீரம் அழியும்.

138. அஃது எப்பொழுது நிகழும்?

எப்பொழுது ஆசை முற்றிலும் தானாகவே ஒழிகின்றதோ அப்பொழுதுதான் அது நிகழும்.

139. அதற்குச் சான்று யாது?

கடோபநிஷத்திலுள்ள ஒரு தொடரும், ஒரு குறளும்.

140. கடோபநிஷத்தொடர் யாது கூறுகின்றது?

மனத்திலுள்ள காமங்களெல்லாம் எப்பொழுது தாமாகவே விடுகின்றனவோ அப்போது ஜீவன் அம்ருதன்

1. शरीरं यदवाप्नोति यच्चाप्युत्क्रामतीश्वरः ।
गृहीत्वैतानि संयाति वायुर्गन्धानिवाशयात् ॥ (15, 8)

ஆகின்றான். பரம்பொருளோடு ஒன்றுபடுகின்றான் என்பது அத்தொடரின்[1] பொருள்.

**141.** குறள் யாது கூறுகின்றது?

அடங்காப்பிடாரியான ஆசை எப்போது நீங்குகின்றதோ, அப்போதே ஜீவன் மாறுபடாத தனது உண்மைத்தன்மையை அடைவான் என்பது அக்குறளின்[2] பொருள்.

**142.** அன்பரீர்! பேராவியற்கை என்ற சொல்லால் அறியப்படுவது யாது?

ஆசிரியர் திருவள்ளுவனுர் அத்வைதி என்பது அறியப்படுகின்றது.

**143.** அஃது எவ்வாறு?

அச்சொல்லால் ஜீவனும் பரமாத்மாவும் ஒன்று என்றும், ஜீவன் நன்கு தூங்கும்போது ஒருவாறு பரமாத்வோடு ஒன்றுபடினும், விழித்துக்கொள்ளும்போது தன்னியற்கையிலிருந்து பெயர்கின்றான் என்றும், ஆசை ஒழிந்தபின்னர் அவ்வாறு பெயரவில்லை என்றும் அக்குறளால் அறியப்படுகின்றன அல்லவா.

**144.** அடிக்கடி பகவத்கீதையிலுள்ள ச்லோகங்களைச் சான்றாகக் கூறுகின்றீரே, அவை சான்று ஆகுமா?

ஆகும். பிரமாணமான நூல்கள் யாவை என்பதை கூறுகின்றேன், கேண்மின்.

---

1. (6, 14)
2. ஆரா வியற்கை யவாநீப்பின் அந்நிலையே
பேரா வியற்கை தரும். (370)

## அத்தியாயம்—4

### பிரமாண நூல்கள்

145. அவை யாவை ?

முதன்முதலில் தர்மத்தைப் பற்றி கூறிய நூல்கள் வேதங்கள். அவற்றுள் சான்றுகளைத் தேடிப்பிடித்தல் எளிதன்று என நினைத்து. தர்மங்களைப் பாகு படுத்தி அவற்றிற்கு வேண்டியவற்றை ஆங்காங்கு உணர்த்தினர் மகர்ஷிகள்.

146. அந்நூல்கட்குப் பெயர் யாது ?

தர்மசாஸ்திரங்கள் என்பது அவற்றின் பெயர்.

147. தர்மம் என்றால் என்ன ?

ஒவ்வொருவனும் செய்யவேண்டிய செயல்.

148. அவற்றை எவ்வாறு பாகுபடுத்தினர் ?

ச்ரௌதாக்னி, க்ருஹ்யாக்னி என இரண்டுவகை அக்னிகள் உள என ஏற்கனவே கூறியிருக்கிறேன். ஞாபகம் இருக்கின்றதா ?

149. ஆம் இருக்கின்றது. அவற்றைப்பற்றி இங்கு என்ன ?

ச்ரௌதாக்னியில் செய்ய வேண்டிய யாகங்களைப் பாகு படுத்தி, அவற்றைச் செய்யும் முறையை ஒருவகைப் பட்ட நூல்களில் இயற்றினர்.

150. அவற்றிற்கு என்ன பெயர் ?

ச்ரௌதஸூத்ரங்கள் என அவற்றின் பெயர்.

151. ஸூத்ரங்கள் என்று பெயரிடுவானேன் ?

கருத்துக்களை ஸூத்ரவடிவமாகக் கூறிய காரணத்தால் அப்பெயர் இட்டனர்.

152. ஸூத்ரம் என்றால் என்ன ?

ஐயமின்றிப் பொருள் உணர்த்திக் குற்றமற்று நிற்கும் சிறு தொடர்.[1]

153. க்ருஹ்யாக்னியில் செய்யவேண்டிய கர்மாக்களை வேறு நூல்களில் இயற்றினரோ ?

ஆம்.

1. अल्पाक्षरमसन्दिग्धं

154. அவற்றிற்கு என்ன பெயர் ?

கிருஹ்யஸூத்ரங்கள் என அவற்றின் பெயர்.

155. ஒவ்வொரு வேதத்திற்கும் ஒட்டிய ச்ரௌதஸூத்ரங்களும் கிருஹ்யஸூத்ரங்களும் வேறுபட்டனவோ ?

ஆம். வேறுபட்டன. அதுமாத்திர மன்று. ஒவ்வொரு வேதத்தை ஒட்டியும் பல ச்ரௌதஸூத்ரங்களும் பல கிருஹ்யஸூத்ரங்களும் இயற்றப்பட்டன.

156. அதற்குக் காரணம் யாது ?

ஒவ்வொரு வேதத்திலும் பல சாகைகள் இருந்த காரணத்தால்தான்.

157. சாகை என்றால் என்ன ?

சிற்சிலவிடத்து சொல்வேறுபாடும் பொருள்வேறுபாடும் உள்ள தொகுதி சாகை என்னலாம்.

158. ருக்வேதத்தில் எத்தனை சாகைகள் ?

21 சாகைகள்.

159. யஜுர்வேதத்தில் எத்தனை சாகைகள் ?

101 சாகைகள்.

160. ஸாமவேதத்தில் எத்தனை சாகைகள் ?

1000 சாகைகள்.

161. அதர்வவேதத்தில் எத்தனை சாகைகள் ?

9 சாகைகள்.

162. இவை இவ்வாறு என எங்குக் கூறப்பட்டுளது ?

பல்லிடங்களில் கூறப்பட்டிருக்கலாம். மஹாபாஷ்யத்தில் தற்போது காணப்படுகின்றது.[1]

163. அவையெல்லாம் தற்போது வழக்கில் உள்ளனவோ ?

இல்லை.

164. ஒவ்வொரு சாகையையும் ஒட்டி ஒரு ச்ரௌதஸூத்ரமும் ஒரு கிருஹ்யஸூத்ரமும் இருந்திருக்குமோ ?

இருந்திருக்கலாம். அது மாத்திரமன்று. ஒரு சாகையைப் பற்றியே பல ச்ரௌதஸூத்ரங்களும் பல கிருஹ்யஸூத்ரங்களும் இருந்திருக்கலாம்,

1. एकशतमध्वर्युशाखाः, सहस्रवर्त्मा सामवेदः, एकविंशतिधा बाह्वृच्यम्, नवधा आथर्वणः (1, 1, 1.)

165. அதற்கு ஓர் உதாரணங் கூறுமின்.

யஜுர்வேதத்தில் தைத்திரியசாகை என ஒன்று உளது. அதுதான் தற்போது தென்னாட்டில் மிகுதியாய் அத்தியயனம் செய்யப்படுகின்றது. அதை ஒட்டி நான்கு ச்ரௌதஸூத்ரங்கள் இருக்கின்றன.

166. அவை யாவை ?

அவை பௌதாயனச்ரௌதஸூத்ரம், ஆபஸ்தம்ப ச்ரௌதஸூத்ரம் ஹிரண்யகேசி ச்ரௌதஸூத்ரம் பாரத்வாஜச்ரௌதஸூத்ரம் என்பன.

167. அவ்வாறே க்ருஹ்யஸூத்ரங்களும் உளவோ ?

ஆம். அந்நான்கனைப் போலவே க்ருஹ்யஸூத்ரங்கள் தற்போது ஆறு காணப்படுகின்றன. அவை யாவன :—ஆபஸ்தம்பம், போதாயனம், ஹிரண்யகேசி, பாரத்வாஜம், வைகானஸம், ஆக்னிவேச்யம்.

ஆக்னிவேச்யம் என்பது ஆவுடையார் கோவில் என்னும் மாணிக்கவாசகர்க்ஷேத்திரத்தில் பூஜைசெய்யும் நம்பியார் எனப்படும் இரண்டொருவேதியர்குடும்பத்தில் அநுஷ்டிக்கப்படுகிறது.

168. அவற்றுள் பல வழக்கில் இல்லைபோலும்.

ஆம். சாகைகள் பல வழக்கில் இல்லாமையால் அவற்றை ஒட்டிய ச்ரௌதஸூத்ரங்களும் க்ருஹ்யஸூத்ரங்களும் வழக்கில் இல்லை.

169. தர்மத்தைக் கூறுவன ச்ரௌதஸூத்ரங்களும் க்ருஹ்யஸூத்ரங்களுந் தானா ?

இல்லை. இவற்றிற் கூறப்பட்ட தர்மங்களைத் தவிர்த்து ஏனைய தர்மங்களைக் கூறும் நூல்களும் உள.

170. அவற்றிற்கு என்ன பெயர் ?

தர்மஸூத்ரங்கள் எனப் பெயர்.

171. ச்ரௌதஸூத்ரங்களும் க்ருஹ்யஸூத்ரங்களும் தர்மத்தைப்பற்றித் தானே இயற்றப்பட்டன. அக்காரணம் பற்றி அவையும் தர்மஸூத்ரங்கள் ஆகுமே. அவ்வாறிருக்க இவற்றை மாத்திரம் தர்மஸூத்ரங்கள் எனக் கூறுவது பொருந்துமா ?

உமக்குத் தோன்றிய ஐயம் நேரிதே. மூன்றுவகைப்பட்ட நூல்களும் தர்மஸூத்ரங்களே ஆகும். ஆயினும் முன்னர் இருவகைப்பட்ட நூல்களுக்கும் விசேஷப்பெயர் இருத்தலின், தர்மஸூத்ரம் என்ற பெயர் அவற்றைத் தவிர்த்து எஞ்சியிருக்கும் மூன்றாவது வகைப்பட்ட நூல்கட்கு வழங்கப்பட்டது.

172. அவ்வாறு வழக்கில் உண்டா ?

உண்டு.

173. ஓர் உதாரணங் கூறுமின்.

விவாஹத்திற்கு எல்லா உறவினர்களும் வந்திருந்தனர், மாப்பிள்ளையும் வந்திருந்தனர் என்றவிடத்து உறவினர் என்பது மாப்பிள்ளையைத் தவிர்த்த உறவினரையே குறிக்கும். அவ்வாறே பிராம்மணரும் வந்தனர் வஸிஷ்டரும் வந்தனர் என்றவிடத்து பிராம்மணர் என்பது வஸிஷ்டரைத் தவிர்த்த பிராம்மணரைக் குறிக்கும். இதிலிருந்தே பிராம்மணவஸிஷ்டநியாயம் என ஒரு நியாயம் பிறந்தது.

174. அந்த நியாயத்திற்கு வேறு பெயர் உண்டோ ?

உண்டு.

175. அஃது யாது ?

பிராம்மணபரிவ்ராஜகநியாயம் என்பது.

176. பரிவ்ராஜகர் என்பவர் யாவர் ?

ஸந்யாஸிகள்.

177. இம்மூன்றுவகைப்பட்ட ஸூத்ரங்களும் பொதுவாக எப்பெயரால் வழங்கப்படுகின்றன ?

கல்பஸூத்ரம் என்ற பெயரால்.

178. அதனுல்தான் வேதாங்கங்கள் ஆறனுள் அவை ஒன்ருகக் கூறப்பட்டனவோ ?

ஆம்.

179. அன்பரீர் ! ஏனைய வேதாங்கங்கள் யாவை ?

சிக்ஷை, வ்யாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜ்யோதிஷம் என்பன.

180. சிக்ஷை என்பது எதனைப்பற்றியது ?

எழுத்துக்களின் தன்மை, பகுப்பு, பிறக்குமிடம், ஒன்ருேடு மற்ருென்றைச் சேர்த்து ஒலிக்கும்போது நேரும் மாறுதல்கள் இவற்றைப்பற்றியது.

181. அதனை எழுத்ததிகாரம் எனக் கூறி விடலாமோ ?

கூறிவிடலாம்.

182. வ்யாகரணம் என்பது எதனைப்பற்றியது ?

சொற்களின் பாகுபாடு, சொற்கள் பகுதிவிகுதிகளால் ஆக்கப்படுதல், பகுதி தாது, ப்ரத்யயம் இவற்ருல் ஆக்

கப்படுதல், பெயரைப்பற்றிய வேற்றுமையுருபுகளும் அவற்றின் பொருளும், வினையைப்பற்றிய வினைவிகுதி களும் அவற்றின் பொருளும் இவை முதலியவற்றை வ்யாகரணம் கூறும்.

183. அதனைச் சொல்லதிகாரம் எனக் கூறிவிடலாமோ?

கூறிவிடலாம்.

184. சந்தஸ் என்பது எதைப்பற்றியது?

வேதத்தொடர்கள் ருக், யஜுஸ் என இருவகைப்பட்டன என்றும், அவற்றுள் ருக் என்பது செய்யுள் எனக் கூறினேன் அல்லவா, அச்செய்யுள்களுள், அடிகளின் வேறுபாடு, எழுத்துக்களின் வேறுபாடு முதலியன உள. அக்காரணம்பற்றி அவற்றிற்குப் பெயர்களும் வேறு படும். அவற்றைப்பற்றிக் கூறும் அந்நூல்.

185. அதனை யாப்பிலக்கணம் என்னலாமோ?

என்னலாம்.

186. நிருக்தம் என்பது யாது?

வேதங்களில் வழங்கப்பட்ட சொற்களின் அமைப்பைக் கூறி அவற்றின் பொருள்களை உதாரணங்களுடன் விளக்கும் நூல் நிருக்தம்.

187. அவை பல உள்ளனவோ?

பல இருந்திருக்கவேண்டும். தற்போது யாஸ்கர் இயற்றிய நிருக்தமே வழக்கில் உளது.

188. ஜ்யோதிஷம் என்பது யாது?

வானத்தில் உள்ள சூர்யன், சந்திரன், கிரஹங்கள், நக்ஷத்திரங்கள் இவற்றின் நிலையால் உண்டாகும் திதி முதலியவற்றைக் கூறும் நூல் ஜ்யோதிஷம் எனப்படும்.

189. கல்பஸூத்ரங்களை வேறு பெயராலும் வழங்குவாரோ?

அவற்றை ஸ்மிருதி என்று கூறுவதும் உண்டு.

190. வேதங்கள் ஸ்மிருதிகள் இவற்றைத் தவிர்த்து தர்மங்களைக் கூறும் நூல்கள் உள்ளனவோ?

உள்ளன.

191. அவை யாவை?

வால்மீகிபகவான் இயற்றிய ராமாயணத்திலிருந்தும் வ்யாஸபகவான் இயற்றிய மஹாபாரதம், 18 புராணங்கள் இவற்றிலிருந்தும் தர்மங்கள் அறியப்படுகின்றன.

192. வேறு எந்நூல்களிலிருந்தேனும் தர்மங்கள் அறியப்படுகின்றனவா?

ஆங்காங்குக் காவ்யங்களிலிருந்தும் தர்மங்கள் அறியப் படுகின்றன.

193. ஆக, வேதங்கள் நான்கு, அங்கங்கள் ஆறு, புராணங் கள், தர்மசாஸ்திரங்கள் இவை பன்னிரண்டும் வித்யை யின்பாற் படும் என நினைக்கிறேன்.

ஆம், அவற்றோடு மீமாம்ஸாசாஸ்திரத்தையும் நியாய சாஸ்திரத்தையும் சேர்த்து, வித்யை 14 என்பர். அவற் றோடு ஆயுர்வேதம், தனுர்வேதம், காந்தர்வவேதம், அர்த்தசாஸ்திரம் இவற்றையுஞ் சேர்த்து வித்யை 18 என்றுங் கூறுவர்.

194. ஆயுர்வேதம் எதனைப்பற்றிக் கூறும்?

வைத்தியத்தைப்பற்றிக் கூறும்.

195. தனுர்வேதம் எதனைப்பற்றிக் கூறும்?

போரில் வழங்கப்படும் வில் முதலியவற்றை உபயோ கிக்கும் முறை முதலியவற்றைக் கூறும்.

196. காந்தர்வவேதம் எதனைப்பற்றிக் கூறும்?

ஸங்கீதம், நர்த்தனம், நாட்டியம் முதலியவற்றைப் பற்றி கூறும்.

197. அர்த்தசாஸ்திரம் எதனைப்பற்றியது?

மக்கள் பொருளைத் தேடும் விதம், ஒருவர்க்கொருவர் நடந்துகொள்ளும் விதம், பொதுவாக எல்லா மக்களும் சிறப்பாக அரசனும் நாட்டைக் காக்கும் விதம், போற்றும் விதம், வளர்க்கும் விதம் இவற்றைப்பற்றி யது அர்த்தசாஸ்திரம்.

198. அப்போது ஆசிரியர் திருவள்ளுவனார் இயற்றிய பொருட் பால் அர்த்தசாஸ்திரந்தானே?

ஆம். அதற்கு என்ன ஐயம்?

199. காமசாஸ்திரத்தை 18 வித்யையில் சேர்க்கவில்லையே?

அதனை அர்த்தசாஸ்திரத்தின் ஒரு பகுதியாகவே கொண்டு அதுவும் 18 வித்யையில் சேர்க்கப்பட்டது என்னலாம்.

200. ஆக 18 வித்யையும் பிரமாண நூல்கள் எனக் கொள்ள வேண்டுமோ?

ஆம்.

## அத்தியாயம்—5

### மக்களின் பொதுதர்மங்களும், ஆச்ரமங்களின் தாரதமபாவமும், அவற்றை ஏற்றுக்கொள்வோரும்

201. வைதிகமதத்தின் கொள்கைகளைச் சுருக்கமாய்ச் சொல்ல இயலுமா?

இயலும். ஒரே வாக்கியத்தில் கொள்கைகள் அனைத்தையும் கூறியது வேதம்.

202. அப்படியா! அவ்வாக்கியம் யாது?

தர்மத்தைச் செய் என்பது.

203. இஃது எங்கு உளது?

தைத்திரியோபநிஷத்தில் உளது.

204. தர்மம் என்ற சொல் எவ்வாறு உண்டாயிற்று?

இருவகையாக அதற்கு வ்யுத்பத்தி கூறுவர்.

205. அவை யாவை?

த்ரியதே அநேந [1] என்பது ஒன்று.

206. அதற்குப் பொருள் யாது?

எதனுல் (உலகு) நிலைத்து இருக்கும்படி செய்யப்படுகின்றதோ என்பது.

207. மற்றொன்று யாது?

தரதி [2] என்பது.

208. அதற்குப் பொருள் யாது?

(உலகத்தை) எது தரிக்கின்றதோ என்பது.

209. உலகம் எதனுல் நிலைத்து இருக்கும்படிச் செய்யப்படுகின்றது?

உலகத்திலுள்ள மக்கள் எல்லோரும் அவரவருடைய கடமைகளைச் செயின், உலகம் நிலைத்து நிற்கும்.

210. எல்லாமக்களின் கடமைகளும் ஒன்றுக இருக்குமா?

சில ஒன்றுபடும்; சில வேறுபடும். ஒன்றுபடுவதை ஸாமாந்யதர்மம் என்றும், வேறுபடுவதை விசேஷ தர்மம் என்றுங் கூறுவர்.

1. ध्रियते अनेन 2. धरति

211. எல்லாமக்கட்கும் பொதுதர்மங்களுட் சிலவற்றைக் கூறுமின்.

தைத்திரீயோபநிஷத்தில் கூறிய சிலவற்றைக் கூறுகின்றேன் கேண்மின் :—தாயைத் தெய்வமாகக் கொள் ; தகப்பனைத் தெய்வமாகக் கொள் ; ஆசிரியனைத் தெய்வமாகக் கொள் ; விருந்தினரைத் தெய்வமாகக் கொள் ; குற்றமற்ற செயல்களைச் செய் ; குற்றமுள்ளவற்றைச் செய்யாதே ; நம்மைக் காட்டிலும் சிறந்த பிராம்மணர் வரின், அவர்க்கு மரியாதையாய் ஆஸனங்கொடு ; செயல்களிலோ, நடத்தையிலோ ஐயம் வரின், அங்கே விமர்சகராயும், ஈடுபட்டவராயும், பேராசையற்றவராயும், தர்மத்தில் அன்புள்ளவராயும் இருக்கும் பிராம்மணர்கள் எவற்றைக் கொள்வாரோ அவற்றைக் கொள். அவ்வாறே கணவனும் மனைவியும் ஒருவர்க்கொருவர் நடந்துகொள்ளும் விதத்தில் அனுஷ்டிக்கவேண்டிய தர்மங்களும் எல்லா வர்ணத்தார்க்கும் பொதுவாகும். அவற்றைப் பின்னர்க் கவனிப்போம்.

212. விசேஷதர்மங்கள் ஒவ்வொரு வர்ணத்தார்க்கும் ஒவ்வொரு ஆச்ரமத்தார்க்கும் வேறுபட்டு நிற்கும் என நினைக்கிறேன்.

ஆம். அவை வேறுபட்டனவே.

213. ஆச்ரமங்கள் நான்கு எனக் கூறினீர். ஒவ்வொரு வர்ணத்தார்க்கும் அவை நான்கும் உளவா ?

எல்லா வர்ணத்தார்க்கும் நான்கும் உள எனக் கூற இயலாது.

214. பிராம்மணர்களுக்கு ஆச்ரமங்கள் எத்தனை ?
நான்கு.

215. எல்லாப் பிராம்மணர்களும் நான்கு ஆச்ரமங்களையுங் கொள்ளத் தகுந்தவரா ?

நான்காவது ஆச்ரமமாகிய ஸந்நியாஸத்தைக் கொள்ள அவரிடம் சில தகுதி வேண்டும்.

216. அவை யாவை ?

கடவுளே அஜன் என்ற விவேகமும், மண்ணாசை பெண்ணாசை, மக்களாசை, ஸ்வர்க்கத்தில் வசிக்கும் ஆசை இவற்றின் இன்மையும், இந்திரியங்களை அடக்குதல் இன்பதுன்பங்களில் மாறுபாடின்மை, மனம் கடவுளிடத்து ஒன்றுபடுதல் இவையும், மோக்ஷம் அடைய வேண்டும் என்ற விருப்பமும் பிராம்மணன் ஸந்நியாஸங் கொள்வதற்குமுன் அடையவேண்டிய தன்மைகள்.

217. ஆச்ரமங்களை முறையாகவே பிராம்மணன் கொள்ள வேண்டுமா, முறைபிறழ்ந்தும் கொள்ளலாமா?

முறையாகக் கொள்வது தான் பெரும்பான்மை. சிறுபான்மையில் பிரும்மசாரியாயிருக்கும்போதோ, கிருஹஸ்தனாய் இருக்கும்போதோ, வைராக்யம் வரின் உடனே ஸந்நியாஸி ஆய்விடலாம் என ஜாபாலோபநிஷத்து கூறுகின்றது.

218. ஆகப் பிரம்மசர்யம் அவசியம் எனத் தோன்றுகின்றது.

ஆம். அவச்யம் தான்.

219. ஒருவன் ஆயுள் முடிய பிரும்மசாரியாகவே இருந்துவிடலாமா?

இருந்துவிடலாம். அவனுக்கு நைஷ்டிகபிரும்மசாரி என்று பெயர்.

220. ஒருவன் பிரும்மசர்யத்திற்குப் பின்னர் கிருஹஸ்தாச்ரமத்தைப் பெற்று கிருஹஸ்தனாகவே இருப்பின், அவனுக்கு மோக்ஷம் உண்டா?

பிரும்மசர்யத்தை முறைப்படி அனுஷ்டித்து, மனைவியை மணந்து, வேதம் ஓதி, கடமைகளை நன்கு செய்து, இந்திரியங்களைத் தக்கவாறு அடக்கி, வேதத்திற் கூறப்பட்ட இடங்களில் தவிர மற்றவிடங்களில் அஹிம்ஸையை ஆயுள் முடிய அநுஷ்டித்தால், அவன் மோக்ஷத்தை அடைகிறான் எனச் சாந்தோக்கியம் கூறுகின்றது.

221. ஞானத்தாலேயே மோக்ஷம் அடைகின்றான் என்பதற்கு இது முரண்பாடு ஆகாதோ?

ஆகாது எனவே கூறல் வேண்டும். விரைவில் ஞானம் உதிக்க, மோக்ஷம் அடைகின்றான் எனக் கொள்ளின் யாது முரண்பாடு? அன்றியும் ஆசை ஒழியின், விடு வரும் எனக் கூறியிருத்தலின், இவர் கிருஹஸ்ததர்மங்களை நடத்துதல் தமது கடமை என நடத்துகின்றனரே யன்றி, அவற்றைப் பற்றுேடு நடத்தவில்லை என்று கொள்ளல் வேண்டும். அவ்வாறு விந்தியமலையின் அடிவாரத்தில் நைமிசத்தில் சில கிருஹஸ்தர்கள் இருந்து புண்யலோகத்தை அடைந்ததாக மகாபாரதம் அநுசாஸனபர்வம் 209 ஸர்க்கம் கூறுகின்றது.[1]

1. अतिथीनामभिमुखं तत्परत्वं च सर्वदा ।
हिंसाद्रोहविमुक्ताश्च सर्वभूतानुकम्पिनः ॥
स्वदारसहिता देवि चरन्ति व्रतमुत्तमम् ।
ते स्वदाराः समायान्ति पुण्याँल्लोकान् दृढव्रताः ॥ (34, 40)

222. அவ்வாறுயின் ஆச்ரமங்களுள் சிறந்தது யாது?

அவரவருடைய மனப்பான்மைக்குத் தக்கவாறு ஒவ்வொரு ஆச்ரமும் சிறந்ததுதான். இருப்பினும் ஸந்யாஸம் தான் சிறந்தது என்பது பலருடைய கொள்கை. ஆனால் சிலர் கிருஹஸ்தாச்ரமம்தான் சிறந்தது என்பர்.

223. அதற்குக் காரணம் யாது?

ஏனைய ஆச்ரமத்தாரைக் காக்கும் பொறுப்பு கிருஹஸ்தரிடம் இருக்கின்றமையே அதற்குக் காரணம்.

224. இவ்வாறு எங்குக் கூறப்பட்டது?

வேதவ்யாஸர் இயற்றிய மஹாபாரதத்தின் சாந்திபர்வத்திலும், அநுசாஸனபர்வத்திலும், திருக்குறளிலும், கூறப்பட்டுள்ளன[1]. கௌதமதர்மஸூத்திரத்தில் கிருஹஸ்தாச்ரமமே சிறந்தது என ஆசிரியர் கூறினார் என்றும் அதனையே ஏனைய ஆச்ரமங்கள் அண்டியிருக்கின்றன என்றும் கூறப்பட்டது[2].

225. க்ஷத்திரியர்கட்கு ஆச்ரமங்கள் எத்தனை?

மூன்று ஆச்ரமங்கள் எனவே தோன்றுகின்றன. பிராம்மணன் நிர்வேதம் அடையட்டும் என்ற பிருஹதாரண்யகத்தொடரால் ஸந்யாஸம் பிராம்மணனைத் தவிர்த்து ஏனையோர்க்கு இல்லை.

226. அன்பிர்! அஹிம்ஸை என்பது கௌதமபுத்தரால் புதிதாய் ஆளப்பட்ட கொள்கையன்றோ?

அவ்வாறு இல்லை எனத் தோன்றுகின்றது.

227. அதற்குக் காரணம் யாது?

வேதங்களிற் கூறப்பட்ட கர்மாக்களில் தவிர, ஏனைய விடத்தில் அஹிம்ஸையைக் கொள்ளவேண்டும் எனச் சாந்தோக்யம் கூறுகின்றது. வேதத்தின் சில பாகத்தை அவர் பிரமாணமாக ஏற்றுக்கொள்ளாமையால் அந்த

1. एवं गार्हस्थ्यमाश्रित्य वर्तन्ते इतराश्रमाः । (म. भा. शा. 269, 6).
एवमाश्रमिणः सर्वे गृहस्थे यान्ति संस्थितिम् । (*ibid* 295, 39)
यथा मातरमाश्रित्य सर्वे जीवन्ति जन्तवः ।
तथा गृहस्थाश्रमं प्राप्य सर्वे जीवन्ति चाश्रमाः (*ibid* अनु. 211, 49)
இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை. (அறம். 41)
2. ऐकाश्रम्यं त्वाचार्यः प्रत्यक्षविधानात् गार्हस्थ्यस्य गार्हस्थ्यस्य (4, 36)
तेषां गृहस्थो योनिरप्रजनत्वादितरेषाम् (3, 3)

அடைமொழியை நீக்கி அவர் அஹிம்ஸையைக் கொண்டனரோ எனத் தோன்றுகின்றது.

228. வேதங்களிற் கூறப்பட்ட எவற்றைக் கௌதமபுத்தர் ஏற்றுக்கொள்ளவில்லை?

யாகங்களை ஏற்றுக் கொள்ளவில்லை. எல்லா வர்ணத்தாரும் ஆணும் பெண்ணும் ஸந்நியாஸாச்ரமத்தைக் கொள்ளலாம் என்றனர். இவ்விரண்டுந்தான் சிறந்த வேறுபாடு. அவருடைய கொள்கைகளைக்கூறும் வடமொழி நூல்களைப் படித்துப் பார்த்தால், மற்ற வேறுபாடுகள் அதிகமாய் இல்லை என்றே தோன்றுகின்றது.

229. அஹிம்ஸையைக் கைக்கொள்ளும் புத்தமதம் சிறந்ததன்று?

சிறந்ததுதான். ஆனால் பிறர் கொன்ற பிராணியின் மாமிசத்தை அவர் உட்கொள்வது நேரிதன்று. கௌதம புத்தரே பன்றிமாமிசத்தை மிகுதியாய் உட்கொண்டு இறந்தனர் என்பர்.

230. ஏன்! அவர் கொல்லவில்லையே! அதனுற் குற்றம் யாது? அவர் உண்ணுவிடில், பிறர்கொல்லார். ஆகலின் அது குற்றமே யாகும் எனத் திருக்குறளாசிரியர்

> தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும்
> விலைப்பொருட்டா லூன்றருவா ரில்

என்ற குறளிற் கூறுகின்றனர்.

231. புத்தமதத்தில் உள்ள ஏனைய குற்றம் யாவை?

அறிவு, அன்பு, ஆனந்தம் இவையே வடிவமாயுள்ள கடவுள் ஒன்று உண்டு என ஒத்துக்கொள்ளாமை, மோக்ஷம் ஆனந்தஸ்வரூபம் என ஒத்துக்கொள்ளாமை இவைபோல்வன.

232. வைசியர்களுக்கு ஆச்ரமங்கள் யாவை?

இரண்டு.

233. அவை யாவை?

பிரும்மசர்யம், கார்ஹஸ்தியம் என்பன.

234. சூத்திரர்க்கு ஆச்ரமங்கள் யாவை?

வைதிககாலத்தில் அவர்க்கு ஆச்ரமம் ஒன்றே.

235. அஃது யாது?

கார்ஹஸ்த்யமே.

236. அவர்க்குப் பிரும்மசர்யம் இல்லையா ?

இல்லை.

237. ஏன் ?

வேதத்தை நியமத்துடன் படித்தல் அவர்க்கு இன்மையான்.

238. வேதத்தைப் படியாமல் இருப்பினும் அவர்கள் வேதப் பொருளை அறியலாமோ ?

அவர்களும் எல்லா வர்ணத்துப்பெண்மக்களும் வேதத்திற் கூறப்பட்ட கருத்துக்களைத் தெரிந்துகொள்ள, அவற்றை மஹாபாரதத்திலும் 18 புராணங்களிலும் வேதவ்யாஸர் கூறினர்.

239. எல்லாப் பெண்மக்கட்கும் வேதத்தை நியதியாய்ப் படிப்பதை ஏன் கூறவில்லை ?

அதற்குப் பல காரணங்கள். முதன்முதலில் குருவீட்டிற்குச் சென்று அங்கு படித்தல் இயலாது. அன்றியும் அவர் சில காலங்களில் அசுத்தர்களாக இருப்பர். சில வேளை பல மாதங்கள் அசுத்தராவர். அவர் நியமத்துடன் வேதங்களைப் படிப்பின் வீட்டில் செய்ய வேண்டிய கார்யங்களைக் கற்றுக்கொள்ளவும் முடியாது. செவ்வனே அவற்றைச் செய்யவும் முடியாது. மக்களைப் பிரஸவித்தல் முதலிய தன்மையைக் கடவுள் அவர்க்கு இட்டிருப்பதால், அவர்க்கு ஸ்தூலசரீரத்தின் தெம்பு வேண்டும். மக்களைப் பிரஸவித்தவுடன் அவரை வளர்க்கவேண்டிய முறைகளைக் கற்கவேண்டும். அக்காரணம்பற்றியே பெண்டிர் தம் கடமையைச் செவ்வனே செய்தற்குத் தாய்மாரும், பருவம் அடையும் வரை அவர் தம் வீட்டில் வந்து ஆசிரியரும் அவர்களுக்குக் கற்பித்தனர்.

240. பருவகாலம் அடைந்தபிறகு ஆசிரியரிடத்திற் படிக்கவில்லை எனக் கூறுதற்குக் காரணம் யாது ?

நேரில் ஓரிடத்திலும் அவ்வாறு கூறியதாகத் தெரியவில்லை. ஆனால் காளிதாஸன், பார்வதி வித்தைகளை ஆசிரியனிடங் கற்றனள் என்று கூறிய ச்லோகத்தின் பின்னர் அவள் பருவமடைந்தனள் என வர்ணிக்கின்றனர். அதனை நோக்கின் பருவமடைந்த பின்னர் ஆசிரியனிடம் அவர் வித்தை கற்கவில்லை என ஊஹிக்க இடம் இருக்கின்றது.

241. ஆகலின் பெண்களுக்குப் படிப்பு இருந்தது என்கின்றீரா ?

அதற்கு என்ன ஐயம்! ஒழிந்த காலங்களில் ராமாயணம், மஹாபாரதம் புராணங்கள் இவற்றைப் படித்துத் தாம் அறிவதோடு நில்லாமல் குழந்தைகட்கு அக்கதைகளை எளிய நடையில் கூறியும் வந்தனர். அன்றியும் கேள்வியால் அவர்கள் அறிந்தது படித்ததால் அறிந்ததைவிடப் பன்மடங்கு அதிகமானது.

242. எல்லாவர்ணத்துள்ள பெண்களுக்கும் பெரும்பாலும் கடமைகள் ஒன்றுபட்டனவோ?

ஆம், ஒன்றுபட்டனவாகத்தான் தோன்றுகின்றது.

243. பெண்களுக்குள் ஆச்ரமங்கள் எத்தனை?

ஒன்றுதான்.

244. அஃது யாது?

கார்ஹஸ்த்யம்தான்.

## அத்தியாயம்—6

### ஸ்திரீதர்மம்

245. அவர்களுக்குச் சிறந்த தர்மம் யாது?

பாதிவ்ரத்யம்தான்.

246. பாதிவ்ரத்யம் என்ற சொற்குப் பொருள் யாது?

கணவனையே தெய்வமாகக் கொள்ளும் தன்மை என்பது பொருள்.

247. அதற்குச் சான்று யாது?

மகாபாரதத்தில் பல்லிடங்களிற் கூறப்பட்டுள்ளது.

பதிவ்ரதாத்வம் நாரீணாம் ஏததேவ ஸநாதனம் [1]

என்றும்

பதிர்ஹி தைவதம் ஸ்த்ரீணாம் ......
நாந்யம் கதிமஹம் பச்யே ப்ரமாதாயா யதா பதி: [2]

என்றும்

அநுசாஸனபர்வத்திற் கூறப்பட்டுளது.

248. இக்கருத்தையே ஆசிரியர் திருவள்ளுவருங் கூறுகின்றனரோ?

ஆம், அவர் அவ்வாறு இருப்பின் அவர்க்கு உண்டாகும் சக்தியையுங் கூறியிருக்கிறார்.

249. அக்குறள் யாது?

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்.
தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை.

என்று குறள்களிற் கூறப்பட்டது.

250. அன்பரீர், இங்கு எனக்கு ஓர் ஐயம்.

அஃது யாது?

1. पतिव्रतात्वं नारीणामेतदेव सनातनम् (249, 12)
2. पतिर्हि दैवतं स्त्रीणां पतिर्बन्धुः पतिर्गतिः ।
नान्यं गतिमहं पश्ये प्रमदाया यथा पतिः ॥ (250, 25)

251. பெண்டிர்க்கு மாத்திரம் கற்பு வேண்டும் எனச் சாஸ்திரம் விதிக்கின்றதே, கணவர்க்கு மனைவியிடமே அன்பு இருக்கவேண்டும் என விதிக்கலாகாதா?

விதித்திருக்கின்றதே.

252. எங்கு?

தர்மசாஸ்திரத்தில் பிறர் மனைவியைக் கண்ணாலும் பார்த்தல் தகாது [1] எனவும், மஹாபாரதத்தில் எல்லா வர்ணத்தாரும் பிறன்மனையாளைத் தீண்டல் தகாது, அஃது அவனது ஆயுளைக் குறைப்பதுபோல் வேறொன்றுங் குறைக்காது எனவும், [2] எவன் தன் மனைவியை விட்டுப் பிறன்மனைவியைத் தீண்டுகின்றானோ அவன் ப்ரளயகாலம்வரை நரகத்திலிருந்து நீங்கான் [3] எனவும், தன் மனைவியைத் தீண்டி அடங்காது பிறன்மனையாளைத் தீண்டுகின்றவன் அவமதிக்கப்படுவான் [4] என்று ராமாயணத்திலும் கூறப்பட்டுள்ளன.

253. இக்கருத்தைக் கொண்ட குறள் உண்டோ?

உண்டு.

254. அஃது யாது?

> பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
> அறனொன்றோ வான்ற வொழுக்கு.

என்பது ஒரு குறள். இதுபோன்று மற்றும் ஒன்பது குறள்கள் உள. அவற்றைப் பிறனில்விழையாமை என்ற அதிகாரத்துட் காணலாம்.

255. ஒழுக்கத்தோடு இருக்கும் கணவனைத் தெய்வமாக மனைவி கொள்ளவேண்டும் எனின், பொருந்தும். கணவன் ஒழுக்கமில்லாதவனாக இருப்பின் அவ்வாறு இருக்க வேண்டும் என்பது எவ்வாறு பொருந்தும்?

நீவிர் எழுப்பிய வினா சிறந்ததுதான், ஆயினும் கணவன் எவ்வாறு இருப்பினும் அவனையே தெய்வமாகக்

1. न परदारान् वीक्षेत
2. परदारा न गन्तव्याः सर्ववर्णेषु कर्हि चित् ।
   न हीदृशमनायुष्यं लोके किञ्चन विद्यते ॥ (अनु. 161, 21)
3. यः स्वदारान् परित्यज्य पारक्यां सेवते स्त्रियम् ।
   निरयान्नैव मुच्येत यावदाभूतसम्प्लवम् ॥ (आदि. 103, 7)
4. अतुष्टं स्वेषु दारेषु चपलं चलितेन्द्रियम् ।
   नयन्ति निकृतिप्रज्ञं परदाराः पराभवम् ॥ (सुन्दर. 21, 8)

கொள்ளவேண்டும் என ஸீதாபிராட்டி கூறுகிருள் அது பின்வருமாறு :—

கணவன் நகரத்திலிருப்பினும், காட்டிலிருப்பினும், நல்லவனுயிருப்பினும், கெட்டவனுயிருப்பினும், அவனை எப்பெண் தெய்வமாகக் கொண்டாடுகிருளோ அவள் நல்ல கதியை அடைகிருள்[1] என்பதும், ஏழையாயிருப்பினும், ராஜ்யத்தினின்று நீங்கி இருப்பினும் என்னுடைய கணவனே எனக்கு தெய்வம்[2] என்பதுமே.

256. ஸீதாபிராட்டி கூறினல் என் ? அதனை நாம் கொள்ள வேண்டும் என்ற நியதி உண்டா ?

வால்மீகிருஷி யன்ருே அவள்முகத்தாற் கூறுகின்றனர். ஆகலின் அஃது ருஷியின் கருத்தே ஆகும்.

257. பெண்டிரைப்பற்றி ருக்வேதஸம்ஹிதையிலிருந்து ஏதேனும் அறியப்படுகின்றதா ?

பல அறியப்படுகின்றன.

258. அவை யாவை ?

கணவன் மனைவியிடம் அன்புடன் இருப்பின், அவள் குற்றமற்று வாழ்ந்து வந்தாள். இருவரும் மனமொத்து வாழ்தல் வேண்டும் எனத் தேவதைகளைத் துதித்தனர். அவ்வாறு இருப்பின் மனைவியர் உடலை அலங்கரித்துக் கொண்டும் மக்களிப்புடனும் வாழ்ந்தனர். பல மனைவியரை ஆண்மக்கள் மணப்பின், அவரால் அவர் துன்புற்றனர். அம்மனைவியர் ஒருவருக்கொருவர் துன்பம் விளைவித்துக் கணவனைத் தன்வசமாக்க முயன்றனர். கணவன் பிறரை நேசியாமல் தன்னையே நேசிக்குமாறு. மூலிகாப்பிரயோகங்களை வழங்கினர். கணவன் சூதாட்டத்தில் ஈடுபட்டு சொத்துக்களை இழப்பினும், அவனிடம் கோபத்தைக் காட்டாது அவனுக்குத் தொண்டு செய்வதிலும், அவன் நண்பரைக் கூட்டிவரின் அவர்க்கு மனவேறுபாடின்றி உணவு அளித்தலிலும் மனைவி ஈடுபட்டனள். தம்பதிகட்கு ஆண்மகன் பிறந்தபின் கணவன் இறப்பின் அவனுடன் மனைவி விரும்பின் உடன் கட்டை ஏறினள். உடன்கட்டை ஏருது விதவையாக இருந்தவரும் உண்டு.

1. नगरस्थो वा वनस्थो वा शुभो वा यदि वाशुभः ।
यासां स्त्रीणां प्रियो भर्ता तासां लोका महोदयाः ॥ (अयो. 117, 22-23
2. दीनो वा राज्यहीनो वा यो मे भर्ता स मे गुरुः ।
तं नित्यमनुरक्तास्मि यथा सूर्यं सुवर्चला ॥ (सुन्दर. 24, 9)

259. கணவனைத் தெய்வமாகக் கொள்ளுதல் என்றதன் கருத்தை விளக்கமாகக் கூறுமின்.

அதனை மகாபாரதத்தில் வனபர்வாவில் விளக்கமாய்க் கூறியிருக்கின்றனர். அவற்றிற் சிலவற்றைக் கூறுகின்றேன் கேண்மின். கணவன் இல்லறத்தை நிகழ்த்தச் செய்யவேண்டியவற்றுள் எல்லாம் தான் முழுமனத்துடன் பங்கிட்டுக்கொள்ளவேண்டும். தந்தை தாயரைப் போற்றுவது புதல்வரின் கடமை. அக்கடமை அவர்தம் மனைவியர்க்கும் உண்டு.[1] விருந்தினரை உபசரித்தல் கணவரின் கடமை. அக்கடமை மனைவியர்க்கும் உண்டு.[2] தங்களிடம் உள்ள வேலைக்காரர்கள் ஆடுமாடுகள் முதலியவற்றிற்குத் தக்கவாறு உணவு முதலியன அளித்தல் கணவரின் கடமை. அக்கடமை மனைவியர்க்கும் உண்டு. மறுநாட் செலவிற்குவேண்டிய பணம் உணவுப் பொருள்கள் முதலியன இருக்கின்றனவா என முன்னெளிரவிலே கவனிக்கவேண்டியது கணவரின் கடமை. அக்கடமை மனைவியர்க்கும் உண்டு. இவற்றையெல்லாம் தான் செய்வதாகவும் அக்காரணம் பற்றியே தனது கணவர்கள் தன்னிடம் அன்புற்று இருக்கின்றனர் எனவும் திரௌபதி சொல்லுகின்றாள். அன்றியும் வேலைக்காரர் சுத்தஞ்செய்த பாத்திரங்களெல்லாம் சுத்தமாக இருக்கின்றனவா என மறுபடியும் மனைவி பார்க்க வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது.

260. அங்கு இவற்றைப்பற்றிக் கூறத் தருணம் யாது?

பாண்டவர்கள் வனத்தில் இருக்கும்போது கண்ணன் ஸத்யபாமையுடன் அவரைக் காண வந்தனர். அப்போது பாண்டவர் அனைவரும் த்ரௌபதியினிடம் அன்போடு இருப்பதை ஸத்யபாமை கண்டு வியந்து அதற்குக் காரணத்தை வினவுகிறாள். அப்போது இவற்றைக் கூறுகின்றாள் திரௌபதி.

261. பெண்டிர்க்கு வைதவ்யம் வருவதைத் தடுக்க உபாயம் உண்டோ?

1. नित्यमार्यामहं कुन्तीं वीरसूं सत्यवादिनीम् ।
स्वयं परिचराम्येतां पानाच्छादनभोजनैः ॥ (म. भा. वन. 233, 40)

2. मान्यानां मानसत्कारा ये चान्ये विदिता मम ।
तान्सर्वाननुवर्तामि दिवारात्रमतन्द्रिता ॥ (म. भा. वन. 233, 34)

உண்டு ஒவ்வொருநாளும் காலையில் சூர்யனைக்குறித்து அர்க்கியம் கொடுப்பது ஓர் உபாயம் ஆகும்.[1]

262. ஒத்த அன்பின் பயன் யாது?

உத்தமமான மக்களைப் பெறுதலே அதன் பயன் எனத் தோன்றுகிறது.

263. அதற்குச் சான்று யாது?

மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு

என்ற குறளை நீர் மறந்தீரோ?

264. ஒத்த அன்பு பெரும்பாலும் எப்போது நிகழும்?

இருவர்க்கும் குலம், சீலம், உருவம், வயது முதலிய வற்றில் ஒற்றுமையே தக்க காரணம் ஆகும்.

265. குலம், சீலம் இவற்றை முதலிற் கூறுவானேன்? உருவம் வயது இவற்றைப் பின்னர்க் கூறுவானேன்?

உமது கேள்வி சிறந்ததுதான். அதற்கு விடை நூல்களில் எங்குக் கூறப்பட்டிருக்கின்றதோ எனக்கு விளங்கவில்லை. அதற்குக் காரணம் யாது என எனக்குப் புலப்படுகின்றதைக் கூறுகின்றேன், கேண்மின். சரீரம், ஸ்தூலசரீரம் ஸூக்ஷ்மசரீரம் என இருவகைப்படும் என்றும், ஸூக்ஷ்மசரீரம் ஸ்தூலசரீரத்தைப்போல் ஒவ்வொரு பிறப்பிலும் அழியாது என்றும் முன்னர் நான் கூறியது உமக்கு ஞாபகம் இருக்கலாம். அவ்விரண்டனுள் ஸூக்ஷ்மசரீரம் ஸ்தூலசரீரத்தைக் காட்டிலுஞ் சிறந்தது என்ற காரணம்பற்றிக் குலம் சீலம் இவ்விரண்டனையும் முன்னர்க் கூறியிருக்கலாம்.

266. பூப்பு தோன்றிய பின்னரும் பெண்டிர்க்கு மணம் நிகழாமல் இருந்திருக்கிறதா?

பெரும்பான்மை இல்லை என்றே சொல்லலாம்.

267. அதற்குச் சான்று யாது?

பூப்பு முதன்முதல் தோன்றுவதற்கு முன்னர் பெண்களைக் கணவர்க்குத் தானம் செய்யவேண்டும் என, கௌதமதர்மஸூத்ரத்திற் கூறப்பட்டது.[2]

1. प्रातःकालेषु या नारी दद्यादर्घ्यं विवस्वते ।
सप्तजन्मसु वैधव्यं सा नारी नैव पश्यति ॥
नमो विवस्वते ब्रह्मन् भास्वते विष्णुतेजसे ।
जगत्प्रसवित्रे सूर्याय सवित्रे कर्मदायिने ॥ (मन्त्रमाधवीये)

2. प्रदानं प्रागृतोः (18, 22)

268. அவ்வாறு தகப்பன் தானஞ் செய்யாவிடின், பெண்கள் நடக்கவேண்டிய முறை யாது?

பூப்பு மும்முறை நிகழ்ந்தபின்னரும், அவரை அவர் தானஞ் செய்யாவிடின், பெண்கள் தகப்பன்தாயார் கொடுக்கும் அணிகள் முதலியவற்றைப் பெற்றுக்கொள் ளாது தாமே கணவனைத் தேடிக்கொள்ளலாம் எனக் கௌதமர் கூறுகின்றார்.[1] மூன்று ஆண்டுகள் வரையில் காத்திருக்கலாம் எனக் கூறுகின்றனர் போதாயனர் முதலிய ஏனையோர்.[2]

269. பூப்பு தோன்றிய பெண்ணைக் கன்யா எனக் கூப்பிட லாமா?

எட்டு வயதுள்ள பெண்ணையே கன்யா எனக் கூறுகின்றனர் பராசரர்.[3] ஆனால் சாஸ்திரப்படி கண வனிடம் தானம் செய்யப்படாத பெண்ணைக் கன்யா எனக் கூறலாம் எனப் பதஞ்சலி பகவான் கந்யாயா: கநீந ச (4, 1, 116) என்ற சூத்திரத்தின் பாஷ்யத்தில் கூறுகின்றார்.[4]

270. பூப்பு தோன்றிய பெண்ணை மணஞ் செய்விப்பது எப்படி?

கன்னியைத் தானஞ் செய்வதற்கு முன் எவ்வளவு முறை பூப்பு தோன்றி யிருக்கின்றதோ அவ்வளவு கோக்களைத் தானஞ் செய்யவேண்டும் கன்னியின் தகப் பன். அவளைப் பெற்றுகொண்டதற்காக ஒரு கூச் மாண்டஹோமம் செய்யவேண்டும் கொண்டவன்.

271. இதற்குச் சான்று யாது?

ஸ்மிருதிகள் தான்.

1. त्रीन् कुमारी ऋतूनतीत्य स्वयं युज्येत अनिन्दितेन उत्सृज्य पित्र्यानलङ्कारान् (18, 21)

2. त्रीणि वर्षाण्यृतुमती यः कन्यां न प्रयच्छति ।
स तुल्यं भ्रूणहत्यायै दोषमृच्छत्यसंशयम् ॥ (4, 1, 13)
त्रीणि वर्षाण्यृतुमती काङ्क्षेत पितृशासनम् ।
ततश्चतुर्थे वर्षे तु विन्देत सदृशं पतिम् ॥ (4, 1, 14)

3. अष्टवर्षा भवेत्कन्या नववर्षा तु रोहिणी ।
दशवर्षा तु गौरी स्यादत ऊर्ध्वं रजस्वला ॥

4. कन्याशब्दोऽयं पुंसाभिसम्बन्धपूर्वके संप्रयोगे निवर्तते

272. பெண்டிர் கணவனோடு எக்காலத்தில் புணரக்கூடாது?
விவாஹத்தில் மூன்று நாளும், ருதுகாலத்தில் மூன்று நாளும், அமாவாஸ்யை பௌர்ணமி ச்ராத்ததினங்கள் இவற்றிலும் தம்பதிகள் சேர்தல் தகாது.[1]

273. இவ்வாறு எங்கு கூறப்பட்டது?
பௌதாயனகிருஹ்யஸூத்திரத்தில்[1]

274. மாதவிடாய்க் காலத்தில் ஏன் பெண்டிர் தூரத்தில் இருக்கவேண்டும் என்கின்றனர்?
அவர்களைத் தொட்டால் உடையுடன் ஸ்நானம் செய்ய வேண்டும் என்றே கௌதமதர்மஸூத்திரத்துள் கூறப்பட்டது.[2] பக்கத்தில் அவர் இருப்பதால் சில தவறுகள் நேர்ந்திருக்க, அவற்றை நீக்க வெகு தூரத்தில் இருத்தல் வேண்டும் என ஆபஸ்தம்பர் கூறியிருத்தல் கூடும்.

---

1. अथाधिब्रह्मचर्यम्, विवाहे त्रिरात्रम्, ऋतौ त्रिरात्रम्, अमावास्यायां पौर्णमास्यां श्राद्धं दत्वा च भुक्त्वा च एकरात्रम् (1, 1, 8-11).
2. पतितचण्डालसूतिकोदक्याशवस्पृष्टितत्स्पृष्ट्युपस्पर्शने सचेलोदकोपस्पर्शनाच्छुध्येत्

## அத்தியாயம்—7

### மக்களின் பொதுதர்மம்

275. அன்பரீர்! எல்லா வருணத்து ஆண்மக்கள் பெண் மக்கள் இவ்வனைவர்க்கும் பொதுவாக தர்மங்கள் உள்ளனவோ?

உள்ளன.

276. அவை யாவை?

தயை என்பது முதலான தர்மம்.

277. தயை என்றால் யாது? விளக்கமாய்க் கூறுமின்.

பிறரைத் தம்மைப்போல் பாவித்தலே தயை ஆகும். பிறர் நமக்குத் துன்பம் விளைவித்தால் நாம் எவ்வாறு வருந்துவோமோ, அவ்வாறே நாம் பிறர்க்குத் துன்பம் விளைவித்தால் அவரும் வருந்துவர் என நினைத்து அவர்க்குத் துன்பத்தை செய்யாதிருத்தல். அவர் துன் புற்று வருந்தும்போது அவரிடம் மனமிளகி இருத்தல். இதனையே தயை என்ற சொல்லாற் குறித்தனர் பெரியோர்.[1]

278. இதனைத்தான் அருள் என்ற சொல்லால் ஆசிரியர் திருவள்ளுவனார் குறிப்பிடுகின்றனரோ?

ஆம். நன்கு கண்டுபிடித்தீர்.

279. ஆங்கு எக்குறளால் தயையின் இலக்கணத்தைக் கூறு கின்றனர்?

> வலியார்முற் றன்னை நினைக்கதான் றன்னின்
> மெலியார்மேற் செல்லு மிடத்து.

என்ற குறள்தான் தயையின் இலக்கணத்தைக் கூறுகின்றது.

280. இங்கு எனக்கு ஓர் ஐயம்.

அஃது யாது?

281. அருளுடைமையை ஆசிரியர் திருவள்ளுவனார் துறவற வியலில் அன்றோ கூறியிருக்கிறார். நீர் எல்லா மக்கட் கும் அது பொது தர்மம் என்கின்றீரே.

1. आत्मवत्सर्वभूतेषु यद्हिताय हिताय च ।
वर्तते सन्ततं हृष्टः कृत्स्ना ह्येषा दया स्मृता ॥

நீர் கூறுவது உண்மைதான். ஆயினும் பொதுதர்ம மாக அதனைக் கொள்ளலாம் என்றே கௌதமதர்ம ஸூத்திரத்தில் ஆத்மகுணங்கள் எட்டனுள் முதன்மை யாக அது கூறப்பட்டது.

282. அருளின் பயன் யாதெனத் திருக்குறளாசிரியர் கூறு கின்றனர் ?

அருளுடையோர் இறந்தபின் நல்லுலகினை எய்துவர் என்றும், அருளில்லாதார் நல்லுலகம் அடையார் என்றும் கூறுகின்றனர்.

283. அக்குறள்கள் யாவை ?

> அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை யிருள்சேர்ந்த
> இன்னா வுலகம் புகல்.
> அருளில்லார்க் கவ்வுலக மில்லை [1]

284. இரண்டாவது தர்மம் யாது ?

பொறுமை என்பது இரண்டாவது தர்மம்.

285. பொறுமை என்றால் என்ன ?

நமக்குப் பிறர் மனம் வாக்கு காயம் இவற்றால் தீங்கு செயின், அதனைப் பொருட்படுத்தாது, அதனை நினைத் திராது, அதற்குப் பிரதியாக நாம் அவர்க்குத் தீங்கு செய்யாது இருத்தல் பொறுமை ஆகும்.

286. இதனைத்தான் பொறை என்ற சொல்லால் திருக்குற ளாசிரியர் குறிக்கின்றாரோ ?

ஆம்.

287. இதன் இலக்கணத்தை எக்குறளில் திருக்குறளாசிரியர் உணர்த்தினர் ?

> திறனல்ல தற்பிறர் செய்யினு நோநொந்து
> அறனல்ல செய்யாமை நன்று.

என்ற குறளே அதன் இலக்கணத்தைக் கூறுகின்றது.

288. வடமொழியில் இதன் இலக்கணம் எவ்வாறு கூறப் பட்டது ?

1. अथ अष्टौ आत्मगुणाः । दया सर्वभूतेषु क्षान्तिरनसूया शौचमनायासो मङ्गलमकार्पण्यमस्पृहेति (8, 21)

ஆக்ருஷ்டோபி ஹதோ வாபி நாக்ரோசேந்
நாபி நாடயேத்,.
அதுஷ்டோ வாங்மன: காயை: ஸா திதிக்ஷா
க்ஷமா ஸ்மிருதா,.

289. அதன் பயன் யாது எனத் திருக்குறளாசிரியர் கூறுகின்றார்?

அவரை உலகம் போற்றும், அவரது புகழ் நிலைத்திருக்கும் என்பன அதன் பயன் எனக் கூறுகின்றனர்.

290. அக்குறள்கள் யாவை?

ஒறுத்தாரை யொன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து,
ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்,

என்பன.

291. இக்கருத்தை வேதவ்யாஸர் மஹாபாரதத்திற் கூறியிருக்கின்றனரா?

கூறியிருக்கின்றனர்.

292. அச்செய்யுள் யாது?

ய: பரேஷாம் நரோ நித்யம் அதிவாதாம்ஸ் திதிக்ஷதே,
தேவயானி, விஜாநீஹி தேந ஸர்வம் இதம் ஜிதம்,.[2]
(ஆதி. 73, 1)

293. மூன்றாவது தர்மம் யாது?

அஸூயையின்மை.

294. இதனைத் தான் அழுக்காறாமை என்ற சொல்லால் திருக்குறளாசிரியர் குறிக்கின்றாரோ?

ஆம்.

295. அதன் இலக்கணம் யாது?

பிறர் நன்னிலையில் இருப்பதைக் கண்டு, "ஐயோ!

1. आक्रुष्टोऽभिहतो वापि नाक्रोशेन्नापि ताडयेत् ।
अदुष्टो वाङ्मनःकायैः सा तितिक्षा क्षमा स्मृता ॥
2. यः परेषां नरो नित्यमतिवादांस्तितिक्षते ।
देवयानि विजानीहि तेन सर्वमिदं जितम् ॥

இவர் இவ்வாறு இருப்பாரா '' என நினையாதிருத்தல்.[1]

296. இதனைக் கூறுங் குறள் உண்டோ ?

உண்டு.

297. அஃது யாது ?

அறனுக்கம் வேண்டாதான் என்பான் பிறனுக்கம்
பேணு தழுக்கறுப் பான்.

என்பது.

298. அதன் பயன் யாதெனத் திருக்குறளாசிரியர் கூறுவர் ?

அழுக்காறுடையானின் செல்வம் இம்மையில் நீங்கும். மறுமையில் நரகத்திற்கு அவன் செல்வான். அவன் இறந்தபின் அவனது சுற்றம் உண்ண உணவும் உடுக்க உடையும் இன்றி வருந்துவர்.

299. இக்கருத்தினைக் கொண்ட குறள்கள் யாவை ?

அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்.
கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉம்
உண்பதூஉ மின்றிக் கெடும்.

300. ஐயா ! இங்கு ஓர் ஐயம்.

அஃது யாது ?

301. உலகத்தில் அஸூயைப்படுகின்றவர் நன்னிலையில் இருப்பதையும், அஸூயையற்றவர் நன்னிலையில் இல்லாதிருப்பதையுங் காண்கின்றோமே, அஃது எப்படி ?

அவர்கள் இப்போது அவ்வாறு இருத்தற்கு அவர் முறையே முற்பிறப்புக்களில் செய்த நல்வினையும் தீவினையுமே காரணம் ஆகும். தற்போது அவருடைய மனநிலையின் பயனைப் பின்னர் அனுபவிப்பர்.

302. இதனால் நாம் அறிந்துகொள்ளவேண்டுவது யாது ?

அதனை முன்னரே கூறியுள்ளேன். நாம் இப்பிறப்பில் நுகரும் இன்பதுன்பங்கட்டுக் காரணம் பெரும்பான்மையும் முற்பிறப்புக்களிற் செய்த நல்வினையும் தீவினையுந் தான். அதனால் தற்போதுள்ள துன்பத்தைக் கண்டு மனந்தளராது நல்லவற்றைச் செயின், அவற்றின் பயனைப் பின்னர் நுகரலாம்.

1. यो धर्ममर्थं कामं वा लभते मोक्षमेव वा ।
न द्विष्यात्तं सदा प्राज्ञ अनसूयेति सा स्मृता ॥

303. பெரும்பான்மையும் என ஏன் கூறினீர் ?

மிகவும் சிறந்த நல்வினையை ஒருவர் செய்தாலும், மிகவும் இழிந்த தீவினையைச் செயினும், இப்பிறப்பிலே அதன் பயனை நுகர்வர் எனப் பெரியோர் கூறியிருக்கின்றமையான்.

304. அத்தொடர் யாது ?

அத்யுத்கடை: புண்யபாபைரிஹைவ பலமச்நுதே [1]

305. நான்காவது தர்மம் யாது ?
சௌசம் என்பது.

306. அதற்குப் பொருள் யாது ?

மனத்தின்கண்ணும் காயத்திற்கண்ணும் செயலின்கண்ணும் தூய்மை, தூயபொருள்களை ஆளுந் தன்மையும் அதன்பாற்படும்.

307. இதனைக் கூறும் வடமொழிச் செய்யுள் யாது ?

த்ரவ்யசௌசம் மனச்சௌசம் வாக்சௌசம்
காயிகம் ததா.,
சௌசம் சதுர்விதம் ப்ரோக்தம் ருஷிபிஸ்
தத்வதர்சிபி : [2]

308. இதனைத் திருக்குறளாசிரியர் எங்கு உணர்த்தியுள்ளார் ?

இதனை இனியவை கூறல், நடுவு நிலைமை, ஒழுக்கமுடைமை, பிறனில் விழையாமை, தீவினையச்சம் முதலிய அதிகாரங்களிற் கூறியுள்ளார்.

309. ஐந்தாந் தர்மம் யாது ?

அநாயாஸம் என்பது.

310. அநாயாஸம் என்றால் என்ன ?

நீக்கமுடியாதவற்றில் மனத்தை அனுவச்யமாய்த் துன்புறுத்திக் கொள்ளாமையும், முடியாத கார்யத்தைச் செய்ய உடலை வருத்திக்கொள்ளாமையும் அநாயாஸத்தின் பாற்படும்.

311. அதன் இலக்கணத்தைக் கூறுஞ் செய்யுள் யாது ?

1. अत्युत्कटैः पुण्यपापैरिहैव फलमश्नुते
2. द्रव्यशौचं मनश्शौचं वाक्शौचं कायिकं तथा ।
शौचं चतुर्विधं प्रोक्तमृषिभिस्तत्त्वदर्शिभिः ॥

*யதாரம்பே பவேத் பீடா நித்யம் அத்யந்தம் ஆத்மன:*
*தந் வர்ஜயேத் தர்ம்யமபி அநாயாஸஸ்ஸ உச்யதே* [1]

312. ஆறுந் தர்மம் யாது?

மங்கலம் என்பது.

313. அதன் பொருள் யாது?

சிறந்தவற்றைச் செய்தலும் சிறக்காவற்றைச் செய்யாமலும் இருத்தல்.

314. அதன் இலக்கணத்தைக் கூறுஞ் செய்யுள் யாது?

*ப்ரசஸ்தாசரணம் நித்யம் அப்ரசஸ்தவிவர்ஜனம்,*
*ஏதத்தி மங்கலம் ப்ரோக்தம் முனிபிஸ் தத்வதர்சிபி.* [2]

315. இதனைத் திருக்குறளாசிரியர் எங்குக் கூறினர்?

அன்புடைமை, இனியவைகூறல் என்ற அதிகாரங்களிற் கூறியுள்ளார்.

316. ஏழாந் தர்மம் யாது?

அகார்ப்பண்யம் என்பது.

317. அதன் பொருள் யாது?

துன்பத்திலும் தனது எளிமையைப் பிறர்க்குக் காட்டாமையும், பிறர் துன்புற்றிருக்கும்போது அவர்க்கு மனமார்ந்து ஈதலும் அகார்ப்பண்யத்தின்பாற் படும்.

318. அதன் இலக்கணத்தைக் கூறுஞ் செய்யுள் யாது?

*ஆபத்யபி ச கஷ்டாயாம் பவேத் தீநோ ந கஸ்ய சித்,*
*ஸம்விபாகருசிச்ச ஸ்யாத் அகார்ப்பண்யம் தத் உச்யதே.* [3]

319. எட்டாந் தருமம் யாது?

அஸ்பிருஹை என்பது.

320. அதன் பொருள் யாது?

பேராசையின்மை.

1. यदारम्भे भवेत्पीडा नित्यमत्यन्तमात्मनः ।
तद्वर्जयेद् धर्म्यमपि अनायाससस्स उच्यते ॥
2. प्रशस्ताचरणं चैव नित्यमप्रशस्तविवर्जनम् ।
एतद्धि मङ्गलं प्रोक्तं मुनिभिस्तत्त्वदर्शिभिः ॥
3. आपद्यपि च कष्टायां भवेद्दीनो न कस्यचित् ।
संविभागरुचिश्च स्यादकार्पण्यं तदुच्यते ॥

321. அதன் இலக்கணம் யாது?

இந்திரியங்கள் புலன்களை நுகரும்போது அதிக ஆவலின்மையும், பிறரது பொருளைக் கவர மிக்க அவாவின்மையும் அதன் இலக்கணம் ஆகும்[1]

322. இதனைத் திருக்குறளாசிரியர் எச்சொல்லாற் கூறினர்?

வெஃகாமை என்ற சொல்லால்.

323. இதன் இலக்கணத்தை எக்குறள் கூறும்?

இலக்கணத்தையும் பயனையுமே ஒரு குறள் கூறும்.

324. அக்குறள் யாது?

> அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை
> வேண்டும் பிறன்கைப் பொருள்.

325. இதனை வேதவ்யாஸர் மஹாபாரதத்திற் கூறியுள்ளாரா?

கூறியுள்ளார்.

326. எவ்வாறு கூறியுள்ளார்?

மனத்தால் செய்யப்படும் பாவங்களுள், பிறர் பொருளிடத்து ஸ்பிருஹை ஒன்று எனக் கூறினர்.

327. அச்செய்யுள் யாது?

> அபித்ரோஹோப்யஸூயா ச பரார்த்தேஷு சவை ஸ்ப்ருஹா,
> ஏவம் ஆத்யம் அசுபம் கர்ம மனஸா பாபம் உச்யதே.[2]

328. இவ்வெட்டு குணங்களைப் பெற்றால் அதன் பயன் யாது?

இவ்வெட்டு குணங்களைப் பெற்றவன் பரம்பொருளோடு ஒன்றுபடுவான் எனக் கௌதமதர்மஸூத்திரம் கூறும்.[3]

329. இம்மையில் அவற்றைப் பெறுவதாற் பயன் யாது?

1. विवर्जयेदसन्तोषं विषयेषु सदा नरः ।
परद्रव्याभिलाषं च सा स्पृहा कथ्यते बुधैः ॥
2. अभिद्रोहोऽभ्यसूया च परार्थेषु च वै स्पृहा ।
एवमाद्यमशुभं कर्म मनसा पापमुच्यते ॥ (अनु. 231, 8)
3. यस्य तु खलु संस्काराणामेकदेशोऽपि अष्टौ आत्मगुणाः अथ स ब्रह्मणस्सायुज्यं सालोक्यं च गच्छति (8, 23)

உலகத்திலுள்ள எல்லா நாட்டு மக்களும் எக்காலத்தும் இவ்வெட்டு குணங்களோடு கூடியிருப்பின், நாடுகளுள் கலகமும், நாடுகளுட் போரும் இன்றி உலகம் முழுவதும் மனவமைதியோடு இருக்கும்.

330. ஆகலின் இவை ஒவ்வொரு மக்களுக்கும் இன்றியமையாதன அல்லவா ?

இன்றியமையாதன என்பதில் ஐயம் இல்லை. ஆயினும் அவற்றை உண்மையாகப் பெறுதல் எளிதன்று.

331. ஏன் அது எளிதன்று ?

இந்திரியங்கள் புலன்களிற் சென்று இன்பம் அடையும் போது அவற்றைத் தன் வசப்படுத்தும் ஆற்றலுடையாரே இவ்வெட்டு குணங்களையும் பெற முடியும்.

332. ஏன் ? இந்திரியங்களைத் தன்வசப்படுத்தல் எளிதன்ரு ?

எளிதன்று. அவை போக்கிலிக்குதிரைகள் போன்றன எனக் கடோபநிஷத்து கூறும்.

333. விளக்கமாய்க் கூறுமின்.

போக்கிலிக்குதிரைகள் போகாத இடத்தில்தான் இழுத்துச் செல்லும்.

334. அவை அவ்வாறு செல்லாதிருக்க யாது வேண்டும் ?

கடிவாளம் வலுவாய் இருத்தல் வேண்டும். வண்டியோட்டுபவன் வல்லவனுய் இருத்தல் வேண்டும்.

335. அவ்விரண்டும் தகுந்தபடி இல்லாவிடின் யாருக்குத் திங்கு நிகழும் ?

வண்டிக்குள் இருப்பவர்க்குத்தான்.

336. இந்திரியக்குதிரைகளை அடக்க யாது வேண்டும் ?

மனமாகிய கடிவாளம் வலுவாயிருத்தல் வேண்டும். விவேகமாகிய ஸாரதி ஸாமர்த்தியமுள்ளதாய் இருத்தல் வேண்டும்.

337. மனம் எப்போது வலுவாய் இருக்கும் ?

மனம் சுத்தமாய் இருந்தால் அது வலுவாய் இருக்கும்.

338. மனத்தூய்மை எப்போது நிகழும் ?

உண்ணும் உணவு தூயதாயிருப்பின் மனத்தூய்மை ஏற்படும்.

339. அதற்குச் சான்று யாது?

அப்பொருள் கொண்ட[1] சாந்தோக்யோபநிஷத்துத் தொடரே.

340. உணவிற்கும் மனத்திற்கும் என்ன இயைபு?

உண்ட உணவின் ஸூக்ஷ்மமான பகுதியே மனமாக மாறுகின்றதாம்.

341. அப்படியா! அஃது எங்குக் கூறப்பட்டுளது?

சாந்தோக்யோபநிஷத்திற் கூறப்பட்டது.

342. எவ்வாறு?

உண்ணப்பட்ட உணவின் ஸ்தூலப்பகுதி மலமாய் வெளிப்படுகிறது. நடுப்பகுதி மாமிஸமாய் மாறுகிறது. ஸூக்ஷ்மப்பகுதி மனமாக மாறுகிறது.[2]

343. உணவைப்பற்றிக் கண்ணபிரானும் பகவத்கீதையிற் கூறுகின்றாரோ?

ஆம், கூறுகின்றார்.

344. எவ்வாறு கூறுகின்றார்?

ஆஹாரம், ஸாத்விகாஹாரம் ராஜஸாஹாரம் தாமஸாஹாரம் என மூவகைப்படும். அவற்றுள் ரஸத்தோடு கூடியதும் பசையுள்ளதும் இனிப்பானதும் மனத்திற்கு இன்பமானதுமே ஸாத்விகம். அவை நீண்ட ஆயுள், தேகவலிமை, மனவலிமை, சுகம், ப்ரீதி இவற்றைப் பெருக்கும். உப்பு, புளிப்பு, அதிக உஷ்ணம், அதிக உறைப்பு, வறுவல் இவற்றோடு கூடிய ஆஹாரம் ராஜஸம். அவை துக்கம், சோகம், வ்யாதி இவற்றைப் பெருக்கும். பழையது, ரஸமற்றது, துர்நாற்றமுடையது முதலியன தாமஸம். அவை மிகவும் தள்ளத் தக்கன.[3]

1. (7, 26, 1)
2. (6, 5, 1)
3. आयुः सत्त्वबलारोग्यसुखप्रीतिविवर्धनाः ।
रस्याः स्निग्धाः स्थिरा हृद्या आहाराः सात्त्विकप्रियाः ॥ (17, 8)
कट्वम्ललवणात्युष्णतीक्ष्णरूक्षविदाहिनः ।
आहारा राजसस्येष्टा दुःखशोकामयप्रदाः ॥ (17, 9)
यातयामं गतरसं पूति पर्युषितं च यत् ।
उच्छिष्टमपि चामेध्यं भोजनं तामसप्रियम् ॥ (17, 10)

345. கடோபநிஷத்தில் எவ்வாறு கூறப்பட்டது என்பதை விளக்குமின்.

ஜீவாத்மாவைத் தேர்க்குள் இருப்பவனாக எண். உடலைத் தேராகவும், விவேகத்தைத் தேர்ப்பாகனாகவும், மனத்தைக் கடிவாளமாகவும், இந்திரியங்களைக் குதிரைகளாகவும், புலன்களைக் குதிரைகள் செல்லும் இடங்களாகவும் எண். விவேகமற்று அடங்கா மனத்துடன் இருப்போர்க்கு இந்திரியங்கள் போக்கிலிக்குதிரைகள் போல் அடங்கா. அவரைத் தீயுழிச் செலுத்திவிடும். விவேகம் நிரம்பி அடங்கிய மனத்தோடு இருப்போர்க்கு நற்குதிரைகள் போல் இந்திரியங்கள் வசப்பட்டிருக்கும்.

346. அன்பரீர்! அவ்வீட்டில் தீர்த்தம் சாப்பிடலாமா எனப் பெரியோர் கூறக் கேட்டிருக்கிறேன். அவர்கள் அவ்வீட்டில் உணவு உட்கொள்ளலாமா என ஏன் கூறவில்லை?

அன்பரீர்! நல்ல வினா. இதற்கு விடை சாந்தோக்யோபநிஷத்திலிருந்தே ஊஹிக்க முடிகின்றது. உணவின் ஸூக்ஷ்மாம்சம் மனமாக மாறுகின்றது. உட்கொண்ட தண்ணீரின் ஸூக்ஷ்மாம்சம் பிராணனாக மாறுகின்றது. பிராணன் மனத்தைக் காட்டிலும் சிறந்தது. அக்காரணம்பற்றியே பெரியோர் அவ்வாறு கூறியிருத்தல் கூடும்.

347. எட்டு ஆத்மகுணங்களையும் எல்லா மக்கட்கும் பொதுவாகக் கூறுவானேன்?

ஆத்மகுணங்கள் ஸூக்ஷ்மசரீரத்தைப்பற்றியன. ஸூக்ஷ்மசரீரத்தில் வர்ணங்களின் மாறுபாடோ, ஆச்ரமங்களின் மாறுபாடோ, ஆண் பெண் என்ற வேற்றுமையோ இல்லை. அக்காரணம்பற்றி அவை எல்லோர்க்கும் பொதுவாகக் கூறப்பட்டன.

348. ஆத்மகுணங்கள் சிறந்தனவா, வர்ணாச்ரமதர்மங்கள் சிறந்தனவா?

ஆத்மகுணங்களே சிறந்தன எனக் கௌதமதர்மஸூத்ரம் கூறும்.[1]

---

1. यस्यैते चत्वारिंशत् संस्कारा न चाष्टावात्मगुणाः (6, 5, 2) न स ब्रह्मणः सायुज्यं सालोक्यं च गच्छति (8, 22) यस्य तु खलु संस्काराणामेकदेशोऽप्यष्टावात्मगुणाः अथ स ब्रह्मणस्सायुज्यं सालोक्यं च गच्छति (8, 23)

# அத்தியாயம்—8

## பிராம்மண தர்மங்கள்

349. எல்லா மக்கட்கும் வேண்டிய பொதுதர்மங்களைக் கூறினீர். தற்போது அவரவரது விசேஷ தர்மங்களைக் கேட்க விரும்புகிறேன். பிராம்மணரின் தர்மங்களை முதன்முதலிற் கூறுமின்.

பிராம்மணனாகப் பிறந்தவுடன் அவனை மூன்று வகையான கடன்கள் சுற்றுகின்றன எனக் கூறுகின்றது யஜுர்வேத-தைத்திரிய-ஸம்ஹிதை.

350. அவை யாவை?

ருஷிகடன், தேவகடன், பிதுர்கடன் என்பன.

351. அவற்றை எப்படிப் போக்குவது?

ருஷிகடனை வேதாத்தியயனத்தாலும், தேவகடனை யாகஞ்செய்தலாலும், பிதுர்கடனை மக்களைப் பெறுதலாலும் அவற்றைப் போக்கலாம் எனப்பட்டது.

352. வேதாத்தியயனம் என்பதற்குப் பொருள் யாது?

ஆசிரியன் ஒருமுறை வேதப்பகுதியைக் கூற, அதனைக் கேட்டு மாணவன் இருமுறை அவ்வாறே கூறுதற்கு வேதாத்தியயனம் எனப் பெயர்.[1]

353. வேதங்களைக் கற்க எப்பொழுது தொடங்கவேண்டும்?

உபநயனம் செய்த வருஷத்தில் ஆடி, ஆவணி மாதங்களில் வரும் அத்யாயோபாகர்மதினத்தில் அதனைத் தொடங்கவேண்டும்.[2]

354. உபநயனம் என்றால் என்ன?

மாணவற்குக் காயத்ரிமந்திரத்தை உபதேசம் செய்யும் ஸம்ஸ்காரத்திற்கு உபநயனம் என்று பெயர்.

355. ஏன் காயத்ரிமந்திரத்தை உபதேசஞ் செய்யவேண்டும்?

செய்யவேண்டும் எனச் சாஸ்திரங் கூறுகின்றது.

356. காயத்ரிமந்திரத்தை ஜபித்தலாற் பயன் யாது?

அறிவு வளரும்; தேஜஸ் மிகும்.

1. गुरुमुखोच्चारणानूच्चारणमध्ययनम्
2. श्रवणादि वार्षिकं प्रोष्ठपदीं वोपाकृत्याधीयीतच्छन्दांसि (गौ. ध. 16, 1)

357. அம்மந்திரத்தின் கருத்து யாது ?

சூர்யன் பிரகாசிக்குமாறு செய்யும் ஸவிதா்யாந்தர்யாமி யான கடவுளின் தேஜஸ்ஸைத் தியானஞ் செய்கிறேன். அவர் என் அறிவைக் கூர்மையாக்கட்டும் என்பது அதன் பருப்பொருள்.

358. எவ்வாண்டில் உபநயநம் செய்யவேண்டும் ?

பொதுவாகக் கர்ப்பத்திலிருந்து எட்டாம் ஆண்டு தொடங்குங் காலம் முதல் பதினாறும் ஆண்டு முடியும் வரை அதற்குக் காலம்.[1]

359. பொதுவாக என ஏன் கூறவேண்டும் ?

மாணவன் பிரும்மவர்ச்சஸ்ஸை அடையவேண்டும் என்ற விருப்பம் ஆசிரியர்க்கு இருப்பின், ஐந்தாம் ஆண்டிலேயே உபநயநம் செய்யலாம் எனக் கூறப் பட்டுளது.[2]

360. எத்தனை ஆண்டுகள் வேதாத்தியயனஞ் செய்தனர் ?

பொதுவாக ஒவ்வொரு வேதத்தையும் 12 ஆண்டுகள் அத்தியயனஞ் செய்தனர்.

361. அப்படியா ! 12 ஆண்டுகள் வேண்டுமா ?

இவ்வினாவிற்கு யாது காரணம் ?

362. தற்போது அவ்வளவு காலம் பாடசாலைகளில் மாணவர் படிக்கவில்லையே என்பதை நோக்கித் தான் அவ்வினா வினவினேன்.

உண்மையே. தற்போது அவ்வளவு ஆகவில்லை தான். ஆயினும் அப்போது வேதங் கற்றதற்கும் தற்போது கற்பதற்கும் வேற்றுமை உண்டு.

363. அஃது யாது ?

அப்போது ஆண்டு முழுவதும் வேதத்தில் புதுப் பாடத் தைக் கற்பிப்பதில்லை. இப்போது கற்பிக்கின்றனர்.

1. उपनयनं ब्राह्मणस्याष्टमे (गौ. ध. (1, 7); नवमे पञ्चमे वा काम्यम् (1, 8): गर्भादिस्सङ्ख्या वर्षाणाम् (1, 9); आ षोडशाद् ब्राह्मणस्यापतिता सावित्री (1, 14).

2. पञ्चमे ब्रह्मवर्चसकामम्

364. ஏன்?

அப்போது ஆடி ஆவணி மாதங்களில் புதுப்பாடம் கற்பிக்கத்தொடங்குவார்கள். தை மாதத்தில் நிறுத்தி விடுவார்கள். தொடங்கும்போது சில சடங்கு செய்வார்கள். அதற்கு அத்தியோபாகர்ம எனப் பெயர். நிறுத்தும்போது சில சடங்கு செய்வார்கள். அதற்கு அத்தியாயோத்ஸர்ஜனம் எனப் பெயர்.

365. தற்போது அவற்றைச் செய்கின்றனரா?

தற்போதும் ஆடி ஆவணி மாதங்களில் அத்தியாயோபாகர்மாவினை எல்லோரும் செய்கின்றனர். அதனைத் தான் ஆவணியவிட்டம், ச்ராவணம் என்ற சொற்களாற் குறிக்கின்றனர்.

366. அப்படியா! ஏன் அதனை ஆவணியவிட்டம் என்கின்றனர்.

அது யஜுர்வேதிகட்குப் பெரும்பாலும் ஆவணிமாதத்தில் அவிட்டநக்ஷத்திரத்தன்று நிகழும்.

367. பெரும்பாலும் என ஏன் கூறுகின்றீர்?

சிறுபான்மை ஆடிமாதத்திலும் திருவோண நக்ஷத்திரத்தன்றும் நிகழும்.

368. ஆனல் அதற்கு முக்கியமான காலம் யாது?

ஆடிமாதத்து அமாவாஸ்யைக்குப் பின்வரும் பூர்ணிமை அதற்கு முக்கியகாலம். அதனை ச்ராவணீ பௌர்ணமாஸி எனக் கூறுவர்.

369. ஏன் அதனை ச்ராவணம் என்ற பெயரால் வழங்குகின்றனர்?

ருக்வேதிகட்கு அது திருவோணநக்ஷத்திரத்தன்று நிகழும் காரணம்பற்றி அதனை ச்ராவணம் எனக் கூறுதல் உண்டு.

370. அத்தியாயோத்ஸர்ஜனம் தற்போது செய்கிருர்களா?

யஜுர்வேதிகள் செய்வதில்லை. அதற்குப் பிராயச்சித்தமாக, காமோகார்ஷீத் என்ற ஜபத்தைச் செய்கின்றனர். ருக்வேதிகளும் ஸாமவேதிகளும் தைமாதத்திற் பெரும்பாலும் அதனைச் செய்யாது ஆடி ஆவணிமாதங்களிலே அத்தியாயோபாகர்மாவிற்கு முன் செய்கின்றனர்.

371. அப்போது தைமாதத்தில் வேதங் கற்பிப்பதை நிறுத்தினுல், தைமாதம் முதல் ஆடி ஆவணி வரையில் மாணவர் எதனைக் கற்றனர்?

வேதாங்கங்களைக் கற்றனர். அவை யாவை என, முன்னரே கூறினேன்.

372. அது நல்ல வழக்கம் எனத் தோன்றுகின்றது. 12 ஆண்டுகளுக்குள் கற்ற வேதபாகத்தின் பொருளையும் அறிந்திருப்பார்கள்.

ஆம்; அது நல்ல வழக்கம் தான்.

373. ஏன் அவ்வழக்கம் மாறிற்று?

காரணங் கூற இயலவில்லை.

374. அவ்வழக்கம் எப்பொழுது மாறிற்று எனக் கூற இயலுமா?

சுமார் 2500 ஆண்டுகட்கு முன்னரே மாறியிருத்தல் கூடும்.

375. அஃது எவ்வாறு அறியப்படுகின்றது?

மஹாபாஷ்யத்தில் பதஞ்ஜலிபகவான் வ்யாகரணத்தைப் படித்தலால் உண்டாம் பயனைக் கூறினர். அவ்வாறு வேதங்களைக் கற்றலால் உண்டாம் பயனை ஏன் கூறவில்லை என மாணுக்கன் வினவினன்.

376. அவ்வினுவின் கருத்து என்ன?

வேதங்களைக் கற்றதனுல் இது பயன் எனக் கூறவில்லையே. வேதத்தைக் கற்கத் தொடங்கிய ஆறு மாதத்திற்குள் வ்யாகரணம் படித்தனரே. அவ்வாறிருக்க, வ்யாகரணம் படித்தலால் உண்டாம் பயனை விரிவாய் ஏன் கூறவேண்டும் என்பது.

377. அப்படியா! இப்பொழுதுதான் விளங்கிற்று. அதற்கு அவர் யாது விடை அளித்தனர்?

முன் கல்பத்தன்றே உபநயநம் ஆனவுடன் வ்யாகரணத்தைப் பிராம்மணர் படித்தனர். இப்போது அப்படி இல்லையே. வேதத்தைப் படித்துவிட்டு, வேதாத்தியயனத்தால் நாம் வைதிகசப்தங்களை அறிந்தோம்; உலகப்பழக்கத்தால் லௌகிகசப்தங்களை அறிந்தோம். வ்யாகரணப்படிப்பு எற்றுக்கு என்கின்றனர் என்றூர்.[1]

1. पुराकल्प एतद् आसीत् - संस्कारोत्तरकालं ब्राह्मणा व्याकरणं स्माधीयते ... तदद्यत्वे न तथा । वेदमधीत्य त्वरिता वक्तारो भवन्ति — वेदान्नो वैदिकाः शब्दाः सिद्धा लोकाच्च लौकिकाः, अनर्थकं व्याकरणमिति ।

378. இதனால் நாம் அறிவது யாது ?

வேதாத்தியயனத்தைப்பற்றிய பழைய வழக்கம் அவர் காலத்திற்கு வெகுநாள் முன்னரே நின்றுவிட்டது என்பது தெளிவாய் அறியப்படுகின்றது. அவரோ கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் இருந்தவர் என்கின்றனர். அக்காரணம்பற்றிச் சுமார் 2500 ஆண்டுகட்கு முன்னரே பழைய வழக்கம் நின்றிருக்கும் என நம்புகிறேன்.

379. அஃது இருக்கட்டும். எல்லா மாணவர்க்கும் 12 ஆண்டு வேண்டுமா ?

பொதுவாக 12 ஆண்டு அத்யயனம் செய்யவேண்டும் என விதித்து, பின்னர் படித்து முடியும் வரையிலும் காலம் எடுத்துக்கொள்ளலாம் எனவும் ருஷிகள் கூறியுள்ளனர்.[1]

380. இது மிகவும் பொருத்தமானது. விரைவில் கற்கக்கூடியவன் விரைவிற் கற்றுவிடலாம். மந்தன் மெதுவாய்க் கற்கலாம்.

ஆம்.

381. ஒரு வேதத்தை மாத்திரம் கற்றனரா ? எல்லா வேதங்களையும் கற்றனரா ?

எல்லா வேதங்களையும் ஒருகாலத்திற் கற்றது உண்டு எனத் தெரியவருகின்றது.

382. அதற்குச் சான்று யாது ?

48 ஆண்டு பிரம்மசர்யம் அனுஷ்டித்தனர் எனப் பௌதாயன தர்மஸூத்ரம் கூறும்.[2]

383. அவ்வாறு எப்போதாவது யாரேனும் படித்ததற்குச் சான்று உண்டா ?

திருமுருகாற்றுப்படையில் திருவேரகத்துள்ள முருகப்பெருமானை வருணிக்கும் நக்கீரர், 48 ஆண்டு அங்கங்களுடன் நான்கு வேதங்களையும் படித்த இருபிறப்பாளப்பிரும்மசாரி ஒருவன் ஈரமான ஆடையை அணிந்து கடவுளின் முன்னர் ஷடக்ஷரத்தை ஜபித்தனன் எனக் கூறுகின்றார்.

1. ग्रहणान्तं वा (गौ. ध. 2, 51)

2. अष्टाचत्वारिंशद्वर्षाणि पौराणां वेदब्रह्मचर्यम् (बौ. ध. 1, 2, 1)

384. அப்படியா! அவ்வடிகள் யாவை?

இருமூன் றெய்திய வியல்பினின் வழாஅது
இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி
அறுநான் கிரட்டி யிளமை நல்லியாண்டு
ஆறினிற் கழிப்பிய வறனவில் கொள்கை
மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்து
இருபிறப் பாளர் பொழுதறிந்து நுவல
ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்
புலராக் காழகம் புலர வுடீஇ
உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்து
ஆறெழுத் தடக்கிய வருமறைக் கேள்வி
நாவியன் மருங்கி னவிலப் பாடி

என்பன அவ்வடிகள்.

385. எல்லா வேதங்களையும் படிக்க ஆற்றலில்லாதவன் யாது செய்தனன்?

மூன்று வேதங்களையேனும், இரண்டு வேதங்களையேனும், ஒரு வேதத்தையேனும் படித்தான்.

386. அதற்குச் சான்று யாது?

மனுஸ்மிருதியுள் அவ்வாறு கூறப்பட்டது.

387. அவ்வடி யாது?

வேதாந் அதீத்ய வேதௌ வா வேதம் வாபி யதாக்ரமம்.[1]

388. யதாக்ரமம் என்ற சொல்லாற் குறிக்கப்பட்டது யாது?

முதன்முதலில் அவரவருடைய முன்னோர் எவ்வேதத்தைக் கற்றனரோ, அவ்வேதத்தைத்தான் முன்னர்க் கற்கவேண்டும் என்றும், அவ்வாறு கல்லாதவன் சாகாரண்டன் எனக் கூறப்படுவான் என்றும் கூறப்பட்டுளது. அதனால் யதாக்ரமம் என்றுர்.[2]

389. அன்பரீர்! இங்கு ஓர் ஐயம்.

அஃது யாது?

390. தான் முதன்முதலிற் கற்கவேண்டிய வேதத்தில் ஒரு சாகையை ஒருவன் கற்றான். மேலும் கற்கவேண்டும் என்ற அவா அவனுக்கு வந்தது. அவன் வேறொரு

1. वेदानधीत्य वेदौ वा वेदं वापि यथाक्रमम्
2. य: स्वशाखां परित्यज्य अन्यशाखां निषेवते ।
शाखारण्ड: स विज्ञेय:

வேதத்தில் ஒரு சாகையைக் கற்பதா, தன் வேதத்தி லேயே மற்றொரு சாகையைக் கற்கலாமா ?

நல்ல ஐயம். மற்றொரு வேதத்தின் சாகையையே கற்கவேண்டும் எனப் பூர்வமீமாம்ஸாசாஸ்திரத்தில் தீர்மானஞ் செய்யப்பட்டிருக்கின்றது.

391. அன்பரீர் ! தற்காலத்தில் பிராம்மணக்குழந்தைகட்கு வேதத்தை எப்படிக் கற்பிக்க முடியும் ?

ஏன் முடியாது ?

392. உரிய காலத்தில் உபநயநம் செய்வதில்லை. பள்ளிக் கூடத்திற்குக் குழந்தைகளை அனுப்பிவிடுகிறார்கள். அவர்கட்கு எப்படி வேதங்களைக் கற்பிப்பது ? பள்ளிக்கூடத்திற்கு அனுப்பாது பாடசாலைகட்கு அவர்களை வேதங் கற்க அனுப்பித்தால் அவர்க்குப் பிழைக்க வழி இல்லை. யாது செய்வது ?

நீர் கூறுவது உண்மைதான். பாடசாலைகளில் வேதங் களைக் கற்றோர்க்கு எளிதாய் இல்லறவாழ்க்கையை நடத்த வழிஇல்லைதான். ஆயினும் பெற்றோர்க்கு நமது வைதிகமதத்தில் சிரத்தை இருந்தாலும், தாம் இறந்த பின்னர்த் தமது கார்யங்கள் சரிவர நடக்குமா என்ற கவலை இருந்தாலும் குழந்தைகளை வேதங் கற்கு மாறு செய்துவிடலாம்.

393. அஃது எப்படி ?

ஆறு வயது ஆனவுடன் குழந்தைகட்கு உபநயநம் செய்யலாம். அதனைத் தடுப்பார் ஒருவரும் இல்லை, குழந்தைகள் நான்காம் பாரம் படிப்பதற்கு முன்னர் அவர்கட்குத் தக்க வேலை இல்லை. ஒவ்வொருநாளும் ஒரு மணி வேதத்தை ஆசிரியரை வைத்துக் கற்பிக்க லாம். வேதத்தின் வழி குழந்தைகட்கு மனத்தில் பதிந்த பிறகு ஸந்தை சொல்வதின் காலத்தைக் குறைக் கலாம். உபயுக்தமான பாகத்தைமட்டும் மனப்பாடம் செய்யச் சொல்லலாம். விளையாட்டாய் அவற்றின் பொருளையும் கற்பிக்கலாம். இவ்வாறு ஏழு அல்லது எட்டு ஆண்டுகள் செய்யலாம். அப்போது சில குழந் தைகட்கு அதிகப் பகுதியை மனப்பாடம் செய்ய ஆவல் பிறக்கும், வைதிககர்மாக்களில் சிறத்தை உண்டா கும். குழந்தைகள் ஆஸ்திகர்களாய் இருப்பார்கள்.

394. இது முடியுமா ?

முடியும் என்பதில் உமக்கு என்ன ஐயம். திண்ணமாய் முடியும். பெற்றோர்க்கு வைதிகமதத்தில் நம்பிக்கை

இல்லை. நாம் சார்வாகர்களாய்ப் பொருளிலும் இன்பத்திலுமே ஈடுபடுகிறுர்கள். எப்படியாவது தம் குழந்தைகள் பணம் சம்பாதித்தாற் போதும் என நினைக்கிறுர்கள். அன்றியும் மனப்பாடம் செய்தற்கு ஆறு ஆண்டு முதல் பதினுறு ஆண்டுவரை உயர்ந்த காலம் என மனத்தத்துவசாஸ்திரம் படித்தவர் கூறுகின்றனர். அக்காலத்தைத் தான் வேதத்தை மனப்பாடம் பண்ண வைத்தனர் ருஷிகள். பள்ளிப்பாடங்களில் இக்காலத்தில் மனப்பாடம் செய்ய சிறு பகுதி கூட இல்லை.

395. அப்படியா! இக்காலத்தில் மனப்பாடம் செய்யப் பகுதி இல்லையா?

இல்லையே! பள்ளியில் குழந்தைகள் யாது கற்கின்றனர் எனத் தாய்தந்தையர் கவனிப்பதில்லை. தர்மத்தில் குழந்தைகள் ஈடுபடவேண்டும் என்ற சிரத்தை இல்லை. ஏன்? தற்போது குழந்தைகளை அடக்கக்கூட பெற்றோர்க்குச் சக்தி இல்லை.

396. அதற்குக் காரணம் யாது?

பெற்றோர்க்கு வேண்டிய வலுவின்மையே காரணம்.

397. வலுவின்மைக்குக் காரணம் யாது?

அவரவர் உடலை நன்கு போற்றிக் கொள்ளாமையே.

398. ஏன் போற்றிக்கொள்ளவில்லை?

நாகரிகம் எனக்கருதி அடிக்கடி உண்கிறுர்கள். மக்களைப் பிரஸவித்தால் முன்னேர் அருந்திய மருந்தை உண்ணுவதில்லை. ஒரு குழந்தை பிறந்த சிறிது காலத்திற்குப் பின்னர் கரு தரிக்காமல் தடுக்கும் சக்திவாய்ந்த மருந்தை உண்ணுவதில்லை. முன்போல் பெண்மக்கள் தற்போது ஆண்மக்களுணவின் இரண்டு மடங்கு உண்ணுகிறுர்களா? சௌசம் இல்லை. அதனுற் பல வியாதிகள் உண்டாகின்றன. எவ்வளவுக்கெவ்வளவு கணவன் மனைவியோடு உல்லாஸமாயிருக்கவேண்டும் எனக் கருதித் தாய்தந்தையரை விட்டுத் தனியாய்ச்சென்று முறையின்றி இருக்கின்ருனே, அவ்வளவுக்கவ்வளவு உல்லாஸமாய் இருக்குங்காலம் குன்றுகின்றது.

399. விளக்கமாய்க் கூறுமின்.

பொதுவாக 30 வயதுள்ள பெண்டிர் இல்லறத்தில் கணவனது புணர்ச்சியை விரும்புவதில்லை.

400. பிருமசாரியின் தர்மங்கள் யாவை ?

பிராம்மண பிரும்மசாரி அக்னியை உபாஸிக்கவேண்டும், பிக்ஷையெடுத்து குருவினிடம் காட்டி உண்ணவேண்டும். ஸந்த்யாவந்தனத்தை முறைப்படிச் செய்யவேண்டும். உண்மையே பேசவேண்டும். உதிக்கும்போது ஸூர்யனைப் பார்க்கக்கூடாது. தேன், மாமிசம் இவற்றை உண்ணுதிருத்தல் தகும். சந்தனப்பூச்சு, மாலையணிதல், கண்ணிற்கு அஞ்சனமிடுகை, ந்ருத்தம், கீதம், பிறர் குற்றங் கூறுகை இவற்றை விலக்கவேண்டும். குருவிற்கு எதிரில் காலே நீட்டாமலும், முழங்கால்களில் துணியைச் சுற்றிக்கொள்ளாமலும், கழுத்தைச்சுற்றி ஆடை அணியாமலும், விரற்சொடக்கு கொட்டாவி முதலியவற்றைச் செய்யாமலும், பெண்களை உற்றுநோக்காமலும், நெருங்கி அணுகாமலும், சூதாட்டம் பரஹிம்ஸை இவற்றைச் செய்யாமலும், கடுஞ்சொல், கள் இவற்றை நீக்கியும் இருத்தல் வேண்டும். குரு முதலிய பெரியோரின் பெயரைக் கூறுதல் தகாது. கூறவேண்டியிருப்பின் வணக்கத்துடன் கூறவேண்டும். தம்மைக் குரு ஏதேனும் வினவினுல் அவர் முன்னர்ச் சென்று விடை அளிக்கவேண்டும். அவருடன் செல்லவேண்டியிருப்பின், அவர்க்குப் பின்னர்ச் செல்லவேண்டும். படி என அவர் கூறியபின் படிக்கவேண்டும். குருவிற்குத் தீங்கு இழைக்காமலும் நன்மையைப் புரிந்தும் இருத்தல் அவசியம்.

401. இவற்றுள் பிக்ஷாசர்யத்தைத் தவிர்த்து ஏனையவற்றைத் தற்போது பள்ளிக்கூடங்களிற் படிக்கும் மாணவர்களும் அனுஷ்டிக்கலாம் எனத் தோன்றுகின்றது.

அனுஷ்டிக்கலாம். அவ்வாறு நடப்பின் அவர் நன்னிலை அடைவர் என்பது திண்ணம்.

402. வேதங்களைக் கற்றபின்னர் மாணவன் யாது செய்ய வேண்டும் ?

குருவிற்கு வேண்டியவற்றைச் செய்து எஞ்சியிருக்கும் இரண்டு கடன்களைப் போக்கத்தக்க மனைவியை மணக்க வேண்டும்.

403. இதற்குச் சான்று யாது ?

தைத்திரீயோபநிஷத்திலேயே அவ்வாறு கூறப்பட்டது. கௌதமதர்மத்திலுள்ளும் விதிக்கப்பட்டது.[2]

1. (தை. உ.) ;
2. विद्यान्ते गुरुरर्थेन निमन्त्र्य: (गौ. ध. 2, 55)

404. தக்க மனைவி என்றதனுற் குறிக்கப்படுவது யாது?

குலத்தாலும், அழகாலும், வயதினுலும் ஒத்துள்ள மனைவி எனக் கருதப்பட்டது.

405. எக்குலத்திலிருந்து மனைவியைப் பொறுக்கவேண்டும்?

ஒரே ப்ரவரம் இல்லாதவளாயும், தகப்பன்வழியில் ஏழு தலைமுறைக்கும் தாய்வழியில் ஐந்து தலைமுறைக்கும் அப்பாற்பட்டவளாயும் இருக்கவேண்டும் எனக் கௌதமதர்மஸூத்ரம் விதிக்கின்றது.[1]

406. ப்ரவரம் என்ருல் என்ன?

கோத்ரருஷிக்கு முன்னேராகிய ருஷிகளைப் ப்ரவரம் என்பர்.

407. பொதுவாக அவருள் எத்தனைபேரைக் கொள்வது வழக்கம்?

மூன்று அல்லது ஐந்து ருஷிகளைக் கொள்வது வழக்கம்.

408. அவருள் ஒருவரேனும் இருகோத்திரக்காரருக்கும் பொதுவாயிருப்பின் அவ்விருவரும் மணத்தல் ஆகாது.

409. விவாஹம் எத்தனை வகைப்படும்?

விவாஹம் எட்டு வகைப்படும் எனத் தர்மஸூத்திரங்கள் கூறுகின்றன.

410. அவை யாவை?

பிராம்மம், பிராஜாபத்யம், ஆர்ஷம், தைவம், காந்தர்வம், ஆஸுரம், ராக்ஷஸம், பைசாசம் என்பன.

411. அவற்றின் இலக்கணங்கள் யாவை?

வேதாத்தியயனம் செய்தோனும், நன்னடக்கையுள்ளோனும், சீலமுள்ளோனும், பந்துவர்க்கத்தோடு உள்ளோனுமாகிய வரனுக்குப் பெண்ணை அலங்கரித்துத் தானம் செய்தல் பிராம்மம் ஆகும்.

மேற்கூறிய இலக்கணத்தோடு கூடியவனேடு 'நீ எப்போதும் மனைவியைவிட்டுப் பிரிதல் தகாது' எனக்கூறி, அவனுக்குத் தானஞ்செய்தல் பிராஜாபத்யம் ஆகும்.

1. असमानप्रवरैर्विवाहः (4, 2); ऊर्ध्वं सप्तमात् पितृबन्धुभ्यः (4, 3) मातृबन्धुभ्यः पञ्चमात् (4, 5)

2. सगोत्राय दुहितरं न प्रयच्छेत् (2, 5, 15)

வரன், பெண்ணின் தகப்பனுக்கு ஒரு காளைமாட்டினையும் ஒரு பசுவினையுந் தர, அவன் தன் பெண்ணை அலங்கரித்துத் தானம் செய்தல் ஆர்ஷம் ஆகும்.

தான் யாகம் செய்யும்போது ருத்விக்கான பிரும்மசாரியைக் கொண்டாடி யாகவேதிக்குள்ளே பெண்ணைத் தானஞ்செய்தல் தைவம் ஆகும்.

பெற்றோர்க்குத் தெரியாமல் தன்னை நேசித்த பெண்ணுக்கு அணி முதலியன கொடுத்து தான் அவளை மனைமகன் மணப்பது காந்தர்வம் ஆகும்.

பெண்ணைப் பெற்றோர்க்குப் பணம்கொடுத்துப் பின்னர் அப்பெண்ணை மணத்தல் ஆஸுரம் ஆகும்.

பெண்ணைப் பலாத்காரமாய்த் தூக்கிக்கொண்டுபோய் மணஞ்செய்து கொள்வது ராக்ஷஸம் ஆகும்.

பெண்ணுக்குத் தெரியாமலே அவளோடு புணர்ந்து அவளை மணஞ்செய்வது பைசாசம் ஆகும்.[1]

412. இவற்றுள் எல்லாம் சிறந்தனவா?

முதல் நான்கே சிறந்தன என்பர் சிலர். முதல் ஆறும் சிறந்தன என்பர் சிலர்.[2]

413. தற்போது செய்யப்படும் விவாஹம் எதன்பாற்படும்?

வைதானவர் இரண்டாம் முறை செய்துகொள்ளும் விவாஹம் ஆஸுரத்தின்பாற்படும். முதன்முதலில் வரன் பெண்ணை மணஞ்செய்வது எதன்பாற்படும் எனக் கடவுள்தான் கூறவேண்டும்.

414. ஏன் அன்பரீர், அவ்வாறு கூறுகின்றீர்?

இப்போது செய்யப்படும் விவாஹம் பெரும்பாலும் அவ்வெட்டனுள் ஒன்றாகவும் இல்லை.

1. ब्राह्मो विद्याचारित्रबन्धुशीलसम्पन्नाय दद्यादाच्छाद्यालङ्कृताम् (4, 6)
संयोगमन्त्रः प्राजापत्ये सह धर्मश्चर्यताम् (4, 7)
आर्षे गोमिथुनं कन्यावते दद्यात् (4, 8)
अन्तर्वेद्यृत्विजे दानं दैवः (4, 9)
अलङ्कृत्येच्छन्त्याः स्वयं संयोगो गान्धर्वः (4, 10)
वित्तेनानतिः स्त्रीमतामासुरः (4, 11)
प्रसह्यादानाद्राक्षसः (4, 12)
असंविज्ञातोपसङ्गमनात् स पैशाचः (4, 13)
2. चत्वारो धर्म्याः प्रथमाः (4, 14)
षडित्येके (4, 15)

415. ஏன், பிராம்மம் எனக் கூறுதல் தகாதா ?

வேதத்தைக் கற்றவனுக்குப் பெண்ணைக் கொடுத்தா லன்றோ பிராம்மம் ஆகும். அவ்வாறு பெரும்பாலும் இல்லையே. அன்றியும் சீலமும் நன்னடக்கையும் வேண்டும் எனக் கூறப்பட்டிருக்கிறது. அவற்றைக் கொண்ட ஆண்மக்கள் எத்தனை பேர் ? பலர்க்கு வேதத்தில் நம்பிக்கையே இல்லை. வேதத்தைப் படிக்கா மலே அங்கு அவசியமில்லாத சடங்குகள் கூறப்பட்டன என நினைக்கின்றனர் ; கூறவும் கூறுகின்றர். பெண்ணை மணமகன் வரிக்கவேண்டும் எனச் சாஸ்திரங் கூறப் பெண்ணைப் பெற்றோர் மணமகனை வரிக்கவேண்டி யுளது. இக்காலத்தில் வயது முதிர்ந்த பிள்ளைகட்குப் பெண்களைக் கொடுப்பதால், அதற்குமுன் அவன் சீலத் தில் தவருது இருத்தல் அபூர்வமாய் இருக்கிறது. ஸந்தியாவந்தனம் செய்யாதவனும் வேதக்கொள்கை களில் நம்பிக்கையற்றவனும், வேதாத்யயனஞ் செய்யா தவனுமாகிய வரனுக்குப் பெண்ணைக் கொடுத்தல் பிராம்மவிவாஹம் ஆகும் எனக் கூற நா கூசுகின்றது.

416. குமாரஸம்பவத்தில் பரமசிவனுக்கும் பார்வதிக்கும் நடக்கும் விவாஹம் எதன்பாற்படும் ?

ஏன் அதனில் ஐயம் நுமக்கு வருவானேன் ?

417. இல்லை ; காந்தர்வமணம் ஆகுமோ என எனக்கு ஐயம்.

இல்லை. ஆங்குக் காந்தர்வமணத்திற்கு வேண்டிய இலக்கணம் இல்லை.

418. அஃதென்ன ஐயா ! பார்வதிதான் பரமசிவனை மணந்து கொள்கிறேன் எனப் பெற்றோர்க்குத் தெரி யாமல் சொன்னுளே !

சொன்னுள். ஆனுல் அவர்க்குத் தெரியாது பரமசிவனை அவள் மணக்கவில்லை, தன் தந்தையிடம் அவனை அவர் வரிக்குமாறு கூறுகிருள். அன்றியும் தந்தையின் உத்தரவின்பேரிலே பரமசிவனைக் குறித்து தவம் செய்யச் சென்றனள்.

419. காந்தர்வமணம் பிராம்மணர்க்குச் சிறந்ததா ?

சிறந்ததோ இல்லையோ, அதுவும் தர்மவரம்பிற்கு உட் பட்டது எனச் சில ருஷிகளின் கொள்கையாதலின், அது ஏற்றுக்கொள்ளத் தகாதது அன்று, தற்போது நடக்கும் விவாஹத்தைக் காட்டிலும் அது சிறந்தது எனவுங் கூறலாம். அதனுற் பெற்றோர்க்குப் பிடுங்கல் இல்லை. ஆனுல் அவ்விருவரும் உண்மையாய் மன

மொத்து தீர்மானிக்கவேண்டும். ஸ்தூலசரீரத்தின் அவாவால் இருவரின் ஸூக்ஷ்மசரீரத்தைப்பற்றி அவர் அறியாது தீர்மானித்தல் நிகழும். அஃது ஆபத்திற் கொண்டு விடும். அக்காரணம் பற்றியே மணமகனைப் பெண்ணின் பெற்றோர் தேர்ந்தெடுத்தல் நலம். அவரும் தற்போது பணப்பேய் பிடித்து மணமகனின் குலம் சீலம் நடத்தை இவற்றை அறியாது தீர்மானிக்கின்றனர். பின்னர் வருந்துகின்றனர்.

420. மணம் நிகழ்ந்தபின்னர் அவ்விருவரும் யாது செய்தல் வேண்டும்?

இதனைச் சுருக்கமாய் இரண்டு குறள்களில் ஆசிரியர் திருவள்ளுவனார் கூறியுள்ளார்.

421. அக்குறள்கள் யாவை?

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை.

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை.

என்பன.

422. அவற்றின் கருத்து யாது?

பித்ருதேவதைகளையும், மற்றுமுள்ள தேவதைகளையும் விருந்தினரையும், தன்னைச் சேர்ந்தோரையும் தன்னையும் போற்றிக்கொண்டு, பிரும்மசாரி, வானப்பிரஸ்தன் ஸந்நியாஸி இவர்க்கு உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் முதலியவற்றைக் கொடுத்து உபசரிக்க வேண்டும் என்பதுதான் அக்குறள்களின் கருத்து.

423. தென்புலத்தார் என்பதற்குப் பித்ருதேவதைகள் என எவ்வாறு பொருள் கூறினீர்?

தைத்திரியஸம்ஹிதையிற் கூறப்பட்டதைப் பிரமாணமாகக்கொண்டு அவ்வாறு கூறினேன்.

424. ஆங்கு எவ்வாறு கூறப்பட்டுள்ளது?

தேவமனுஷ்யர்கள் பின்வருமாறு திக்குக்களைப் பிரித்துக் கொண்டனர்: கிழக்கினைத் தேவர்களும், தெற்கினைப் பிதிரரும், மேற்கினை மனுஷ்யர்களும், வடக்கினை ருத்ரர்களும் என (4, 1, 1),

425. பிதிரரைத் தென்புலத்தார் என வேறு எங்கேனும் தமிழ் நூல்களுற் கூறப்பட்டுளதா?

உளது.

426. எங்கு ?

பல்லிடங்களில்.

427. ஓரிடங் கூறுமின்.

தென்புலத்தாரின் கடமையைச் செய்யாதாரைத் தன் அம்பிலிருந்து நீக்க அவரைப் புகலிடம் சேரச் சொல்லு கிருர் ஒரு தமிழ்நாட்டரசர்.

428. அத்தொடர் யாது ?

தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெருஅ தீரும்
எம்மம்பு கடிவிடுது நும்மரண் சேர்மின்

என்பது.

429. இத்தொடர் எங்கு உளது ?

புறநானூற்றுள் ஒன்பதாம் பாட்டில் உளது.

430. அவ்வரசர் யார் ?

பல்யாகசாலைமுதுகுடுமிப்பெருவழுதி என்ற பாண்டிய வரசர்.

431. அவர் பல யாகங்களைச் செய்வித்திருக்கின்றனரோ ?

அதற்கென்ன ஐயம்.

432. முதற்குறளின் கருத்து தர்மஸூத்திரங்களிற் கூறப் பட்டுளதோ ?

உளது. சிறிது மாறுபாட்டுடன்.

433. அஃது யாது ?

தேவ - பித்ரு - மனுஷ்ய - ருஷி - பூத - பூஜக :[1]

எனக் கௌதமதர்மஸூத்ரம் கூறுகின்றது.

434. குறளில் உள்ளவாறே வடமொழி நூல்களுள் எங் கேனுங் கூறப்பட்டுளதோ ?

உளது.

435. எங்கு ?

மஹாபாரதத்தில்.

1. देवपितृमनुष्यऋषिभूतपूजकः (5, 3)

436. அச்செய்யுள்கள் யாவை?

*தேவதாதிதி ப்ருத்யேப்ய : பித்ருப்யச் சாத்ம நஸ் ததா,*
*ருணவாந் ஜாயதே மர்த்யஸ் தஸ்மாதந் ருணதாம் வரஜேத்.*
*தேவதாதிதி ப்ருத்யாநாம் பித்ருணு மாத்மனச்சய :*
*ந நிர்வபதி பஞ்சாநாம் உச்ச்வஸந் ந ஸ ஜீவதி.* [1]

437. ப்ருத்யன் என்பதற்குப் பொருள் யாது?

தன்னுல் போற்றப்படவேண்டுபவன் என்பது அதற்குப் பொருள்.

438. இல்லறத்தான் பிரும்மசாரி, வானப்ரஸ்தன், ஸந்நியாஸி இவரை ஏன் போற்றவேண்டும்?

பிரும்மசாரி படிப்பிலே ஈடுபடுதலால் அவனுக்கு உணவு அளிக்கவேண்டும். ஸந்யாஸி துறந்தாராகலின் அவருக்கு உணவு, ஆடை, இருக்க இடம் இவற்றைக் கொடுத்து அவரை உபசரிக்கவேண்டும். வானப்ரஸ்தர் தவத்தில் இருப்பாராகலான், அவரைப் பிறர் தீங்கிழையாதிருக்கும்படிக் கவனிக்கவேண்டும்.

439. இக்கருத்தை வடமொழி நூல்கள் கூறுகின்றனவா?

ஆம். கூறுகின்றன. ஏனைய ஆச்ரமங்கள் கிருஹஸ்தாச்ரமத்தையே பற்றி இருக்கின்றன என மஹாபாரதம் கூறும். கௌதமதர்மசாஸ்திரமும் கூறும்.

440. அச்செய்யுள்கள் யாவை?

*ஏவம் கார்ஹஸ்த்யம் ஆச்ரித்ய*
*வர்த்தந்தே இதராச்ரமா :* [2]
*ஏவம் ஆச்ரமிண : ஸர்வே*
*க்ருஹஸ்தே யாந்தி ஸம்ஸ்திதிம்,* [3]

1. देवतातिथिभृत्येभ्यः पितृभ्यश्चात्मनस्तथा ।
ऋणवान् जायते मर्त्यस्तस्मादनृणतां व्रजेत् ॥ (शा. 292, 9)
देवतातिथिभृत्यानां पितृणामात्मनश्च यः ।
न निर्वपति पञ्चानामुच्छ्वसन्न स जीवति ॥ (वन. 314, 60)

2. एवं गार्हस्थ्यमाश्रित्य वर्तन्ते इतराश्रमाः (शा. 269, 6)

3. एवमाश्रमिणः सर्वे गृहस्थे यान्ति संस्थितिम् (शा. 295, 39)
(मनु. 6, 9)

யதா மாதரம் ஆச்ரித்ய
ஸர்வே ஜீவந்தி ஜந்தவ :
ததா க்ருஹஸ்தாச்ரமம் ப்ராப்ய
ஸர்வே ஜீவந்தி சாச்ரமா :[1]

தேஷாம் க்ருஹஸ்தோ யோநி : அப்ரஜநத்வாத் இதரேஷாம்.[2]

441. அதற்குக் காரணம் கௌதமதர்மசாஸ்திரம் எவ்வாறு கூறுகின்றது ?

ஏனைய ஆச்ரமங்களில் உள்ளோர் மக்களைப் பெறுதற்கு இயலாமையான் எனக் கூறுகின்றது.

442. கிருஹஸ்தன் பிதிரரைப் போற்றுதற்கு யாது செய்ய வேண்டும் ?

ச்ராத்தம் முதலியவற்றைச் செய்து அவர்களைப்போற்ற வேண்டும்.

443. ச்ராத்தத்தை எவ்வாறு செய்யவேண்டும் ?

மிக்க சுத்தமாய் இருந்து பிரும்மசர்யத்தை அனுஷ்டித்து கோபமின்றிச் சிராத்தம் செய்யவேண்டும்.

444. அதற்குக் காரணம் யாது ?

பித்ருதேவதைகள் கோபமில்லாமலும், தூய்மையாகவும் பிரும்மசர்யத்துடனும் இருக்கின்றார்களாம். அவர்கட்குத் தக்கவாறு நாமும் இருக்கத்தானே வேண்டும்.

445. அவர்கள் அவ்வாறு இருக்கின்றார் என்பதற்குச் சான்று யாது ?

மனுஸ்மிருதி அவ்வாறு கூறுகின்றது.

446. அச்செய்யுள் யாது ?

அக்ரோதனு: சௌசபரா: ஸததம் பிரும்மசாரிண:[3]

447. அவர்களைப் போற்றினால் யாது பயன் ?
நன்மக்களைப் பெறலாம்.

1. यथा मातरमाश्रित्य सर्वे जीवन्ति जन्तवः ।
तथा गृहस्थाश्रमं प्राप्य सर्वे जीवन्ति चाश्रमाः ॥ (अनु. 211, 49)

2. तेषां गृहस्थो योनिरप्रजनत्वादितरेषाम् (3, 3)

3. अक्रोधनाः शौचपराः सततं ब्रह्मचारिणः

448. நன்மக்களைப் பெறாவிட்டால் என்ன ?

பிதிரர்க்குச் செய்யவேண்டிய கடன் செய்யப்படாமல் போம்.

449. இங்கு ஓர் ஐயம்.

அஃது யாது ?

450. பித்ருதேவதைகள் என்றால் இறந்துபோன நம் முன்னோர்கள் தானே.

இல்லை.

451. பின்னர் யார் ?

வசுக்கள், ருத்திரர்கள், ஆதித்தியர்கள் என்பவர் பித்ரு தேவதைகள்.

452. அவ்வாறாயின் இறந்துபோன நம்முடைய தாய்தகப்பனார்க்குச் சிராத்தம் செய்தல் பொருந்துமா ?

பொருந்தும்.

453. அஃது எவ்வாறு ?

இறந்துபோன நம் தாய்தந்தையரின் ஜீவனைப் பித்ரு லோகத்திற் சேர்க்கும்போது அவர்களை வசுக்களோடு ஒன்றுபடுத்தியே சேர்க்கிறோம். அவர்க்கு முன்னோர் ருத்திரர்களோடு ஒன்றுபடுத்தப்படுகின்றனர். அவர்க்கு முன்னோர் ஆதித்யருடன் ஒன்றுபடுத்தப்படுகின்றனர்.

454. நம்முடைய முன்னோர் மறுபிறப்பு எடுத்தவுடன் ஏன் அவரைக்குறித்து நாம் சிராத்தம் செய்யவேண்டும் ?

அவர் மறுபிறப்பு எடுத்துவிட்டாரா இல்லையா என்பது நம்மால் அறியலாகாமையானும், பித்ருலோகத்தில் எப்போதும் இருக்கும் வசுக்கள், ருத்திரர்கள் ஆதித்யர்கள் இவர்கட்கு உணவு வேண்டுமாகலானும் நாம் சிராத்தம் செய்து தீரவேண்டும்.

455. மறுபிறப்பு எடுத்திருந்தால் சிராத்தத்தின் பயன் அவரையுஞ் சேருமா ?

சேரும் என்பதுதான் ரிஷிகளின் கொள்கை.

456 எவ்வாறு போய்ச் சேரும் ?

அவர்கள் எப்பிறப்பை அடைந்திருக்கின்றனர் என்பது வசுக்கள் ருத்திரர்கள் ஆதித்யர்கள் இவருக்குத் தெரியுமாம். அவர்கட்குத் தக்க உணவாய் மாற்றி அவருக்கு அனுப்பிவிடுவாராம்.

457. அன்பரீர்! ஓர் ஐயம்.

அஃது யாது?

458. பிதிர்தேவதைகளை எப்போது உபசரிக்கவேண்டும்?

ஒவ்வொரு அமாவாஸையிலும், ஒவ்வொரு மாதப்பிறப்பிலும், யுகாதி, மன்வாதிமுதலிய புண்யகாலங்களிலும் மஹாளயபக்ஷத்திலும் அவர்களை உபசரிக்கவேண்டும்.

459. வேறு எக்காலத்திலாவது அவர்களை உபசரித்தல் உண்டா?

உண்டு.

460. எப்போது?

ஜாதகர்மம், நாமகரணம், சௌளம், உபநயநம், விவாஹம், ஸீமந்தம் முதலியவற்றில் பிதிரரை உபசரித்தல் வேண்டும்.

461. அதற்கு என்ன பெயர்?

நாந்தீசிராத்தம் என்பது பெயர்.

462. நாந்தீசிராத்தம் செய்வதால் யாது பயன்?

பித்ருதேவதைகளின் அநுக்ரஹத்தைப் பெறுகிறோம். எந்த சடங்கு செய்தாலும் அஃது இடையூறின்றிச் சிறப்பாய் நடப்பதற்கு அவர்களுடைய அநுக்ரஹம் வேண்டும்.

463. நாந்தீசிராத்தத்தை எவ்வாறு செய்தல் நன்று?

அன்னரூபமாய்ச் செய்தலே நன்று.

464. அவ்வாறு தற்போது செய்கின்றார்களோ?

சிலர் செய்கின்றார்கள்.

465. நாந்தீசிராத்தத்திற்கும் ப்ரத்யாப்திகசிராத்தத்திற்கும் மாறுபாடு உண்டோ?

உண்டு. நாந்தீசிராத்தத்தில் எள்ளை உபயோகிக்காது அக்ஷதையையே உபயோகிப்பர். பிண்டப்ரதானத்திலும் மாறுபாடு உண்டு.

466. தகப்பன் உயிரோடு இருக்கும்போது மகன் நாந்தீசிராத்தம் செய்யலாமா?

செய்யவேண்டும். தகப்பனின் பிதிர்தேவதைகளைக் குறித்தே செய்யவேண்டும்.

467. தகப்பனின் பிதிர்தேவதைகளும், மகனின் பிதிர்தேவதைகளும் ஒன்றல்லவா?

தகப்பனின் பிதிர்தேவதைகள் எல்லோரும் மகனின் பிதிர்தேவதைகள் ஆகார்.

468. விளக்கமாய்க் கூறுமின்.

தகப்பனின் பிரபிதாமஹர் மகனின் பிதிர்தேவதையாகக் கொள்ளப்படுவதில்லை. தகப்பனின் தாய்வழி தேவதை களாகிய மாதாமஹர், அவரது தகப்பன், அவரது பாட்டன், மாதாமஹி, அவளது மாமியார், அவளது மாமியாரின் மாமியார் மகனின் பிதிர்தேவதைகள் ஆகார்.

469. பிரத்யாப்திகசிராத்தத்தில் தேவதைகள் யார்? யாரைக் குறித்து சிராத்தம் செய்கின்றேமோ, அவரும் அவருடைய முன்னுள்ள இருவரும்.

470. விளக்கமாய்க் கூறுமின்.

தாயின் சிராத்தம் செய்தால், தாயும் இறந்துபோன அவள் மாமியாரும், இறந்துபோன அவள் மாமியா ருமே தேவதைகள். அம்மூவர்க்குந் தான் பிண்டம் வைக்கின்றனர் ருக்வேதிகளும் ஸாமவேதிகளும். யஜுர்வேதிகள் மாத்திரம் தகப்பன்வர்க்கத்திலுள்ள மூவர்க்குங் கூடப் பிண்டம் வைக்கின்றனர், அவ் வாறே தகப்பனின் சிராத்தம் செய்தால், தகப்பனும் இறந்துபோன அவன் தகப்பனும் இறந்துபோன அவன் பாட்டனும் தேவதைகள். தாய்வர்க்கத்திற் கும் பிண்டம் வைக்கிறார்கள் யஜுர்வேதிகள்.

471. சிராத்தம் என்பது யாது?

சிராத்தத்தில் மூன்று பகுதிகள் உள. பித்ருதேவதை களைக் குறித்து பிண்டங் கொடுப்பது தான் சிறந்த பகுதி. பிராம்மணர்கள் உண்ட உணவின் மிச்சத்தைத் தான் பிண்டமாக வைக்கவேண்டும் என்ற நியதியின் படி, அதற்கு முன்னர் பிராம்மணர்களை உண்பிக்க வேண்டும். தேவதைகட்கு ஹோமஞ் செய்யாததைப் பிராம்மணர்க்கு அளிக்கக்கூடாது என்ற நியதிப்படி அதற்குமுன்னர் ஹோமம் செய்யவேண்டும். ஆக, தேவதைகட்கு ஹோமஞ் செய்தல், பிராம்மணபோஜ னம் செய்வித்தல், பிண்டமளித்தல் இம்மூன்றுமே சிராத்தத்தின் பகுதிகள்.

472. யாரைக் குறித்து இருவர்க்குப் பொதுவாய் அன்ன மளிக்கின்றனர்?

வடக்கைப்பார்த்து உட்காருகின்றவர் தான் பித்ரு தேவதைகள் ஸ்தானத்தில் இருப்பவர். பித்ருதேவதை

களை உபசரிக்கும்போது தேவலோகவாசிகளான விச்வே தேவர்களுள் இருவரையும் உபசரிக்கவேண்டும் என்ற நியதி உண்டு. அவ்விருவரது ஸ்தானத்தில் இருப்பவர் கிழக்கைப் பார்த்து உட்காருகிறார்.

473. விச்வேதேவர்கட்குப் பிண்டம் உண்டா?

இல்லை. அவர்கள் அப்பிரதானர்கள்தான். அக்காரணம் பற்றியே, தாங்கள் எனக்குத் தனம் முதலியவற்றைக் கொடுத்து தங்களிடம் சேர்மின் எனக் கூறும்போது பித்ருஸ்தானத்தில் இருப்பவரைப் பார்த்து நீவிர் விச்வேதேவருடன் செல்லுக என மந்திரம் கூறுகின்றது.

474. அமாவாஸ்யை முதலியவற்றில் தேவதைகள் யார்?

தகப்பன்வழி வந்த பிதிரரும் தாய்வழி வந்த பிதிரரும்,

475. மஹாளயத்தில் தேவதைகள் யார்?

தகப்பன்வழி வந்த பிதிரரும், தாய்வழி வந்த பிதிரரும், ஆண்மகனற்ற இருவழி வந்த பிதிரரும், ஏனைய உறவினரும் ஆசிரியரும், மாணவரும், நண்பரும்.

476. ஆண்மகனற்ற பிதிரர்களை எவ்வாறு குறிக்கின்றோம்?

காருண்ய பித்ருக்கள் என.

477. அவ்வாறு கூறும் செய்யுள் யாது?

> ச்ராத்தம் குர்யாத் அபுத்ரஸ்ய
> பித்ருவ்யஸ்ய மகாளயே,
> ஏகோத்திஷ்டேந விதிநா
> ந குர்யாத் புத்ரிணே க்வசித்.[1]

478. அவருள் சிறந்தவர் யார்?

ஆண்மகனில்லாது இறந்த பித்ருவ்யரும் (தகப்பனோடு பிறந்தவர்), மாதுலரும் (தாயோடு பிறந்தவர்), ஆவர்.

479. ஆண்மகனைக் கொண்ட பித்ருவ்யருக்கும் மாதுலர்க்கும் சிராத்தம் செய்தல் தகாதா?

தகாது.

480. காருண்யபித்ருக்கள் யார் யார் என்பதைக் கூறுமின்.

தகப்பனின் சகோதரர், சகோதரர், தனக்குப் பிறந்திறந்த ஆண்மக்கள், பெண்மக்கள், அத்தை, மாதுலன்,

1. श्राद्धं कुर्यादपुत्रस्य पितृव्यस्य महालये ।
एकोद्दिष्टेन विधिना न कुर्यात्पुत्रिणे क्वचित् ॥

சிறுதாயார், பெரிய தாயார், அவர்களின் கணவர், உடன்பிறந்தாள், மனைவி, மைத்துனன், மாமனார், நாட்டுப்பெண், உடன்பிறந்தாளின் கணவன், ஆசார்யர், நண்பர் முதலியோர்.

481. பித்ருவ்யர், மாதுலர் இவர்க்கு ஆண்மகன் இருப்பினும் அவர்களைக் காருண்யபித்ருக்களிற் சேர்க்கின்றனரே மஹாளயத்தில்.

அது தவறுதான்.

482. நீர் கூறிய காருண்யபித்ருக்களுள் தாய்வழி தகப்பன் வழி இரண்டிலும் இல்லாதவர்களும் இருக்கின்றனரே.

ஆம், இருக்கின்றனர்.

483. அவ்வாறாயின் வர்க்கத்வயாவசிஷ்டர் என அவர்க்கு அடைமொழி கூறுகின்றீரே. அது பொருந்துமா?

ஏன் பொருந்தாது?

484. வர்க்கத்வயாவசிஷ்டர் என்பதற்கு இரண்டு வர்க்கத்திலும் எஞ்சியிருப்போர் என்பது தானே பொருள். இரண்டு வர்க்கத்திலும் சேராதார் நீக்கப்பட்டவர் ஆவாரே. அதனால் தான் அது பொருந்துமா எனக் கேட்டேன்.

நீர் கூறுவது நியாயந்தான். ஆயினும் வர்க்கத்வயாவசிஷ்டர் என்பதற்கு வர்க்கத்வயே அவசிஷ்டர் என மாத்திரம் விக்ரஹம் என நினைத்தனிர். வர்க்கத்வயாத் அவசிஷ்டர் எனவும் விக்ரஹம் கொள்ளலாம். இரண்டு விக்ரஹவாக்கியங்களையுங் கொள்ளின் ஒரு குற்றமும் வாராது.

485. மஹாளயசிராத்தத்தை எவ்வாறு செய்யவேண்டும்?

அன்னரூபமாகத் தான் செய்யவேண்டும். நம்மைக் கொஞ்சிவளர்த்த தாய்வழிப்பாட்டன், பாட்டி இவருக்கு வருஷத்தில் ஒருநாளாவது பிண்டம் வைக்க வேண்டாமா? மஹாளயத்தில் ஒருமுறை வைத்த பிண்டம் ஓர் ஆண்டிற்கு அவரது பசியைத் தீர்க்குமாமே.

486. எவ்வளவு நாள் மஹாளயசிராத்தம் செய்யவேண்டும்?

மஹாளயபக்ஷத்து பிரதமை முதல் அடுத்த பக்ஷத்து பிரதமை முடிய 16 நாளும் செய்யலாம். அவ்வாறு முடியாவிட்டால் 10 நாள் செய்யலாம், 5 நாள் செய்யலாம். அவை முடியாவிட்டால் ஒரு நாளேனும் அவசியம் செய்யவேண்டும்.

487. பிரதிதினம் மஹாளயம் செய்தால் பரேஹநிதர்ப்பணத்தை எப்போது செய்வது?

அன்றன்றேதான் செய்யவேண்டும்.

488. ஒருநாளிலே மஹாளயம் செயின், எப்போது அதனைச் செய்யவேண்டும்.

மறுநாளில்தான். அன்றே செய்தால் கர்த்தா இறப்பான் எனக் கூறப்பட்டது.

489. தேவர்களுக்கு உரிய கடனை எவ்வாறு செலுத்துகின்றது?

யாகம் முதலியவற்றைச் செய்தால் அவருடைய கடன் நீங்கும்.

490. யாகம் முதலியவற்றை ஏன் செய்யவேண்டும்?

யாகம் முதலியவற்றில் அக்னியில் ஹோமம் செய்யப்பட்ட ஹவிஸ்தான் தேவர்க்கு உணவாம். ஆகலின் யாகம் முதலியவற்றைச் செய்யாவிடின், அவர் வருந்துவர்.

491. யாகம் முதலியவற்றைச் செய்யாவிடின் என்?

நமக்கு மழை முதலியவற்றை இந்திரன் பெய்யார். உணவு, புஷ்டி முதலியவற்றை அக்கினி ஈயார். நோயின்மை முதலியவற்றைக் கொடுக்கார் ருத்திரர். அவரவரது கையில் நமக்கு என்ன நன்மை செய்யக் கூடிய ஆற்றல் இருக்கின்றதோ அதனை அவர் செய்யார். நாம் பின்னர் வருந்துவோம். நமக்கும் தேவர்க்கும் உள்ள இயைபு முன்னரே கூறப்பட்டுள்ளது.

492. யாகங்களில் பசுஹிம்ஸை செய்கிறார்களே. அது நியாயமாகுமா?

பசுஹிம்ஸை தமக்காகச் செய்யவில்லையே. தேவர்களுக்கு அர்ப்பணஞ் செய்வதற்கன்றோ செய்கின்றனர். தமக்காகச் செயின் குற்றமே ஆகும்.

493. வேள்வி செய்வோனும் ருத்விக்குக்களும் சிறிது உண்கின்றனரே.

மாம்ஸசேஷத்தைப் பிரஸாதமாக உண்ணவேண்டும் என்ற விதியை அனுசரித்து உண்கின்றனர். உணவாக உண்ணவில்லை. முகர்ந்து பார்த்தாலும் போதும் என்ற விதியைக்கொண்டு சிலர் முகர்கின்றனர்.

494. பிதிரர், தேவர், விருந்தினர் இவரையெல்லாம் போற்ற வேண்டுமாயின், அதற்குத் தக்க பணம் வேண்டுமே?

வேண்டுந்தான்.

495. அதனை எவ்வாறு அடைகிறது?

பிராம்மணன் அத்யாபனத்தாலும், யாஜனத்தாலும், பிரதிக்ரஹத்தாலும் பணத்தை அடையக் கூடும்.

496. அத்யாபனத்தால் எவ்வாறு பணத்தை அடையக்கூடும்? படித்த மாணவர்கள் வேதாத்யயனம் முடிந்தபின்னர் குருதக்ஷிணை கொடுப்பர். அரசர் ஸம்மானம் முதலிய வற்றுற் போற்றுவர்.

497. யாஜனத்தால் எவ்வாறு பணத்தை அடையலாம்? பிறர் செய்யும் யாகங்களில் ருத்விக்காக இருப்பின், அதற்குத் தக்ஷிணை கொடுப்பர்.

498. அத்யாபனம் யாஜனம் பிரதிக்ரஹம் இவற்றுல் மிக்க பெரியோர்க்கு வேண்டிய பணம் ஒருவாறு கிடைக்க லாம். எல்லா பிராம்மணர்க்கும் அவ்வாறு கிடைக்கும் எனக் கூற இயலுமா?

அதனைக் குறித்துத்தான் எவ்வழியிலாவது மிக்க தனத் தைச்சேர்க்கவேண்டும் என்றது தைத்திரியோபநிஷத்து

499. எவ்வழியிலாவது என்பதனுற் குறிக்கப்படுவது யாது?

அதற்கு விரிவுரை தர்மஸூத்ரங்களுள் உள்ளது.

500. எவ்வாறு உள்ளது?

பிராம்மணதர்மமாகிய அத்யாபனம் யாஜனம் ப்ரதி க்ரஹம் இவற்றுல் இல்லறத்தை நடத்தமுடியாவிட் டால், க்ஷத்திரியதர்மத்தைப் பிராம்மணன் அனுஷ்டிக் கலாம். அப்போதும் யோகக்ஷேமம் சரிவர நடக்கா விடின் வைச்யதர்மத்தை அனுஷ்டிக்கலாம். அதுவும் சரிவர இல்லாவிடின் சூத்ரதர்மத்தை அனுஷ்டிக்க லாம். ஆனுல் பிறவர்ணத்தாரோடு ஸாங்கர்யம் வேண்டாம். உணவிலுள்ள நியமத்தை விடவேண் டாம். இவ்வாறு கூறியுள்ளார் கௌதமர்.

501. பிராம்மணகிருஹஸ்தன் இன்பத்தை நுகரப் பணத் தைத் தேடவேண்டும் என்றுதானே கூறினீர். சார்வா கரும் அதனைத்தானே கூறுகின்றுர். அவரது மதத் தைக் குறைகூறுவானேன்?

உண்மையே. நியாயமாகவோ, அநியாயமாகவோ தன் பூதவுடலிற்கு வேண்டிய இன்பத்தை நுகரலாம், அதற்கு வேண்டிய பொருளை நியாயமாகவோ அநியாய மாகவோ தேடிக்கொள்ளலாம் என்றல்லவோ அவர் கூறுகின்றுர். நாம் தர்மத்தைச் செய்து தர்மபூர்வ

மாய்ப் பணத்தைத் தேடி தர்மத்தோடு ஒட்டிய இன்பத்தை நுகரலாம் என்றல்லவோ கூறுகின்றோம். நம் மதம் எங்கே? சார்வாகமதம் எங்கே?

502. கிருஹஸ்தன் தொடக்கம் முதல் இறுதிவரையில் இல்லறதர்மத்தை ஒரேவிதமாகத் தானே செய்தல் வேண்டும்?

இல்லை. தொடக்கத்தில் பயனை எதிர்பார்த்துச் செய்தல் இயற்கை. வரவர, பயனை எதிர்பாராது தனது கடமை என்று செய்ய முயலவேண்டும். பின்னர் அவ்வெண்ணங்கூட இன்றிச் செய்யப் பழகவேண்டும்.

503. அப்படிப் பழகிவிட்டால் வானப்பிரஸ்தநிலையையும் ஸந்நியாஸிநிலையையும் அவன் அடையவேண்டாமா?

வேண்டாம். அந்நிலையிலேயே ஒருக்கால் அவன் ஜீவன் முக்தன் ஆகலாம். அன்றி, பிராணவியோககாலத்தில் அவன் ஸந்நியாஸிநிலையை அடைந்து விதேககைவல்யத்தையும் அடையலாம்.

504. இவ்வாறு எங்குக் கூறப்பட்டது?

இதே சாந்தோக்கியோபநிஷத்தின் இறுதிவாக்கியத்தின் கருத்தெனத் தோன்றுகின்றது.

505. ஒருவன் வானப்பிரஸ்தநிலையை அடைய விரும்பின், எப்போது அதனை அடையவேண்டும்?

தன் மகனுக்கு மகன் பிறந்ததைக் கண்டவுடன்.

506. அதற்குச் சான்று யாது?

மகனைக் காணவேண்டும். மகனுக்கு மகனைக் காணவேண்டும் என வேதம் கூறுகின்றது.

507. வானப்பிரஸ்தநிலையில் மனைவியோடு இருக்கலாமா, இருத்தல் தகாதா?

மனைவியோடு இருக்கலாம். அவள் உடன் வாராவிடின் மனைவியை விட்டும் இருக்கலாம். மனைவியோடு இருப்பின் ஒருவரை ஒருவர் அணுகாது மனத்தைத் தவத்திற் செலுத்தவேண்டும்.

508. வானப்பிரஸ்தரின் கடமைகள் யாவை?

காட்டில் மனத்தைத் தவத்திற் செலுத்தி அக்னிகார்யம் செய்துகொண்டு, தேவர், பிதிரர், மனுஷ்யர், ரிஷிகள் பிராணிகள் இவரைப் பூஜித்துக்கொண்டு, திருடர் பிரதிலோமர் முதலியோரைத் தவிர எந்த விருந்தினன் வரினும் அவனை உபசரித்து, மரையுருவி, பட்டை இவற்றை உடுத்திக்கொண்டு, கிராமத்திற் செல்லாது, ஒரு வருஷத்

திற்கு மேற்படாமல் வேண்டிய உணவுப்பொருளைச் சேகரித்துக்கொண்டு இருக்கவேண்டும்.[1]

509. வானப்பிரஸ்தருக்கு சிகை உண்டா?

உண்டு.[2]

510. வானப்பிரஸ்தநிலை எதற்கு?

இவ்வாறு வினவுதல் சரியன்று எனத் தொடக்கத்திலேயே கூறினேன். இருந்தாலும் அதற்கு ஒருவாறு விடை கூறுகின்றேன். கேண்மின்.

மனைவியோடும், மக்களோடும், பொருளோடும் இல்லறநிலையில் நெருங்கி இருந்துவிட்டு உடனே எல்லாவற்றிலும் பற்றை நீக்கி ஸந்நியாஸி ஆகவேண்டும் என்றால் எளிதன்று. யாதோ, கோடியில் ஒருவர்க்கு அது ஸாத்தியமாக இருக்கலாம். பொதுவாக அவர்களை விட்டும் விடாதும் ஒரு நிலையிற் சிறிதுகாலம் இருந்தால், பின்னர் முற்றிலும் அவரை விட்டுவிட இயலும் எனத் தம் அனுபவத்தைக்கொண்டே தீர்மானித்து ருஷிகள் அவ்வாறு இடையில் வானப்பிரஸ்தநிலையை விதித்திருத்தல் கூடும்.

511. ஸந்நியாஸி ஆதற்கு ஸாதனங்கள் யாவை?

கடவுளே நிலையுள்ள பொருள் ஏனையவெல்லாம் நிலையற்றன என்ற விவேகமும், இம்மையிலும் மறுமையிலும் நுகரப்படும் இன்பம் வேண்டாம் என்ற நிச்சயமும், இந்திரியங்களை அடக்குதல், பற்றின்மை, வெகுளாமை முதலியனவும், மோக்ஷம் அடையவேண்டும் என்ற விருப்பமும் ஸாதனங்கள் ஆகும்.

512. ஸந்நியாஸியின் தர்மங்கள் யாவை?

1. वैखानसो वने मूलफलाशी तपश्शीलः । (3, 26)
श्रामणकेनाग्निमाधाय (3, 27)
देवपितृमनुष्यभूतर्षिपूजकः (3, 29)
सर्वातिथिः प्रतिषिद्धवर्जम् (3, 30)
ग्रामं च न प्रविशेत् (3, 33)
चीराजिनवासाः (3, 34)
नातिसंवत्सरं भुञ्जीत (3, 35)

2. जटिलः (3, 34)

ஆசிரியனிடமிருந்து ஆத்மஸ்வரூபத்தை உணர்த்தும் வேதாந்தவாக்கியங்களைப் படித்து, மனனஞ் செய்து ஆத்மஸ்வரூபத்தைத் தியானம் செய்தல் தான் ஸந்நி யாஸியின் தர்மம்.

513. அவர் பூதவுடலை வளர்ப்பது எவ்வாறு?

கிருஹஸ்தர் அளிக்கும் பிக்ஷையால் பூதவுடலை வளர்க்க வேண்டும். மழைகாலத்தைத் தவிர வேறு காலங்களில் ஊர்க்கு ஒருநாள் தான் இருக்கவேண்டும். தமக்கெனப் பொருள் வைத்தல் தகாது. உணவில் விருப்பம் வைத் தல் தகாது.

514. அவர் காலத்தை எவ்வாறு கழிப்பது?

கடவுளிடத்தே ஈடுபடுதலே நலம்.

515. கடவுளிடத்தில் எவ்வாறு ஈடுபடுதல்?

நிர்க்குணஸ்வரூபத்தையே தியானஞ் செய்தல்.

516. அவ்வாறு செய்யமுடியாவிடின் யாது செய்தல் நலம்?

ஸகுணஸ்வரூபத்தில் ஈடுபடுதலே நலம்.

517. எந்த ஸ்வரூபத்தைத் தியானிக்கலாம்?

எதனில் அவரவர் மனம் ஈடுபடுகின்றதோ அதனைக் கடவுளாகத் தியானிக்கலாம். உலகம் முழுவதும் கடவுளது ஸ்வரூபம்தான். எல்லாவற்றிற்கும் ஆதார மான பொருள் பரம்பொருளே. ஆயினும் அவ்வாறு நமக்கு எண்ணம் வருவது எளிதன்று. அக்காரணம் பற்றியே ஸகுணஸ்வரூபத்தைத் தியானிக்கவேண்டும் என நூல்கள் கூறும். ஸந்நியாஸிகள் ப்ரணவத்தை விசேஷமாய் உபாஸித்தல் கூடும்.

518. அன்பரீர்! இங்கு எனக்கு ஓர் ஐயம்.

அஃது யாது?

519. கோயில்களில் பிம்பங்களை வைத்து உபாஸிக்கின்றூரே. அது வேண்டுமோ?

இதற்கு விடை முன்னரே கூறியுள்ளேனே. நிர்க்குண ஸ்வரூபத்தைத் தியானஞ் செய்ய ஆற்றல் உள் ளோர்க்கு அது வேண்டாம். அந்த ஆற்றல் இல்லா தார்க்குப் பல்வகையாய்க் கடவுளை உபாஸிக்கலாம் என்றனர் பகவத்கீதையுள் கண்ணபிரான்.

அவ்வாறும் உபாஸிக்க ஆற்றல் இல்லாதார் கடவுளை ஓர் பிம்பத்தில் ஆவாஹநஞ் செய்து உபாஸிக்கட்டும்

எனப் பெரியோர் ஆலயங்களைக் கட்டித் தெய்வங்களைப் பிரதிஷ்டித்து வைத்திருக்கின்றனர்.

520. கண்ணபிரான் பகவத்கீதையில் யாது கூறியிருக்கின்றனர்?

மிக விரிவாய்க் கூறியிருக்கின்றனர். அவற்றுட் சில வற்றை மாத்திரம் கூறுகின்றேன், கேண்மின் :—

ஒருவருக்கு எழுத்துக்கள்தான் தெரியும். அவர் கடவுளை எவ்வாறு தியானஞ் செய்வது என்றால், அகரத்தைக் கடவுளாகத் தியானிக்கட்டும். ராணுவத்திலேயே இருந்த ஒருவற்கு ராணுவ உத்தியோகஸ்தர்கள் தாமே தெரியும். அவர் தாரகாஸுரனைக் கொல்லும் நிலையிலுள்ள முருகக்கடவுளைச் கடவுளாகத் தியானிக் கட்டும். வில்லாளிகளோடு பழகியோர்க்கு வில்லாளிகள்தாம் தெரியும். அவர் விற்பிடித்த கையோடிருக்கும் ராமபிரானைக் கடவுளாகத் தியானிக்கட்டும். மிருகங்களைப்பற்றிய நூல் கற்றோர் சிங்கத்தையும், மரங்களைப்பற்றிய நூல் கற்றோர் அரசமரத்தையும், பறவைகளைப்பற்றிய நூல்கற்றோர் கருடனையும், நீரில் வாழும் ஜந்துக்களைப்பற்றிய நூல் கற்றோர் முதலையையும் கடவுளாகத் தியானிக்கட்டும் என்கின்றார். அவர் கூறும் முழுமையும் அறிய விரும்புவோர் பகவத்கீதையில் பத்தாவது அத்தியாயத்தில் 10-வது ச்லோகம் முதல் 41-வது ச்லோகம் வரையில் படிக்கவும்.

521. இதனை அடிப்படையாகக்கொண்டு ஆதிசங்கராசார்யர் அவர்கள் செய்த தொண்டு யாது?

அவர்கள் ஷண்மதத்தை ஸ்தாபித்தனர்.

522. ஷண்மதம் என்றதாற் குறிக்கப்படுகின்றவை யாவை?

சைவம், வைஷ்ணவம், சாக்தம், ஸௌரம், காணுபத்யம், கௌமாரம் என்பன.

523. சைவம் என்றால் என்ன?

சிவபிரானையே வழிபடுகடவுளாய்க் கொண்டு அவர்க்குச் செய்யும் வழிபாடு சைவத்தின்பாற்படும்.

524. வைஷ்ணவம் என்றால் என்ன?

திருமாலையே சங்கசக்ரகதாபாணியாய் பீதாம்பரராய் லக்ஷ்மீஸமேதராய் வழிபடுதல் வைஷ்ணவத்தின்பாற்படும்.

525. சாக்தம் என்றால் என்ன?

பார்வதிதேவியைக் காமாக்ஷி முதலிய வடிவமாக வழிபடுதல் சாக்தம் ஆகும்.

526. சௌரம் என்றால் என்ன ?

ஸூர்யனையே உலகத்தை ஆக்கியவராகவும், போற்றுபவராகவும், அழிப்பவராகவும் வழிபடுதல் சௌரமாகும்.

527. காணுபத்யம் என்றால் என்ன ?

சிவபிரானின் முதல் திருமகனைக் கணங்கட்குத் தலைவராக (கணபதி) வழிபடுதல் காணுபத்யம் ஆகும்.

528. கௌமாரம் என்றால் என்ன ?

சூரபன்மாவை அழித்த குமரக்கடவுளை வழிபடுகடவுளாகக் கொள்ளுதல் கௌமாரம் ஆகும்.

529. இவ்வாறும் ஒரே சமயத்தின் உட்பிரிவுகளா ?

இவை ஆறும், பகவத்கீதையையும் அதற்கு ஆதாரமாயுள்ள வேதப்பகுதியையும் பிரமாணமாகக் கொண்டமையின், ஒரே சமயத்தின் உட்பிரிவுகளே ஆகும்.

530. இவ்வாறினையும் தனிப்பட்ட முறையில் அனுசரிப்பதில் வேறுபாடு உண்டா ?

இவ்வறுவகைப்பட்ட கடவுளை உபாஸிப்பதில் மாறுபாடு இருப்பினும், வழிபாட்டால் அடையும் பயனில் மாறுபாடு இல்லை.

531. அஃது எப்படி ?

எல்லாம் நம்மைப் பரம்பொருளின் திருவடியில் சேர்ப்பிப்பதால் தான்.

532. சைவத்தைத் தென்னாட்டில் பரவச்செய்தவருள் சிறந்தார் யார் ?

அப்பர், சுந்தரர், ஞானசம்பந்தர், மாணிக்கவாசகர் இந்நால்வரும் ஆவர்.

533. அவர் வேதத்தையே பிரமாணமாகக் கொண்டனரா ?

கொண்டனர்.

534. அதற்குச் சான்று யாது ?

வேதத்தின் பொருளானாய் (திருவையாறு),<br>
வேதங்கள் நான்கும் அங்கம் பண்ணினார் (திருவிடைமருது)<br>
முதலிய அப்பர்வாக்கும்,<br>
அங்கமொ ராறேடை வேள்வியான அருமறை நான்கும் (திருக்கற்குடி)<br>
முதலிய ஞானசம்பந்தர்வாக்கும் அதுபோன்ற ஏனையர் வாக்கும் சான்றாகும்.

535. வைஷ்ணவத்தைத் தென்னுட்டில் பரவச் செய்தவர் யாவர்?

நாலாயிரதிவ்யபிரபந்தம் பாடிய ஆழ்வார்கள் ஆவர்.

536. அவர் வேதத்தைப் பிரமாணமாகக் கொண்டதற்குச் சான்று யாது?

சந்தோகா பௌழியா தைத்திரியா
சாமவேதியனே நெடுமாலே (பெரியதிரு. 7, 7, 2)
பண்புடைவேதம் பயந்தபரனுக்கு
(திருவாய். 6, 6, 5)
அங்கமாறும் வேதம் நான்கும் ஆகின்று
(திருச்சந்த. 15)

முதலிய சான்றோர்வாக்கே சான்று.

537. சாக்தம் வேதத்தைப் பிரமாணமாகக் கொண்டதற்குச் சான்று யாது?

மஹாபாரதத்தில் தர்மபுத்திரரும் அர்ஜுனனும் செய்த துர்க்காஸ்தவமும், மூகர் இயற்றிய ஐதம்பர்யம் சகாஸ்தி நியமாநாம் (காஞ்சிகாமகோடிபீடத்தில் வேதங்களின் கருத்தாய் விளங்குகிருள் காமாக்ஷியம்மை) என்ற தொடரும் ஆகும்.

538. ஸௌரம் வேதத்தைப் பிரமாணமாகக்கொண்டது என்பது எதனுல் அறியப்படும்?

இராமாயணத்தில் ராமர் ஜபித்த ஆதித்யஹ்ருதயத்தாலும், எல்லோரும் ஸந்த்யோபாஸனத்தில் கூறும் த்ரயீமயாய (மூன்று வேதஸ்வரூபிக்கு) என்ற சொல்லாலும் விளங்கும்.

539. காணுபத்யம் வேதத்தைப் பிரமாணமாகக் கொண்டது என்பதற்குச் சான்று யாது?

சிரந்தனேக்திபாஜனம் (எக்காலத்துமுள்ள வேதவாக்கின் துதிக்குப் பாத்திரம்) என கணேசபஞ்சரத்னத்திற் காணப்படும் தொடரே சான்று.

540. கௌமாரத்தைத் தென்னுட்டில் பரவச்செய்தவர் யார்?

பண்டையகாலத்தில் நக்கீரர் முதலியோரும் பிற்காலத்தில் அருணகிரிநாதரும் ஆவர்.

541. அது வேதத்தை ஆதாரமாகக் கொண்டதற்குச் சான்று யாது?

நக்கீரர் இயற்றிய திருமுருகாற்றுப்படையும், வேதமந்திரஸ்வரூபாய நமோ நமோ என்ற அருணகிரிநாதர் வாக்கு முதலியனவும் சான்றாகும்.

542. நாயன்மார், ஆழ்வாராதிகள், ஆதிசங்கராசாரியார் முதலியோர் ஷண்மதத்தை ஸ்தாபித்ததற்குக் காரணம் யாது?

அவரவர் காலத்தில் ஜைநபுத்தமதங்கள் நாட்டில் ஓங்கி வளர, நாட்டுமக்களுள் பெரும்பாலோர் அவற்றுள் ஈடுபட, அதனைத் தடுத்து, அவரவர் மனம் ஈடுபடும் கடவுளுருவத்தை அவரவர்க்குப் போதித்து, அவரவர் அம்மதத்தில் ஈடுபடுமாறு செய்து வைதிகமதத்தை நாட்டில் நிலைத்துநிற்குமாறு செய்யவேண்டும் என்ற விருப்பமே அதற்குக் காரணம் ஆகும்.

543. சைவத்திற்கும் வைஷ்ணவத்திற்கும் முரண்பாடு உண்டா இல்லையா?

திருமாலை உபாஸித்தால் தன்னை உபாஸித்ததாகவே ஆகும் எனச் சிவபிரானும், சிவபிரானை உபாஸித்தால் தன்னை உபாஸித்ததாகவே ஆகும் எனத் திருமாலும் பல்லிடங்களில் மஹாபாரதத்திற் கூறப்பட்டமையாலும், அக்காரணம்பற்றி அவர்களுக்குள் அப்போது அங்காங்கிபாவம் இல்லாமையாலும், அக்காலத்தில் அவ்விரண்டற்கும் முரண்பாடு இல்லை என்பது திண்ணம்.

---

## அத்தியாயம்—9

### க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் இவர்தம் தர்மங்கள்

544. க்ஷத்திரியனுக்கு உபநயனம் எப்போது செய்யவேண்டும்?

கர்ப்பத்திலிருந்து பதினோராவது வயது முதல் இருபத்திரண்டாவது வரையில் க்ஷத்திரியனுக்கு உபநயனம் செய்யலாம்.[1]

545. பிரும்மசாரியாய் இருக்கும்போது அவன் யாது செய்ய வேண்டும்?

வேதம், அங்கங்கள், தர்மசாஸ்திரங்கள், உபவேதங்கள் புராணங்கள் இவற்றைப் படிக்கவேண்டும்.

546. ஏன்?

வேதங்களின் அத்யயனம் அவனுக்கு விதிக்கப்பட்டிருக்கின்றதால், அதனைச் செய்யவேண்டும். ராஜ்யத்தை ஆளுவதற்கு ஏனைய பயன்படுகின்றமையால் அவற்றையும் படிக்கவேண்டும்.[2]

547. அரசன் கிருஹஸ்தாச்ரமத்தில் அனுஷ்டிக்கவேண்டியவை யாவை?

யாகம், தானம் இவற்றைச் செய்தலும், பிராணிகள் எல்லாவற்றையும் ரக்ஷித்தலும்.[3]

548. பிராணிகள் எல்லாவற்றையும் ரக்ஷித்தல் என்பதை விளக்குமின்.

வேதத்தைக் கற்ற பிராம்மணர்க்கு அன்னம் முதலியவற்றை யளித்தல்,[4] பிழைப்பிற்குத் தக்க வேலைகளைச் செய்ய ஆற்றலில்லாத எல்லா மக்கட்கும் அன்னம் அளித்தல்,[5] லோகோபகாரிகளான வைத்தியர்களைப் போற்றுதல்[6], பகைவர் நாட்டை எதிர்ப்பின் படைகளுடன் போர்க்குச் சென்று[7] முன்வைத்த காலைப்பின்

1. एकादशद्वाशयो: क्षत्रियवैश्ययो: (गौ. ध.) 1, 13)
   द्वाविंशते राजन्यस्य (गौ. ध. 1, 15)
2. तस्य च व्यवहारो वेदो धर्मशास्त्राण्यङ्गान्युपवेदा: पुराणम् (11, 21)
3. द्विजातीनामध्ययनमिज्या दानम् (9, 1)
   राज्ञोऽधिकं रक्षणं सर्वभूतानाम् (9, 7)
4. बिभृयाद् ब्राह्मणान् श्रोत्रियान् (9, 9)
5. निरुत्साहांश्चाब्राह्मणान्
6. उपकुर्वाणांश्च
7. चर्या च रथधनुर्भ्याम् (10, 14)

வைக்காது போர் செய்து[1] தர்மப்படி எதிர்க்கத்தகாதவரை எதிர்க்காது. போரில் வெற்றிபெறுதல்[2] முதலியன ரக்ஷித்தல் என்பதற்கு விளக்கம் ஆகும்.

549. தர்மப்படி யாரை எதிர்த்தல் தகாது?

குதிரையை யிழந்தவனையும், ஒடிந்த தேரையுடையவனையும், தேர்ப்பாகனில்லா வீரனையும், ஆயுதமிழந்த வீரனையும், கைகூப்பினவனையும், தலைவிரிந்தோனையும், அப்புறம் பார்ப்போனையும், உட்கார்ந்திருப்போனையும் மலை, மரம் இவற்றில் ஏறினவனையும், நான் தூதன் நான் பிராம்மணன் என்போரையும், மாட்டைப்போல் ஒலிப்போனையும் எதிர்த்தல் தகாது.

550. அரசர்க்குப் பணம் வரும் வழி யாது?

நிலமுடையோர், வியாபாரஞ் செய்வோர் இவர்களால் கொடுக்கப்பட்ட வரியும்[3], நிதிகளிலிருந்து கிடைக்கும் பணமும், போரில் அரசன் சென்று வெற்றி பெறின் அங்குக் கிடைக்கும் பணத்தில் ஒரு பகுதியும் அரசரைச் சேர்ந்தவை.

551. க்ஷத்திரியர் பணம் சம்பாதிப்பது எப்படி?

அவர் சுயநலம் கருதாது போருக்குச் செல்லின் அரசர் அவரைப் போற்றவேண்டும்.

552. அரசர் எப்போது வானப்பிரஸ்தநிலையை அடைந்தனர்?

அவர்க்குப் பிறந்த மகன் ராஜ்யத்தை ஆளச் சக்தி வாய்ந்தவுடன் அரசர் வானப்பிரஸ்தநிலையை அடைந்தனர்.

553. வைச்யனுக்கு உபநயநம் எப்போது செய்யவேண்டும்?

கர்ப்பத்திலிருந்து பன்னிரண்டாவது வயதுமுதல் இருபத்துநான்கு வயதிற்குள் உபநயநம் செய்யவேண்டும்.

554. பிரும்மசாரியாய் இருக்கும்போது அவன் யாது செய்யவேண்டும்?

1. सङ्ग्रामे संस्थानमनिवृत्तिश्च (10, 15)
2. अन्यत्र व्यश्वसारथ्यायुधकृताञ्जलिप्रकीर्णकेशपराङ्मुखोपविष्टस्थलवृक्षारूढगोब्राह्मणवादिभ्यः (10, 17)
3. राज्ञे बलिदानं कर्षकैः ... (10, 23)
पशुहिरण्ययोरप्येके पञ्चाशद्भागः (10, 24)
विंशतिभागश्शुल्कः पण्ये (10, 25) ......

வேதாத்யயனம் செய்வதோடு அவனது தொழிலிற்குப் பயன்படும் நூல்களையும் அவன் கற்கவேண்டும்.

555. அவன் கிருஹஸ்தாச்ரமத்தில் யாது செய்யவேண்டும்? யாகம், தானம் இவற்றைச் செய்யவேண்டும்.

556. அவனுக்குப் பணம் சம்பாதித்தற்கு வழி யாது?

உழவுத்தொழில், வியாபாரம், ஆடுமாடு வளர்த்தல் பணத்தை வட்டிக்கு விடுதல் இவை வைசியன் பணம் சம்பாதித்தற்கு வழி ஆகும்.[1]

557. சூத்திரன் எவ்வாறு பணம் சம்பாதிப்பது?

முற்கூறப்பட்ட மூவர்க்கும் ஸஹாயமாயிருத்தலாலும் சில்பவிருத்தியாலும் சூத்திரன் பணம் சம்பாதிக்கலாம்[2].

558. சூத்திரன் செய்யவேண்டிய கர்மாக்கள் யாவை?

சிராத்தங்களைச் செய்யவேண்டும் எனக் கௌதமரும் பாகயக்ஞம் முதலியவற்றைச் செய்யலாம் என ஏனையோரும் கூறுவர்.[3] இவர் வைச்வதேவத்தில் தேவதையை நான்காம் வேற்றுமையில் நினைத்து நமோ நம: என்பதைச் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

---

1. वैश्यस्याधिकं कृषिवणिक्पशुपाल्यकुसीदम् (10, 48)
2. परिचर्या चोत्तरेषाम् (10, 56)

   एवं च वृत्त्यर्थिन एव परिचर्या नावश्यं सर्वस्येति सिद्धम् (10, 57 मस्करिभाष्यम्)
3. श्राद्धकर्म (2, 1, 54) पाकयज्ञैः स्वयं यजेतेत्येके (2, 1, 47) अनुज्ञातोऽस्य नमस्कारैः (2, 1, 66)

# அத்தியாயம்—10

## உபஸம்ஹாரம்

559. வர்ணம், ஆச்ரமம் இவற்றின் பிரிவுகளால் நாம் அறிவது யாது?

உலகத்துமக்கள் எல்லோரும் ஒரே வகையான மனப்பான்மையோடு இரார். அவரும் ஒருவயதில் இருந்தவாறே மற்றொரு நிலையிலும் இரார். அக்காரணம் பற்றி அந்தந்த நிலையில் அவரவர் லோகக்ஷேமத்தைக் கருதிக் கர்மாக்களைச் செய்யவேண்டும் என்பதே வர்ணாச்ரமப்பிரிவின் கருத்து.

560. ஆக வர்ணாச்ரமதர்மத்தால் எதிர்பார்க்கப்படுவது யாது?

ஒரு மனிதனின் எல்லா அங்கங்களும் தத்தம் வேலையை முறை பிறழாமற் செய்து தாம் குறைவற்றிருந்து தமக்கு அங்கியான ஜீவனை மகிழ்விப்பதுபோன்று, ஒவ்வொரு வர்ணத்தாரும் ஒவ்வொரு ஆச்ரமத்தாரும் தத்தம் கடமைகளை நன்கு செய்து, தாமும் வாழ்ந்து தமக்கு அந்தர்யாமியான கடவுளை மகிழ்விப்பதுதான் வர்ணாச்ரமதர்மத்தின் நோக்கம். அக்காரணம்பற்றியே ஈசாவாஸ்யோபநிஷத்து பின்வருமாறு கூறுகின்றது :- இவ்வுலகு கடவுளால் வியாபிக்கப்பட்டது. தியாகபூர்வகமாய் இனிது வாழ்க. பிறர் சொத்துக்கு ஆசைப்படாதிருக்க. நூறு ஆண்டு பயனை எதிர்பாராது உழைக்க விரும்புக. கர்மபலன் உன்னை அண்டாது.

சுபமஸ்து.

திருச்சிராப்பள்ளி யுனைடெட் பிரிண்டர்ஸ் லிமிடெட், திருச்சி-2

இந்நூல் கிடைக்கும் இடம்:—

காரியதரிசி

ஸ்ரீ அமரபாரதி பரீக்ஷாஸமிதி

சங்கராசார்யர் மடம்

திருவானைக்காவல் P. O.,

திருச்சிராப்பள்ளி-5.

AMARABARATHI,
THIRUVANMIYUR.
MADRAS-41.